# பாஞ்சாலி சபதம்

## ஒரு நோக்கு



பேராசிரியர்
டாக்டர் ந. சுப்புரெட்டியார்

# பாஞ்சாலி சபதம்

## ஒரு நோக்கு

பாரதி நூற்றாண்டு விழா வெளியீடு

பேராசிரியர்

டாக்டர் ந. சுப்புரெட்டியார்

சர்வோதய இலக்கியப் பண்ணை

32/1, மேல வெளிவீதி மதுரை-625 001

# பாஞ்சாலி சபதம்

## ஒரு நோக்கு

### பாரதி நூற்றாண்டு விழா வெளியீடு

பேராசிரியர்

**டாக்டர் ந. சுப்புரெட்டியார்**

*தமிழ்ப் பேராசிரியர் - துறைத்தலைவர் (ஓய்வு)*

*திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி.*

**சர்வோதய இலக்கியப் பண்ணை**

32/1 மேல வெளிவீதி மதுரை-625 001

முதற்பதிப்பு—அக்டோபர் 2, 1982

© டாக்டர் எஸ். இராமலிங்கம்
(ஆசிரியரின் முதல் மகன்)

விலை: ரூ 10-00

SARVODAYA ILAKKIYA PANNAI
32/1 West veli St, Madurai-625 001

---

Printed at :
Novel Art Printers
137, Jani Jan khan Road,
Madras-600 014; Phone 82731

# நூல்முகம்

ஆத்திசூடி, இளம்பிறை யணிந்து
மோனத் திருக்கும் முழுவெண் மேனியான்
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்;
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்;
ஏசுவின் தந்தை; எனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துண ராது
பல்வகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே; அதனியல் ஒளியுறும் அறிவாம்;
அதனிலை கண்டார் அல்லலை அகற்றினார்;
அதனருள் வாழ்த்தி அமரவாழ்வு எய்துவோம்.[1]

—பாரதியார்

'பாஞ்சாலி சபதம்' என்ற இச் சிறு காவியம் பாரதியாரின் சுவை மிகுந்த அற்புதப் படைப்பு. ஓதற் கெளிதாய் இருந்தாலும் சில பகுதிகள் உணர்தற்கரியனவாயும் சிந்தைக்கு விருந்தாகவும் இருப்பதை இதனை ஆழ்ந்து கற்போர்தாம் அறியமுடியும். கல்விச் செருக்குடைய புலவர்கள் களிக்கும் கற்பனை முறைகளையும் அணிகளையும் கையாண்டு —ஆனால் எளிய சொற்களையும் சாதாரண மக்களின் பேச்சுகளில் காணப்பெறும் சொற்களையும் பயன்படுத்தி— சுவை மிகுந்த ஓர் அரிய சிறு காவியத்தைப் படைத்ததில் பாரதிக்கு நிகர் பாரதிதான் என்பதைக் காவியத்தை ஊன்றிப் படித்துத் துய்ப்போர்தாம் அறிதல் முடியும்; உணர்ந்து தெளிதலும் இயலும்.

வானொலியிலும் தொலைக் காட்சிகளிலும் இக்காவியத்தைச் கூட்டியும் குறைத்தும் ஒலி/ஒளி பரப்பப்பெற்றபோதிலும், பல்கலைக் கழகப் பாடத் திட்டத்தில் இக்காவியம்

---

1. புதிய ஆத்திசூடி-காப்பு (பரம்பொருள் வாழ்த்து).

இடம் பெற்ற போதிலும் பாரதியின் புலமையையோ காவியத்தின் சுவையையோ பெரும்பாலான மக்கள் உணர்ந்தவர்களாகத் தெரியவில்லை. சுமார் கால் நூற்றாண்டாக என் அரிய நண்பர் அமரர் திருலோக சீதாராம் அவர்கள் இதனை ஓரங்க நாடகத்தை ஒருவரே நடிப்பதுபோல் பாடுகின்ற வாய் தேனூறும் முறையில்-இலக்கிய ரஸம் வாயினின்றும் சொட்டும் முறையில் பல்வேறு இடங்களில் பாடிப்பாடிப் பரப்பினாலும் அதனைக் கேட்கும் கூட்டம் அவ்வப்போது மகிழ்வதுடன் சுவை முடிந்து விடும்; அதன்பிறகு தொடர்ந்து ஒருவரும் சுவைப்பதில்லை; பிறரிடமும் எடுத்துக் கூறுவதுமில்லை. கல்லூரி, பல்கலைக் கழகங்களில் கற்பிப்போரும் இதனைத் தக்க முறையில் பயிற்றுவதுமில்லை; பெரும்பாலான மாணக்கர்கள் இதன் சுவையை உணர்ந்து துய்ப்பதாகவும் தெரியவில்லை.

'பாரதியும் பட்டிக் காட்டானும்' என்ற கவிதையைப் படைத்த கவிமணியின் தொண்டு பாரதியாரைத் துய்ப்பதற்கு ஒருவழி காட்டியாக அமைந்துள்ளது என்பதற்கு இரு வேறு கருத்துகள் இருக்க முடியாது. 'பாஞ்சாலி சபதத்தைப் பண்ணோடு பாடினால் கேட்போர் கிறுகிறுத்துப் போவர்; அந்தக் கிறுக்கில் இலக்கியச் சுவையின் போதை ஏறுவதற்கும் குறையிராது; கள்வெறி கட்குடியர்களை மேலும் மேலும் கட்குடியில் கொண்டு செலுத்துவதுபோல் இந்தப் 'போதை' இலக்கியத்தை—குறிப்பாகப் பாரதியின் கவிதைகளை—அநுபவித்துப் படிப்பதில் கொண்டு செலுத்தும் என்பதற்கு ஐயமில்லை.

அன்னை 'பாஞ்சாலி—சபதம்'
அறைதல் கேட்டேனடா!
முன்னைக் கதையெல்லாம்—கண்ணின்
முன்நடந்ததடா!

என்ற பட்டிக் காட்டானின் அநுபவம் ஏற்பட்டால்தான் படிப்போர் இக்காவியத்தைச் சுவைத்தவர்கள் ஆவார்கள். அப்படி அநுபவம் ஏற்பட்டவர்கள் எத்துணை பேர் இருக்க முடியும்?

பல ஆண்டுகளாகப் 'பாஞ்சாலி-சபதத்தை'ச் சுவைத்து மகிழ்ந்தவன் யான். நான் சுவைத்த முறைகளை யெல்லாம் —நான் பெற்ற அநுபவத்தை யெல்லாம்—பாரதியாரின் நூற்றாண்டில் எழுத்து வடிவத்தில் அமைக்க முயன்றுள்ளேன் என் முழு அநுபவமும் இந்த நூலில் வெளிவந்ததா என்பது ஐயமே ஏதோ முயன்றுள்ளேன். மாம்பழத்தின் சுவையை அதைப்பற்றிய கட்டுரையொன்றினைப் படித்து உணர முடியாது. அந்த மாம்பழத்தைச் சுவைத்து மகிழ்ந்தால் தான் சுவை முழுவதும் வெளிப்படும். அங்ஙனமே, இக்காவியத்தை விருப்புடன் படித்துத் துய்ப்பவர்களே இதன் முழு அநுபவத்தைப் பெறுதல் இயலும்.

என் எழுத்து வடிவம் 'அச்சு வடிவம்' பெறுமா என்ற ஐயம் அடிக்கடித் தோன்றிக் கொண்டே இருந்தது. ஒருவர் வெளியிட ஒப்புக் கொண்டார்; கொட்டுவாயில் கைவிரித்தார்; மற்றொருவர் என் கடிதத்திற்கு 'மௌனம்' சாதித்து விட்டார். ஏதோ ஒரு நிமித்தத்தின்பொருட்டு மதுரை செல்லும் வாய்ப்பு இருந்தது. அன்னை மீனாட்சியின் தரிசனம் வாய்த்தது. அவள் அருளால் 'சர்வோதயம்' தென்பட்டது. 'சர்வோதய இலக்கியப் பண்ணை' இந்நூலை வெளியிட உவப்புடன் ஒப்புக் கொண்டது. பண்ணையாருக்கு என் மனமுவந்த நன்றி என்றும் உரியது.

இந்நூலை அழகுற அச்சிட்டு உதவிய நாவல் ஆர்ட் அச்சகத்தினருக்கு என் நன்றி கலந்த அன்பைப் புலப்படுத்திக் கொள்கின்றேன்.

இச்சமயத்தில் பாரதியாரின்,

'செய்யும் கவிதை பராசக்தி
யாலே செயப்படுங்காண்'[2]

'பாட்டினிலே சொல்லுவதும்
அவள் சொல் லாகும்'[3]

என்ற வாக்குகளைச் சிந்திக்கின்றேன். பாரதியார் கருதுவது போல் இந்நூலை யான் எழுதி வெளியிட்டதற்கு என்னுள்ளே இருக்கும்திருவேங்கட முடையானேஆவான். அவனே எனக்கு நோயற்ற நிலையையும் எல்லா நலன்களையும் ஈந்து என்னை இயக்கி நன்னெறிப் படுத்தி வருபவன். அவனே பாரதியார் வழிபடும் சக்தியாகவும் இருந்து வருகின்றான்; அவனை மனம், மொழி. மெய்களால் வழுத்தி இறைஞ்சி வணங்கு கின்றேன்.

நாரண னென்று பழவேதம் — சொல்லும்
நாயகன் சக்தி திருப்பாதம்;
சேரத் தவம் புரிந்து பெறுவார் — இங்கு
செல்வம் அறிவு சிவபோதம்.[4]

சென்னை-600040
அக்டோபர் 2, 1982

**ந. சுப்பு ரெட்டியார்.**

---

2. வி.நா.மா. 26
3. பேதை நெஞ்சே - 5
4. தோ.பா: 23 சக்தி விளக்கம் - 4

# உள்ளுறை

நூல் முகம் iv
உள்ளுறை vii

| இயல் | | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | அறிமுகம் | 1 |
| 2. | தமிழில் காவியங்கள். | 8 |
| 3. | கதைக் கரு | 20 |
| 4. | காவியத்தின் ஒருமைப்பாடு | 33 |
| 5. | காவியத் தலைவி: திரௌபதி | 40 |
| 6. | காவியத்தின் எதிர்த்தலைவன்: துரியோதனன் | 51 |
| 7. | பிற காவிய மாந்தர்கள் | 62 |
| 8. | தெய்விகக் கூறுகள் | 100 |
| 9. | காப்பிய நடை | 105 |
| 10. | காவியத்தில் உருக்காட்சிகள் | 118 |
| 11. | காவியம் உணர்த்தும் உண்மை | 129 |


## பின்னிணைப்புகள்

| | | |
| --- | --- | --- |
| 1. | பயன்பட்ட நூல்கள் | 147 |
| 2. | பொருட் குறிப்பு அகராதி | 149 |

# அறிமுகம்

நமக்குத் தொழில் கவிதை
நாட்டிற் குழைத்தல்
இமைப் பொழுதும் சோராது
இருத்தல்[1]

என்று கூறினவர் பாரதி. 'இமைப்பொழுதும் சோராதிருத்தல்' என்பதுதான் இப்பாடலின் உயிர்நாடி. சோர்ந்தவர்கள் யாருக்கு என்ன செய்ய முடியும்? தமக்குத்தான் ஏதாவது செய்து கொள்ள முடியுமா?

ஏதோ ஒரு நல்ல நேரம். அது தமிழ் மொழி வளர்ச்சிக்கு நல்ல நேரமாய் விட்டது. புதிய பாணியில் காவியம் ஒன்று சமைத்து தமிழ் மொழியை வளப்படுத்த வேண்டும் என்று கருதுகின்றார் கவிஞர்; அதன் தொய்ந்து போன நிலைக்கு உயிர் ஊட்ட வேண்டும் என்று சிந்திக்கின்றார். தாம் படைக்கப் போகும் காவியம் எப்படியிருக்க வேண்டும் என்பதை அவரே கூறுகின்றார்- ''எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்துகொள்ளக் கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்

1. தோத். பாக்கள்-1.விநா. நான்மணி மாலை-25

மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ள நயங்கள் குறைவு படாமலும் நடத்துதல் வேண்டும்''[2]

இந்த நோக்கத்தைப் பாஞ்சாலி சபதம் முழுமையாக நிறைவேற்றி வைத்து விட்டது என்றே கருதலாம். ''தமிழ் ஜாதிக்குப் புதிய வாழ்வு தரவேண்டுமென்று கங்கணங் கட்டி நிற்கும் பராசக்தியே என்னை இத்தொழிலிலே தூண்டினாளாதலின், இதன் நடை நம்மவருக்குப் பிரியந் தருவதாகும் என்றே நம்புகிறேன்'' என்று தம் முகவுரையையும் தலைக் கட்டுகின்றார்.

பாட்டினிலே சொல்லுவதும் அவள்சொல்லாகும்!
பயனன்றி உரைப்பாளோ? பாராய் நெஞ்சே!
கேட்டது நீ பெற்றிடுவாய், ஐய மில்லை;
கேடில்லை தெய்வமுண்டு, வெற்றியுண்டு.[3]

என்று கூறினவரல்லவா? தாம் இஷ்ட தெய்வமாகக் கொள்ளும் சக்திதேவியின்மீது எவ்வளவு ஊற்ற மிருந்தால் இத்தகைய நம்பிக்கை ஒளி தோன்றி யிருக்க வேண்டும்?

திருவாய்மொழியை அருளிய நம்மாழ்வார்,

என் சொல்லால் யான் சொன்ன
இன்கவி என்பித்து
தன் சொல்லால் தான் தன்னைக்
கீர்த்தித்த மாயன்.[4]

2. பாஞ்சாலி சபதத்துக்கு பாரதி எழுதிய முகவுரை (தொடக்கம்)
3. தோத். பாக். 27. பேதை நெஞ்சே-5
4 திருவாய் 7.9.2

இன்கவி பாடும்
 பரம கவிகளால்
தன்கவி தான்தன்னைப்
 பாடுவி யாதுஇன்று
நன்கு வந்தென்
 னுடன்ஆக்கி என்னால்தன்னை
வன்கவி பாடும்என்
 வைகுந்த நாதனே[5]

என்பனபோன்ற பாசுரங்களால் வைகுந்த நாதனே தன்னுள் இருந்து கொண்டு தன்னைப் பாடி அப்பாசுரங்களை 'நம் மாழ்வார் பாசுரங்கள்' என்று உலகோர் கருதுமாறு செய்து கொண்டான் என்று கூறுவதை நாம் அறிவோம். பாரதியாரும் இதை நினைந்து பராசக்தியே தன்னுள் இருந்து கொண்டு பாடினாள் என்று கூறினாரோ என்று நினைக்கத் தோன்றுகின்றது.

இன்னொரு பேராசிரியரின் கருத்தும் ஈண்டு நம் நினைவிற்கு வருகின்றது. "மகா கவிகள் எல்லோரும் தத்துவ போதனம் செய்யும் நோக்கத்துடன் காவியம் எழுதுகிறார்கள்; அவ்விதம் எழுதும்பொழுது கவிகளில் சிலர் ஒரே விஷயத்தை அதிக மாறுபாடில்லாமல் கூட எழுதி விடலாம் அவர்களுக்குத் தெரியாமலேயே ஒருவர் கூறிய விஷயத்திற்கும் மற்றொருவர் கூறிய விஷயத்திற்கும் நெருங்கிய ஒற்றுமை கூட ஏற்பட்டு விடலாம். அப்படி இருப்பினும் அவர்கள் ஒருவரைப் பார்த்து ஒருவர் திருடி எழுதியதாகக் கருதுவது சரியல்ல. ஆனந்த வர்த்தனர் தமது த்வன்லோகத்தில் 'மேதாவிகளின் மேதைத் தன்மை ஒன்றுக்கொன்று ஒத்திருக்கக்கூடும்.[6] அதற்காக அவர்களிடம் குறை கூறுவது

5. திரு. 7.9.6
6. Great men think alike என்ற ஆங்கிலக் கூற்றும் நம் நினைவிற்கு வருகின்றது.

சரியல்ல' என்று உரைத்துள்ளார். இதிலிருந்து கவிஞர்கள் உண்மைத் தத்துவத்தை உணர்த்தவே வந்தவர்கள், சாதாரணக் கவிஞர்களைக் குறை கூறுவதைப்போல் 'மகா கவிஞர்களைத் தூற்றுவது சரியான முறையல்ல என்பதையும் ஆனந்த வர்த்தனர் எடுத்துக் காட்டுகின்றார்''.[7]

இந்தக் கூற்றையும் அடிப்படையாகக் கொண்டு பாஞ்சாலி சபதத்தை நோக்குதல் வேண்டும். அவர்தம் பிற கவிதைகளையும் காணல்வேண்டும்.

முன்னோர் மொழிபொருளே
யன்றி அவர்மொழியும்
பொன்னேபோற் போற்றுவம்[8]

என்ற நன்னூலார் கூறும் மரபும் இதற்கு வழிகாட்டியாக அமையும்.

காவியப் பொருள்: ஒரு காவியத்திற்குத் தேர்ந்தெடுக்கும் கதைப் பொருள் காவியத்திற்கேற்றவாறு சிறப்புடையதாக அமைதல் வேண்டும். அது வாழ்க்கையின் உயிர் நாடியாக வுள்ள தவிர்க்க முடியாத ஊழ் வலியை உணர்த்தவல்லதாக இருப்பதுடன் மனித அநுபவத்தை யொட்டியும் அமைதல் வேண்டும்; இவ்விடத்தில் ஆங்கிலத் திறனாய்வளார் அபர் குரோம்பி என்பார் கூறியிருப்பது கவனித்தற்குரியது: ''கதை உண்மையானதாக இருத்தல் வேண்டும் இக் கதையை நடுவாக அமைத்து வேறு பல நிகழ்ச்சிகளும் இத்துடன் சேர்ந்து இணைக்கப்பெறலாம். இவை எவ்வளவு சிறந்தவை யாக இருப்பினும் இவை யாவும் முதற்கதையைச் சிறப்பித்து அதன்மீது நம்பிக்கை உண்டு பண்ணக் கூடியதாக இருத்தல் வேண்டும். இவ்விடத்தில் கதையின் உண்மைப் பொருள் என்ன என்பதைப் பரந்த பார்வையால் காணல் வேண்டும்.

7. சுப்பிரமணிய சாஸ்திரியார், வி. எச்: நவரசங்கள் (தினமணி வெளியீடு 1944)
8. நன்னூல்-9

அதாவது, கதை பொது மக்கள் நன்றாக அறிந்து அவற்றில் தோய்ந்ததாக இருத்தல் வேண்டும். மானிட வாழ்க்கையின் உண்மைகள் அடங்கிய ஒரு கட்டுக் கதை—அல்லது புராணக் கதை—காவியத்திற்குச் சிறந்ததாக அமையலாம். ஜூலியஸ் சீஸர் என்ற பெயரை எண்ணும்பொழுதே மக்கள் மனத்தில் எழும் கருத்துகள் யாவும் மக்களுக்கு மிகமிக முக்கியமானவை தாம். அதனால் சாத்தானைக் கருதும்பொழுது மனத்தில் எழும் கருத்துகளும் முக்கியமானவையே. இம் முறையில் சாத்தான் சீஸரைப் போலவே உண்மையான கதை மாந்தன் தான். ஆகவே, மானிட வாழ்வின் அநுபவ சம்பந்தப்பட்ட ஒரு கதையைக் கற்பனை செய்வது கவிஞனொருவனால் சாத்தியப்படக் கூடியதே. அவன் கொள்ள வேண்டிய தெல்லாம் மனித அநுபவமே; ஒவ்வொருவரும் அறிந்து விவாதிக்க முடியாததும், யாவரும் ஒப்புக் கொள்ளக் கூடியது மான வாழ்க்கை அநுபவமே''[9] இந்த முறையில் நோக்கினால் பாரதி எல்லோருக்கும் தெரிந்த ஓர் இதிகாசக் கதையைத் தான் தேர்ந்தெடுத்துள்ளார். இக்கதையின்மூலம் மக்களுக்கு உணர்த்த வேண்டிய ஓர் உண்மைப் பொருள் 'அறம் வெல்லும்; பாவம் தோற்கும்' என்பது.[10] தொடக்கத்தில் தீயவர்கள் வெற்றியடைவதுபோல் காணப்படினும் இறுதியில் நல்லவர்கள்தாம் அறத்தின் பயனை அநுபவிப்பது உறுதி என்பது பாரதி காட்ட வந்த உண்மை.

பாரதியார் பாடல்களில் என்றும் நிலைக்கும் தகுதி பெற்ற ஒரு சிலவற்றுள் 'பாஞ்சாலி சபதம்' என்ற இச்சிறு காவியமும் ஒன்று. 'தொடர்நிலைச் செய்யுள்' என வழங்கப் பெறும் காவியப் படைப்பில்தான் ஒருவரின் புலமை வெளிப்

---

9. Las celles Aberreombie : *The Epic* - பக் 55-56.
10. இந்நூல் இயல்-12 இல் இது விரிவாக விளக்கப் பெறுகின்றது.

படுகின்றது; இப்படைப்பிற்குத்தான் புலமையும் இன்றியமையாததாகின்றது. தமிழில் உள்ள ஐஞ்சிறுங்காப்பியங்கட்கொப்ப இச்சிறு காப்பியத்தை மதிக்கலாம். பாரதியாரின் பெரிய பாடல் இதுவேயாகும். பாரதத்தில் வரும் சூதுப் போர்ச் சருக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது இது. வில்லி பாரதத்தில் இச்சருக்கம் 283 பாடல்களால் விரித்தோதப் பெறுகின்றது.[11] பாரதியார் தம் காவியத்தை 308 பாடல்களால் இயற்றியுள்ளார். இவற்றுள் திரௌபதியை மன்றுக்கு அழைத்து வருமாறு சொல்லியதுபற்றி சகத்தில் உண்டான அதர்மக் குழப்பத்தைக் கூறும் பகுதியும், அவள் துச்சாதனனால் மன்றுக்கு இழுத்து வரப்பெறுவதை நுவலும் பகுதியும் நீண்ட பாடல்களாலானவை. பாரதியார் தம் காவியத்தை வியாசபாரதத்தைத் தழுவி எழுதியதாக அவரே தன் முகவுரையில் கூறுவதால் இதனை வழி நூலாகக் கொள்ளுவதில் தடை இல்லை. இதனால் பாரதியாரின் வடமொழிப் புலமையை ஒருவாறு அறிந்து கொள்ள முடிகின்றது.

பாரதியார்தான் முதன் முதலில் எளிய நடையில் காவியம் படைத்தார் என்பதை மறுத்தற்கில்லை. ஆனால் இந்நடை தமிழுக்குப் புதிதன்று. இதைத் தொடக்கத்தில் காணப்பெறும் நொண்டிச் சிந்து என்ற குறிப்பே மெய்ப்பிக்கின்றது. நொண்டிச் சிந்தும், காவடிச் சிந்தும்[12] தமிழ் மொழிக்குப் புதிதல்ல. பாரதியாரின் காவிய நடை பெரும்பாலும் இவற்றின் நடையை ஒட்டியதாகும். சாதாரண அறிவு படைத்த பொது மக்கட்கு விளங்கும் படியான எளிய

11. வில்லிபாரதம் - பகுதி 2 (ராஜம் பதிப்பு)
12. 'காவடிச்சிந்து' என்ற பெயரை நினைத்தவுடன் அண்ணாமலை ரெட்டியாரும் நினைவுக்கு வருகின்றார்.

பாடல்களை முதன்முதலாகப் பாரதியார்தான் யாத்தார் என்று கூறுவது சிறிதும் பொருந்தாது. நல்ல தங்காள் கதை, அல்லி அரசாணி மாலை, பவளக் கொடி மாலை, ஏணி ஏற்றம் போன்றவைகளும், ஏற்றப் பாட்டு முதலான நாட்டுப் பாடல்களும் நூற்றாண்டுகட்கு முற்பட்டு எழுந்தவையாகும். மேலும், இராமலிங்க அடிகளின் திருவருட்பாக்கள், பட்டினத்தார் பாடல்கள், தாயுமான அடிகளின் திருப்பாடல்கள், தேவாரப் பாடல்கள், ஆழ்வார்களின் திருப்பாசுரங்கள் ஆகிய அனைத்தும் கடுநடையின என்று எவரும் சொல்ல முடியாது. இந் நடையினை ஒரு புடையொத்த பாஞ்சாலி சபதத்தின் நடை எளிமையாகவும் சுருங்கிய சொற்களையும் கொண்டு இலங்குவதால் ஒரு முறை படிக்கும்போதே தெளிவாகி விடுகின்றது; நேரே மனத்தில் ஆழப் பதிந்து விடுகின்றது.

இக்கால மக்கள் சுவைத்தற், கேற்பப் படைத்திருக்கும் பாரதியின் படைப்பு அருமையினும் அருமை. இதனைப் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து இவ் வருமையைப் புலப்படுத்துவது இன்றியமையாததாகின்றது. ஆகவே, பயனுள்ள இவ்வாராய்ச்சியில் நம் பார்வையைச் செலுத்துவோம்.

# தமிழில் காவியங்கள்

ஒரு மொழியின் வளத்தை அம் மொழியிலுள்ள காப்பியங்களே புலப்படுத்தும். பண்டைக் காலந்தொட்டு வளம் மலிந்த நம் தமிழ் மொழியில் அளவிறந்த காவியங்கள் உண்டாயின. காவியங்களை (காப்பியங்களை) இலக்கண நூல்கள் 'பொருள் தொடர்நிலைச் செய்யுட்கள்' என்று குறிப்பிடும். தமிழர்களின் தலைசிறந்த இலக்கணமாகிய தொல்காப்பியத்தில் 'தோல்', 'விருந்து' போன்ற பெயர்களால் குறிப்பிடப்பெறும் காப்பியங்கள் இன்று வழக்காறு அற்றுப் போயின. அவை உரையாசிரியர்கள் காலத்தே வழங்கு வீழ்ந்தமையின் அவர்கள் அவற்றைக் கூறாமல் இலக்கணத்தை விளக்குவதற்குத் தத்தம் காலத்தில் வழங்கிய நூல்களை மேற்கோள்களாகக் காட்டிச் சென்றனர். இன்று நம்மிடையே பயின்று வரும் சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, கம்பராமாயணம், பெரியபுராணம் கலிங்கத்துப் பரணி, பல்வேறு தலபுராணங்கள் போன்ற காப்பியங்களையும், பிற சமய அறிஞர்கள் அண்மைக் காலத்தில் இயற்றிய தேம்பாவணி, இரட்சண்ய யாத்திரிகம், சீறாப் புராணம் போன்றவைகளையும் வரலாற்று வரிசையில் வைத்து நோக்கினால் அவற்றினிடையே உள்ள பொதுத் தன்மை புலனாகும். கி.பி. ஏழாம் நூற்றாண்டுவரையில் தோன்றிய காப்பியங்களில் பெரும்பாலும் அகவல் நடை

(Blank verse) கையாளப்பெற்றிருப்பதையும், அதற்குப் பின்னர் எழுந்த காப்பியங்களில் பாவினங்கள் பயின்று வருவதையும் காணலாம். சிந்தாமணிதான் விருத்த யாப்பில் தோன்றிய முதல் காப்பியம். அதனை யொட்டியே கம்ப ராமாயணம், பெரிய புராணம்போன்ற காப்பியங்கள் விருத்த யாப்பில் எழுந்தன. காப்பிய நடையில் எழுந்த தலபுராணங் களில் ஒன்றிரண்டைத் தவிர அனைத்தும் வெறும் செய்யுட் குவியல்களாகக் காட்சி அளிக்கின்றனவேயன்றி, அவற்றில் கவிதை நயமும் இல்லை; காப்பியச் சுவையும் இல்லை. கிறித்தவக் கவிஞர்களும் இஸ்லாமியப் புலவர்களும் இயற்றியுள்ள காப்பியங்களில் ஓரளவு இவை நன்கு அமைந்துள்ளன. இவர்கள் யாவரும் பழைய முறையினையே கையாண்டுள்ளனர். சிந்தாமணிக்குப் பிறகு எழுந்த காப்பியங்கள் யாவும் அவற்றையே முன்மாதிரியாகக் கொண்டு யாக்கப்பட்டன என்று கூறலாம். கலிங்க நாட்டுப் படையெடுப்பைப் பொருளாகக் கொண்டு தாழிசையால் எழுதப்பெற்ற முதற் காப்பியமான 'கலிங்கத்துப்பரணியை' முன்மாதிரியாகக் கொண்டு பின்னர் எழுதப்பெற்ற பரணி நூல்கள் யாவும் அதனைப் போல் அவ்வளவு சிறப்பாக அமைய வில்லை.

**மேநாட்டுக் காப்பியப் பிரிவு:** மேனாட்டார் காப்பியங் களை இரண்டு வகையாகப் பிரித்துள்ளனர். முதல் வகையைத் தேசியக் காப்பியங்கள் (National or Authentic Epics) என்று குறிப்பிடுவர். பெரும்பாலும் இவை கவிஞனின் நாட்டைச் சார்ந்த ஒரு வீரனின் வீரச் செயல் களையும் வெற்றிச் சிறப்புகளையும் பற்றியே கூறிச்செல்லும். எண்ணற்ற கட்டுக் கதைகள் (Legends) அவ்வீரர்களைச் சுற்றி இயங்கும். கவிஞன் அவற்றிற்குத் தன் காவியத்தில் அழியாத் தன்மையை அளித்து அவற்றினைப் பாதுகாக்கின் றான். இவற்றிற்கு எடுத்துக் காட்டுகளாக இலியத் (Iliad),

நிபுலன்ஜென்லைத் (Nibulengelied), பியோவுல்ஃப் (Beowulf) என்பவற்றைக் குறிப்பிடலாம். இரண்டாவது வகையை இலக்கியக் காப்பியங்கள் (Literary or Artificial Epics) என்று வழங்குவர். பெருங் காப்பியங்களுக்குள்ள பண்புகள் யாவும் இவை கொண்டிலங்கினும் கவிஞன் தன் நாட்டைப் பற்றியோ தன் நாட்டைச் சார்ந்த வீரனொருவனைப் பற்றியோ சிறப்பிக்க வேண்டுமென்ற அக்கறை கொள்வதில்லை. ஏதாவது ஒருபுராணக்கதையிலுள்ள (Mythology) வீரனைக் காப்பியத் தலைவனாகக்கொண்டு காவியத்தைப் படைக்கலாம். மில்ட்டனின் துறக்க இழப்பினை (Paradise Lost) இதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். நம் நாட்டுக் காவியங்களாகிய சிலப்பதிகாரம், கம்பராமாயணம் போன்றவைகள் மேனாட்டு முதல்வகைக் காவியங்களுள் அடங்குமாயினும் அவற்றிற்குத் தனிச் சிறப்புகள் உள்ளன. இவை வெறும் நாட்டினையோ வீரனையோ சிறப்பிக்காது, மன்பதைக்கு இன்றியமையாத, என்றும் அழியாத, உண்மைகளை வழங்கிவரும் இலக்கியக் கருவூலங்கள் என்று சொல்லலாம். மன்பதைக்கு என்றுமே ஒரு கலங்கரை விளக்கம் போன்ற ஒன்றினைப் படைக்க வேண்டும் என்று பல ஆண்டுகள் கனவுகண்டு துறக்க இழப்பு என்ற காவியத்தைப் படைத்த மில்ட்டனைப் போலவே இளங்கோவும் கம்பனும் சாவா இலக்கியங்களைப் படைத்துள்ளனர்.

**பாஞ்சாலி சபதம்** : பாரதி இயற்றியுள்ள ‘பாஞ்சாலி சபதம்’ இருபதாவது நூற்றாண்டில் உருவான ஒரு தமிழ்க் காப்பியம். தருமன் இந்திரப்பிரத்தத்தில் இராசசூயப் பெரு வேள்வி முடித்த பிறகு துரியோதனன் முதலிய கௌரவர்கள் அத்தினபுரத்தில் மண்டபம் ஒன்று சமைத்துப் பாண்டவர் களுக்கு அழைப்பு அனுப்பி அவர்களை வரவழைத்து, வஞ்சகமாகச் சூதுக்கிழுத்து, அவர்களை அவமானப்படுத்திய

கதைப் பகுதியைக் காப்பியப் பொருளாகக் கொண்டு ஆக்கப் பெற்றது. பழைய கதையைக் கையாண்டு அதற்குப் புது உருவமும் புத்துயிரும் கொடுத்துக் காப்பியப் படைப்பு செய்வது கவிஞனின் தனிச் சிறப்பாகும். பழைய கதையைப் புதிய காப்பியமாக வார்ப்பது நாம் நினைப்பதுபோல் அவ்வளவு எளிதல்ல; உயிரொளி வீசும் கவிதா சக்தியைப் பெற்ற பெரிய கவிஞர்களால்தான் அவ்வாறு செய்ய முடியும். விவிலியத்தில் காணப்பெறும் சாத்தானின் வீழ்ச்சியைக் குறித்து அழியாப் புகழுடன் விளங்கும் துறக்க இழப்பு போன்ற காப்பியப் படைப்பும், மேனாட்டு வரலாற்று நூல் களில் காணக் கிடக்கும் ஒரு சில செய்திகளைக் கொண்டு ஜூலியஸ் சீஸர், நாலாம் ஹென்றி, ஐந்தாம் ஹென்றி, இரண்டாம் ரிச்சார்டு போன்ற இறவாத புகழுடைய நாடக, இலக்கியங்களின் படைப்பும் ஒப்புயர்வற்ற ஒரு மில்ட்டன் ஒரு ஷேக்ஸ்பியர் போன்ற பெருங் கவிஞர்களால்தான் ஆக்க முடியும். அதுபோலவே, பாரதியின் படைப்பும் கவிதைச் சுவையுடனும், நாடகப் பண்புகளுடனும், புதிய கருத்துக ளுடனும் இலங்குகின்றது. கிட்டத்தட்ட இரண்டாயிரத்து ஐந்நூற்றுக்கு மேற்பட்ட அடிகளையுடைய 'பாஞ்சாலி சபதம்' காப்பியப் படைப்பில் பாரதியின் சிறந்த வெற்றி யென்று சொல்வது எள்ளளவும் மிகை ஆகாது.

பாரதியின் 'பாஞ்சாலி சபதம்' ஒரு காப்பியமாகுமா? காப்பியத்திற்குரிய இலக்கணம் இதற்குப் பொருந்துமா? எந் தெந்த முறையில் பாரதி தன் திறமையைக் காட்டுகின்றார்? என்பன போன்றவற்றை ஈண்டு ஆராய்வோம். நமது மொழிக் குரிய பெருங்காப்பிய இலக்கணத்தையும் மேனாட் டார் காப்பியங்களைப்பற்றிக் கூறும் கருத்துகளையும் முன் நிறுத்தி ஆராயத் தொடங்குவோம். பெருங்காப்பிய இலக் கணத்தைத் தண்டியலங்காரம்,

பெருங்காப் பியநிலை பேசுங் காலை
வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றினொன்(று)
ஏற்புடைத் தாகி முன்வர இயன்று
நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகித்
தன்நிகர் இல்லாத் தலைவனை யுடைத்தாய்
மலைகடல் நாடு வளநகர் பருவம்
இருசுடர் தோற்றம் என்(று) இனையன புனைந்து
நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழில் நுகர்தல் புனல்விளை யாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியிற் புலத்தல் கலவியிற் களித்தல் என்(று)
இன்ன புனைந்த நன்னடைத் தாகி
மந்திரம் தூது செலவு இக(ல்) வென்றி
சந்தியில் தொடர்ந்து சருக்கம் இலம்பகம்
பரிசசே தம் என்னும் பான்மையின் விளங்கி
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பிக்
கற்றோர் புனையற் பெற்றிய தென்ப.

என்று கூறும் மற்றும்,

கூறிய உறுப்பில் சில குறைந்து இயலினும்
வேறுபா(டு) இன்(று)என விளம்பினர் புலவர்.[2]

என்ற புறநடையும் தரும். மேலும்,

ஒருதிறப் பாட்டினும் பலதிறப் பாட்டினும்
உரையும் பாடையும் விரவியும் வருமே.[3]

என்று காப்பியங்களின் யாப்பைக் குறித்துப் பேசும். உரை நடையும் பாநடையும் விரவி வரும் காப்பியத்தைத் தொல்

---

1. தண்டி - நூற்பா-8.
2. ஷை-9
3. ஷை-11

காப்பியம் 'தொன்மை' என்று குறிம்பிடும். வடநூலார் இதனைச் 'சம்பு' என்று வழங்குவர்.

மேனாட்டு இலக்கிய வரலாற்றைப் பார்த்தால் அங்கும் இந்தப் பெருங்காப்பிய அமைப்பு காலத்திற் கேற்றவாறு மாற்றம் அடைந்துள்ளதைக் காணலாம். மேனாட்டு ஆசிரியர்கள் அனைவருமே ஹோமரையும் வர்ஜிலையும் தமக்கு முன்மாதிரியாகக்கொண்டு காப்பியங்களை இயற்றியுள்ளனர். ஆங்கில மகாகவிஞரான மில்ட்டன் மேற்கூறிய இருவரைப் பின்பற்றியே தமது துறக்க இழப்பினைப் படைத்தாரெனினும் அவருக்கு முன்பிருந்த கவிஞர்களை விடத் தமது காப்பியப் படைப்பால் அழியாப் புகழ் பெற்றார். துறக்க இழப்பின்எதிர்த்தலைவனாகியசாத்தானின் விடாப்பிடியான தீவிரமான மனவேதனை தற்கால மாந்தரின் அறநெறிக் கருத்தினை எடுத்துக் காட்டும்படியாக அமைந்துள்ளது.[4] இதுகாறும் பெருங்காப்பியத் தலைவர்கள் மனிதரில் ஒரு தேவன்போல் (Supehuman) இருந்தனர். ஆனால் மில்ட்டனின் காப்பியத் தலைவன் ஒரு தேவனாகவே இருக்கின்றான். எல்லாக் காலத்திற்கும் பொருந்தும்படியான பல அரிய கருத்துகளைக்கொண்டு காப்பியத்தைப் படைத்துள்ளார் மில்ட்டன். மேனாட்டு அறிஞர்கள் பெருங்காப்பியங்கள் பற்றிக் கூறியுள்ள கருத்துகளை (1) தேர்ந்தெடுக்கும் கதைப் பொருள், (2) நிகழ்ச்சிகளின் புணர்ப்பு, (3) காப்பியத்தின் ஒருமைப்பாடு, (4) கதை மாந்தர்களின் படைப்பு, (5) தெங்விக சம்பந்தமான கூறுகள், (6) காப்பிய நடை என்று ஆறு பகுதிகளில் அடக்கலாம். தண்டியாரின் கருத்துகளையும் இக் கருத்துகளையும் அடிப்படையாகக் கொண்டு பாஞ்சாலி சபதத்தை ஆராய்வோம்.

---

4. Lascelles Abererombie: *The Epic*-பக்.105

தண்டியாரின் கருத்துப்படி நூல் இறைவாழ்த்துடன் தொடங்கப்பெறுதல் வேண்டும். பாரதியார் வேதத்தில் குறிப்பிடப்பெறும் பிரும்மத்தையே வணங்கி நூலைத் தொடங்குகின்றார். வேதத்தில் பிரும்மம் 'ஓம்' என்றே வழங்கப்பெறுகின்றது. இந்தப் 'பிரும்மம்' அங்கு இங்கு எனாதபடி எங்கும் நிறைந்திருப்பதால் 'ஆம்' என்றும் குறிக்கப் பெறுகின்றது. வடமொழியில் 'ஓம்' என்னும் சொல்லுக்கு 'ஆம்' என்ற பொருளும் உண்டு. எவ்விடத்தும் 'இல்லை' யாதலின்றி 'ஆம்' என இருத்தல்பற்றியே வேதத்தில் பிரும்மத்துக்கு 'ஓம்' என்ற திருப்பெயர் கொடுக்கப் பெற்றுள்ளது. தமிழ்க் காப்பியங்களில் பிரும்மத்தைக் காப்பாக அமைத்தது பாரதியார்மேற்கொண்ட புதுமையாகும். அடுத்து, சொல்லின் செல்வியாகிய நாவின் கிழத்தியாம் கலைமகளை வழிபடுகின்றார். 'அறம், பொருள், இன்பம், வீடு' என்ற நாற்பொருள்களில் காவியம் சில அறக்கருத்துகளை தன்னுளே கொண்டிலங்குகின்றது. சூதாடலால் வரும் தீமைகளை எண்ணி அச்செயலைத் தவிர்க்குமாறு திருதராட்டிரன் தன் மகனை வேண்டுகின்றான்; அண்ணன் வாயிலாக துரியோதனனின் கவறாடல் சதியைக் கேட்டதும் விதுரன்,

போச்சுது! போச்சுது பாரத நாடு!
போச்சுது நல்லறம்! போச்சுது வேதம்!
ஆச்சரி யக்கொடுங் கோலங்கள் காண்போம்;
ஐய இதனைத் தடுத்தல் அரிதோ?

என்று கூறி பெருந்துயர் அடைகின்றான். தருமனும் இக்கவறாடல் 'இருமையும் கெடுக்கும் இழி தொழில்' என்கின்றான். மேலும்,

என்றனை வஞ்சித்தென் செல்வத்தைக்கொள்வோர்
என்ற னக்கிடர் செய்பவ ரல்லர்;
முன்னை நின்றதோர் நான்மறை கொல்வார்;
மூது ணர்விற் கலைத்தொகை மாய்ப்பார்;
பின்னை என்னுயிர்ப் பாரத நாட்டில்
பீடை செய்யுங் கலியை அழைப்பார்.[5]

என்று சகுனியிடம் கூறுகின்றான். நூலைப் பயிலும்போது இன்பம்'—இலக்கிய இன்பம்—பயப்பதை உணர்கின்றோம். இந்நூலின் தலைவி பாஞ்சாலி; இவள் 'தன்நிகர் இல்லாத் தலைவி'யாக விளங்குகின்றாள் சிலப்பதிகாரக் கண்ணகி போல.

அத்தினபுரத்தின் வருணனை நூலின் தொடக்கத்தில் காணப்பெறுகின்றது.

அத்தின புரமுண் டாம்; - இவ்
வவனியி லேயதற் கிணையிலை யாம்;
பத்தியில் வீதிக ளாம்;—வெள்ளைப்
பனிவரை போற்பல மாளிகையாம்;

என்று தொடங்கும் வருணனையில் சோலைகள், வாவிகள், வேள்விச் சாலைகள், மந்திர கீதங்கள் முழங்கும் இடங்கள், சாத்திர ஆராய்ச்சிக் கழகங்கள் முதலியவை காட்டப்பெறுகின்றன. தற்கால நிலையை அறிந்து,

சிந்தையி லறமுண் டாம்; - எனிற்
சேர்த்திடுங் கலிசெயும் மறமுமுண் டாம்.

மெய்த்தவர் பலருண்டாம்; - வெறும்
வேடங்கள் பூண்டவர் பலருமுண் டாம்;

5. பா.ச. 1:34: 174

உய்த்திடு சிவஞா னம் -கனிந்
தோர்ந்திடும் மேலவர் பலருண் டாம்;
பொய்த்த விந்திரசா லம் - நிகர்
பூசையும் கிரியையும் புலைநடையும்
கைத்திடு பொய்மொழியும் - கொண்டு
கண்மயக் காற்பிழைப் போர்பல ராம்.

என்று அந்நிலை அத்தினபுரத்திலிருப்பதாகக் காட்டுவர். நகரத்தை வருணிக்கும்போது நல்லவற்றையே கூறுவது கவிஞர்கள் மேற் கொண்ட மரபு. ஆனால், தீயவற்றையும் மறைக்காது காட்டுகின்றார் கவிஞர். இதுவும் பாரதியாரின் புதுமைகளில் ஒன்று. இங்ஙனம் 'வளநகர்' காட்டப்பெறு கின்றது.

விதுரன், தன் மனப் போக்குக்கு எதிராகத் தானே பாண்டவர்களை அழைக்கப் போக நேரும்போது நாட்டின் வளத்தை நோக்கியும் அஃது அண்மையில் குருதி வெள்ளம் ஓடும் அமர்க்களமாகப் போவதையும் நினைத்து வருந்தித் தனக்குள்ளே கூறி இரங்கும்,

'நீலமுடி தரித்தபல மலைசேர் நாடு,
நீரமுதம் எனப்பாய்ந்து நிரம்பும் நாடு,
கோலமுறு பயன்மரங்கள் செறிந்து வாழும்
குளிர்காவும் சோலைகளும் குலவு நாடு,
ஞாலமெலாம் பசியின்றிக் காத்தல் வல்ல
நன்செய்யும் புன்செய்யும் நலமிக் கோங்கப்
பாலடையும் நறுநெய்யும் தேனு முண்டு
பண்ணவர்போல் மக்களெலாம் பயிலும் நாடு'

'அன்னங்கள் பொற்கமலத் தடத்தின் ஊர
அளிமுரலக் கிளிமழலை அரற்றிக் கேட்போர்
கன்னங்கள அமுதூறக் குயில்கள் பாடும்
காவினத்து நறுமலரின் கமழைத் தென்றல்

பொன்னங்க மணிமடவார் மாட மீது
புலவிசெயும் போழ்தினிலே போந்து வீச,
வன்னங்கொள் வரைத்தோளார், மகிழ மாதர்
மையல்விழி தோற்றுவிக்கும் வண்மை நாடு.

பேரறமும் பெருந்தொழிலும் பிறங்கும் நாடு,
பெண்களெலாம் அரம்பையர்போல் ஒளிரும் நாடு
வீரமொடு மெய்ஞ்ஞானம் தவங்கள் கல்வி
வேள்வியெனும் இவையெல்லாம் விளங்கும் நாடு.

சோரமுதற் புன்மையெதுந் தோன்றா நாடு,
தொல்லுலகின் மணிமுடிபோல் தோன்றும் நாடு
பாரதர்தந் நாட்டினிலே நாச மெய்தப்
பாவியேன் துணைபுரியும் பான்மை என்னே.[6]

என்ற கவிதைகள் மிகுந்த நாடகத் தன்மையுடன் அமைந்துள்ளன. 'நாட்டு வளமும் பெருமையும்' இவற்றில் காட்டப் பெறுகின்றன.

பாண்டவர்கள் அத்தினபுரத்திற்கு வரும் வழியில் பார்த்தன் பாஞ்சாலிக்குப் படுஞாயிற்றின் எழிலைக் காட்டுவதாக அமைந்த பகுதியில் 'இரு சுடர் தோற்றத்தில்' ஒரு சுடர் தோற்றம் அற்புதமாகக் காட்டப்பெறுகின்றது. அதில் இரு பாடல்களை ஈண்டுத் தருவோம்.

கணந்தோறும் வியப்புக்கள் புதிய தோன்றும்;
கணந்தோறும் வெவ்வேறு கனவு தோன்றும்;
கணந்தோறும் நவநவமாம் களிப்புத் தோன்றும்;
கருதிடவும் சொல்லிடவும் எளிதோ? ஆங்கே,

6. ஷை 1.17: 116 - 118

கணந்தோறும் ஒருபுதிய வண்ணம் காட்டிக்
காளிபரா சக்திஅவள் களிக்குங் கோலம்
கணந்தோறும் அவள்பிறப்பாள் என்று மேலோர்
கருதுவதன் விளக்கத்தை இங்குக் காண்பாய்.

'அடிவானத் தேஅங்கு பரிதிக் கோளம்
அளப்பரிய விரைவினொடு சுழலக் காண்பாய்
இடிவானத் தொளிமின்னல் பத்துக் கோடி
எடுத்தவற்றை ஒன்றுபட உருக்கி வார்த்து,
முடிவான வட்டத்தைக் காளி ஆங்கே,
மொய்குழலாய், சுற்றுவதன் மொய்ம்பு
காணாய்!

வடிவான தொன்றாகத் தகடி ரண்டு
வட்டமுறச் சுழலுவதை வளைந்து காண்பாய்.

இவை படிப்போரை எல்லையற்ற இலக்கியச் சுவையில் ஈடு படுத்துவதை அறியலாம்.

தண்டியார் கூறும் 'மந்திரம், தூது, செலவு இகல் வென்றி' இவற்றுள் 'மந்திரம்' என்பது, துரியோதனன் சபையில் சகுனியோடு பாண்டவர்கட்குத் தீங்கிழைக்கும் சதி ஆலோசிக்கப்பெறுவதையும், திருதராட்டிரன் அதனைக் கடிவதையும் போன்ற நிகழ்ச்சிகளைக் குறிப்பதாகக் கொள்ள லாம். பாண்டவர்கள் அத்தினபுரத்திற்குப் பயணப்பட்டு வருதல் 'செலவு' என்பனதால் உணர்த்தப்படுகின்றது. பாண்ட வர்களை அழைப்பதற்காக விதுரன் இந்திரப்பிரத்தத்திற்கு வருதலைத் 'தூது' என்று குறிப்பிடுவதாகக் கொள்வதில் தவறு இல்லை.

பாரதியின் காப்பியம் அழைப்புச் சருக்கம், சூதாட்டச் சருக்கம், அடிமைச் சருக்கம், துகிலுரிதற் சருக்கம், சபதச் சருக்கம் என்று ஐந்து சருக்கங்களாக அமைந் திருப்பது 'சருக்கம் இலம்பகம் பரிச்சேதம் என்னும் பான்மை

யின் விளங்கி' என்ற தண்டியாசிரியரின் விதியை யொட்டித் தான் அமைந்துள்ளது என்று கருதலாம். மேலும், இக்காப்பியத்தில் கருணம், ரௌத்திரம், வீரம் போன்ற சுவைகளையும் உணர்ச்சியுடன் படிக்கும்போது உணர்ந்து மகிழலாம். தண்டியார் கூறும் காப்பிய உறுப்புகள் குறைந்து வரினும் குற்றம் இல்லை என்ற புறனடையும் இஃது ஒரு சிறந்த காப்பியம் என்பதை அரண் செய்கின்றது. மேனாட்டார் காப்பியம் பற்றிக் கூறியுள்ள கருத்துகளின் பொருத்தத்தை அடுத்து வரும் இயல்களில் காண்போம்.

# கதைக் கரு

பாரதத்தில் சூதுப்போர் சருக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது இக்காப்பியம் என்பதை இயல் - 1 இல் குறிப்பிட்டோம். காப்பியப்பொருளைத் தேர்ந்தெடுத்த பின்னர் அதில் வரும் நிகழ்ச்சிகளை மனம் கவரும் வண்ணம் தன் கற்பனையினால் புணர்ப்பதில்தான் கவிஞனின் திறம் வெளிப்படுகின்றது. நிகழ்ச்சிகளின் புணர்ப்பும் காவியத்தைச் சிறப்புறச் செய்கின்றது; உயிர்ப்பு ஒருமைப்பாட்டையும் உண்டாக்கி விடுகின்றது, நிகழ்ச்சிகளின் புணர்ப்பைக் 'கதைக் கரு (Plot) என்றும் வழங்குவர். பழைய கதையைப் புதிய காவியமாகப் புனைவது எளிதன்று; அஃது உயிர் ஒளியுடன் ஒளிரும் கவிதை புனையும் ஆற்றலைப் பெற்ற மேதையர்களாலேயே செய்ய முடியும். இந்தமுறையில் நோக்கினால் 'பாஞ்சாலிசபதம்' பாரதியாரின் கவித்திறத்தின் தனி வெற்றியாகத் திகழ்வதைக் காணலாம். பாண்டவர்கள் இராசசூயப் பெருவேள்வி செய்து பெற்ற பெரும் புகழ் துரியோதனனின் மனத்தில் பொறாமைத் தீயை மூட்டுகின்றது. இந்தப்பொறாமைத் தீயே பாரதப் போருக்கும் வித்திடுகின்றது. துரியோதனன் பெறாமையால் படும் மனவேதனையையும் உள்ளக் குமுறலையும் கவிஞர் இதிகாசத்திற்கேற்ற விரிவுடன் அழகு பெறச் சித்திரித்திருப்பது சிந்தித்துச் சிந்தித்து மகிழ்வதற்குரியது.

காண் தகு வில்லுடை யோன் — அந்தக்
காளை அருச்சுனன் கண்க ளிலும்
மாண் தகு திறல் வீமன் — தட
மார்பிலும் எனதிசழ் வரைந்துள்தே.[1]

என்று துரியோதனனின் மனநிலையைப் புதிய அழகுடன் அவனே கூறுவதாக அமைந்துள்ள வரிகளுக்கு 'அட்சர லட்சம் கொடுக்கலாம்' என்று பழைய மரபு முறையில் சொன்னாலும் மனநிறைவு ஏற்படவில்லை. இவற்றில் துரியோதனனின் பொறாமைத் தீ கொழுந்து விட்டுப் பொறிகளுடன் கிளம்பு வதை மானசீகமாகக் காணமுடிகின்றது. இந்தக் கட்டத்தில் துரியோதனனின் மனநிலையைக் கவிஞர் மக்கள் மனோ தத்துவ உண்மைகள் பொலிந்து திகழுமாறு புனைந்து காட்டுவது நம்மை இலக்கியச் சுவைகளின் கொடுமுடிக்குக் கொண்டு செலுத்துகின்றது. பொறாமைத் தீபடுத்தும் பாட்டை,

வன்றி றிறத்தொரு கல்லெனும் நெஞ்சன்,
வானம் வீழினும் அஞ்சுதல் இல்லான்,
குன்றமொன்று குழைவுற்று இளகிக்
குழம்பு பட்டழி வெய்திடும் வண்ணம்
கன்று பூதலத் துள்ளுறை வெம்மை
காய்ந்தெ ழுந்து வெளிப்படல் போல

நெஞ்சத் துள்ளோர் பொறாமை எனுந்தீ
நீள்வதால் உள்ளம் நெக்குரு கிப்போய்,
மஞ்சன் ஆண்மை மறத்திண்மை மானம்
வன்மை யாவும் மறந்தன னாகிப்
பஞ்சை யாமொரு பெண்மகள் போலும்
பாலர் போலும் பரிதவிப் பானாய்[2]

1. பா.ச.1:5.20
2. ஷை 1:5.38,39

என்று கவினுற எடுத்துக்காட்டுகின்றார் கவிஞர். துரியோதன் தன் நிலை குலைந்து நிற்கின்றான்:

யாது நேரினும் எவ்வகை யானும்
　　யாது போயினும் பாண்டவர் வாழ்வைத்
தீது செய்து மடித்திட எண்ணிச்
　　செய்கை யொன்றறி றியான்திகைப் பெய்தி

நிற்கின்றான். 'வத்தி வைப்பதில்' வல்லவனான சகுனி மாமனைச் சரண் எய்தி. 'ஏது செய்வம்?' என்று சொல்லி நைகின்றான்; நெஞ்சிற் குமுறிக் கொண்டிருந்த அனைத்தையும் அவன் 'திருமுன்' கொட்டி விடுகின்றான்.

மாமன் யோசனைப்படி மஞ்சன் பாண்டவர்களை வஞ்சனையாகச் சூதுக்கிழுக்கின்றான். சூதின் முடிவு 'பாஞ்சாலியின் சபதத்திற்கு' வித்திடுகின்றது. அதிலிருந்துதான் பாரதப் போரும் முளைத்து வளரத் தொடங்குகின்றது.

—'ஓம்
தேவி பராசக்திஆணை யுரைத்தேன்;
　　பாவி துச்சாதனன் செந்நீர் — அந்தப்
பாழ்த்துரி யோதனன் ஆக்கை இரத்தம்,
　　மேவி இரண்டுங் கலந்து — குழல்
மீதினிற் பூசி நறுநெய் குளித்தே
　　சீவிக் குழல்முடிப் பேன்யான் — இது
செய்யுமுன் னேமுடியேன்'[3]

என்பது திரௌபதி உரைத்த சபதம். கவிஞர் தாம் வழிபடும் தெய்வமான பராசக்திமீது ஆணை வைத்தே சபதமிடும்படி செய்யும் திறம் சிந்தித்தற்குரியது.

---

3. ஷை 5.73:307

இந்தச் சபதமே இச்சிறு காவியத்தின் மகுடமாகத் திகழ்கின்றது. காவியத்தின் இறுதிப் பகுதிகளாகிய துகிலுரிதல் சருக்கமும் சபதச் சருக்கமும் அதியற்புதமான படைப்புகள் என்றே சொல்ல வேண்டும். இந்தக் கட்டங்களில் பாரதியையும் வில்லியையும் ஒப்பிட்டு நோக்கினால் பாரதியின் பேராற்றல் புலனாகும். பாண்டவர்கள் அனைத்தையும் தோற்ற பிறகு துரியோதனனின் அவையில் நடைபெறும் அக்கிரமங்கள் வில்லிபாரதத்தில் மிகச் சாதாரண முறையில்தான் சித்திரிக்கப் பெற்றுள்ளன. பாரதியாரின் காப்பியத்தில் இக்கட்டங்கள் உயர்ந்த சோக நாடகத் தன்மையுடன் கையாளப்பெற்றுள்ளன.

தருமன் சகோதரர்களையும் தன்னையும் சூதில் தோற்ற பிறகு சகுனி துரியோதனனை நோக்கிப் பேசுகின்றான்:

> இன்னும் பணயம் வைத் தாடுவோம்;— வெற்றி
> இன்னும் இவர்பெற லாகுங்காண்
> பொன்னும் குடிகளும் தேசமும் - பெற்றுப்
> பொற்பொடு போதற் கிடமுண்டாம்; - ஒளி
> மின்னும் அமுதமும் போன்றவள் - இவர்
> மேவிடு தேவியை வைத்திட்டால், அவள்
> துன்னும் அதிட்ட முடையவள் - இவர்
> தோற்ற தனைத்தையும் மீட்டலாம்'[4]

இவ்வாறு மாமன் உரைத்த பேச்சைக் கேட்டவுடன் துரியோதனன் 'நன்று நன்று' என்று தன் ஒப்புதலைத் தெரிவிக்கின்றான். அறக்கோமகனும் 'பாஞ்சால நாட்டின் தவப் பயனை, சூதினில் பணயம் என்றே அந்தக் 'கொடியவர் அவைக் களத்தில் வைத்திடக் குறித்து விடுகின்றான்'.

---

4. ஷை 4.51:241

இந்தக் காட்சியைச் சித்திரிக்கும் கவிஞருக்கே துக்கம் தாங்கவில்லை. சினம், அருவருப்பு கருணம் இவையெல் லாம் கலந்த உணர்ச்சியுடன் கவிக் கூற்றாகத் தம் உள்ளக் குமுறலைக் கொட்டு கின்றார்.

வேள்விப் பொருளினை யே—புலைநாயின்முன்
மென்றிட வைப்பவர் போல,
நீள்விட்டப் பொன்மாளி கை—கட்டிப்பேயினை
நேர்ந்து குடி யேற்றல் போல்,
ஆள்விற்றுப் பொன்வாங்கியே—செய்தபூணையோர்
ஆந்தைக்குப் பூட்டுதல் போல்,
கேள்விக் கொருவரில் லை—உயிர்த்தேவியைக்
கீழ்மக்கட் காளாக்கி னான்.[5]

மேலும் அவரது சோகக் குரல்,

செருப்புக்குத் தோல் வேண்டி யே—இங்குக்
கொல்வரோ
செல்வக் குழந்தையினை?
விருப்புற்ற சூதினுக்கே - ஒத்த பந்தயம்
மெய்த்தவப் பாஞ்சாலி யோ?[6]

என்ற பகுதியில் ஒலிக்கின்றதைக் கேட்கின்றோம்.

சென்னை மாநகரில் காய்கறிச் சந்தையில் விற்போரிட மும் வீட்டுக்கு வீடு வந்து பழைய தாள்களை வாங்குவோரிட மும் அவர்கள் வைத்துள்ள தராசும் அவர்கள் எண்ணப்படி வணங்கிக் கொடுப்பதுபோல் சகுனியின் தாயக் காய்களும் அவன் ஏவல்படி செயற்படுகின்றன.

---

5. ஷெ 4.52:245
6. ஷெ 4.52:246

இருபகடை போடென் றான்,—பொய்ம்மைக்
காய்களும்
இருபகடை போட்டவே.[7]

இந்த அடிகளைப் படிக்கும்போதே நமது கண்கள் குளமாகின்றன.

துரியோதனனின் அவையிலுள்ள கௌரவர் கூட்டம் கும்மாளம் போடுகின்றது; சிலர் தனித்தனியாகக் குதித்தும் கொக்கரித்தும் ஆடுகின்றனர். இக்காட்சியைக் கவிஞர்,

திக்குக் குலுங்கிடவே—எழுந்தாடுமாம்
தீயவர் கூட்டமெல் லாம்
தக்குத்தக் கென்றே அவர்—குதித்தாடுவார்
தம்மிரு தோள் கொட்டுவார்
ஒக்குந் தருமனுக்கே—இஃதென்பார் 'ஓ!
ஓ!' வென் றிரைந்திடுவார்;
கக்கக்கென் றேநகைப்பார்—'துரியோதனா
கட்டிக்கொள் எம்மை' என்பார்.

மாமனைத் 'தூக்கா' யென்பார்—அந்த மாமன்மேல்
மாலை பலவீசு வார்
சேமத் திரவியங்கள் – பல நாடுகள்
சேர்ந்ததி லொன்று மில்லை
காமத் திரவிய மாம்—இந்தப் பெண்ணையும்
கைவச மாகச்செய் தான்;
'மாமனொர் தெய்வ' மென்பார்—'துரியோதனன்
வாழ்க'வென் றார்த்திடு வார்![8]

அடுத்து, துரியோதனன் அடைந்த மகிழ்ச்சியைக் காட்டுகின்றார்.

7. ஷை. 4.52:246
8. ஷை. 4.52: 247, 248.

*நின்று துரியோதனன்—அந்தமாமனை*
*நெஞ்சொடு சேரக் கட்டி,*
*'என்துயர் தீர்த்தா யடா!—உயிர் மாமனே!*
*ஏளனந் தீர்த்து விட்டாய்*
*அன்று நகைத்தா ளடா!—உயிர் மாமனே!*
*அவளைஎன் ஆளாக்கி னாய்*
*என்றும் மறவே னடா?—உயிர்மாமனே!*
*என்ன கைம்மாறு செய்வேன்!?*[9]

என்று சொல்லிக் களிக்கின்றான்; கூத்தாடுகின்றான். இக் காட்சியையும்,

*என்றுபல சொல்லுவான்—துரியோதனன்*
*எண்ணி எண்ணிக் குதிப்பான்;*
*குன்று குதிப்பது போல்—துரியோதனன்*
*கொட்டிக் குதித் தாடுவான்*[10]

என்று காட்டுவார் கவிஞர். 'கரியோ ராயிரத்தின் வலி காட்டிடுவோன்' அல்லவா? யானையைப் போலில்லா விட்டா லும் பெரிய உடலையாவது கொண்டிருத்தல் வேண்டும். இதனைத் தெளிவுறுத்தவே 'குன்று குதிப்பது போல்' என்ற உவமையைக் கையாண்டுள்ளார். துரியோதனனின் மன்று குழப்பமுற்றுக் கௌரவர் கூட்டம் வகைதொகை யொன்று மின்றி களித்துக் கூத்தாடினதைத் தம்மால் எடுத்துக் கூற முடியாதென்பதை,

*அன்று புரிந்ததெல்லாம்—என்றன் பாட்டினிலே*
*ஆக்கல் எளிதாகு மோர்?*

என்று சொல்லித் தலைக்கட்டுகின்றார்.

---

9. ஷெ. 45.4:249
10. ஷெ 4.54:250

நெஞ்சு பொறுக்க முடியாத பல அக்கிரமங்கள் அரசவையில் நடைபெறுகின்றன. அவையிலிருந்த

> கேள்விபல உடையோர், கேடிலா நல்லிசையோர்
> வேள்வி தவங்கள் மிகப்புரிந்த, வேதியர்கள்
> மேலோர்

முதலிய யாவரும் அவ்வடாத செயல்களைத் தடுக்க முடியாது மனஞ் சோர்ந்து மூங்கையர்போல் வாளா இருக்கின்றனர். அறமே வடிவெடுத்தாற்போன்ற தருமன் அனைத்தையும் பொறுத்துக் கொண்டு 'சும்மா' இருக்கின்றான். 'பாண்டவரை' மின்செய் கதிர் விழியால் வெந்நோக்குகின்றாள் திரௌபதி.

> ஆடை குலைவுற்று நிற்கிறாள்!—அவள்
> ஆவென் றழுது துடிக்கிறாள்—வெறும்
> மாடு நிகர்த்ததுச் சாதனன்—அவள்
> மைக்குழல் பற்றி இழுக்கிறான்—இந்தப்
> பீடையை நோக்கினன் வீமனும்—கரை
> மீறி எழுந்தது வெஞ்சினம்—துயர்
> கூடித் தருமனைப்[11]

பழித்துப் பேசுகின்றான். 'எல்லாவற்றையும் இழக்கப் பொறுத்திருந்தோம். துருபதன் மகளை, திட்டத்துய்மன் உடன்பிறப்பை இருபகடை யென்றாய்; ஐயோ! இவர்க்கடிமை என்றாய்!' என்று கூறி சகாதேவனைப் பார்த்து,

> 'இது பொறுப்ப தில்லை—தம்பி!
> எரிதழல் கொண்டு வா
> கதிரை வைத்திழந்தான்—அண்ணன்
> கையை எரித்திடுவோம்'[12]

---

11. ஷை. 5.65:272
12. ஷை. 5.66:281

என்று ஆணையிடுகின்றான். ஐவரில் கடைக்குட்டியல்லாவா இவன்? அதனால்தான் உரிமையுடன் ஆணையிடுகின்றான் போலும்!

இதனைச் செவிமடுத்த வீரமே உருவெடுத்தவனும் கீதையின் பிறப்புக்குக் காரணமானவனுமான அருச்சுனன் இவ்வளவு கொடுமைக் கிடையிலும் தன் மன நிலையைக் காத்து வீமன் சினத்தைத் தணிவிக்கும் பாங்கில் பேசுகின்றான்:

மனமாரச் சொன்னாயோ? வீமா! என்ன
வார்த்தை சொன்னாய்? எங்குச் சொன்னாய்
யாவர் முன்னே?
கனமாருந் துருபதனார் மகளைச் சூதுக்
களியிலே இழந்திடுதல் குற்ற மென்றாய்;
சினமான தீஅறிவைப் புகைத்த லாலே
திரிலோக நாயகனைச் சினந்து சொன்னாய்.

"தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்;
தருமம் மறுபடி வெல்லும்" எனுமியற்கை
மருமத்தை நம்மாலே உலகம் கற்கும்
வழிதேடி விதிஇந்தச் செய்கை செய்தான்
கருமத்தை மேன்மேலும் காண்போம், இன்று
கட்டுண்டோம், பொறுத்திருப்போம்; காலம்
மாறும்
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்,
தனுஉண்டு காண்டிவம் அதன்பேர்[13]

என்கின்றான். கண்ணன் அருளால் திரௌபதி மானம் காக்கப்பெறுகின்றாள். வீமன், அருச்சுனன், பாஞ்சாலி ஆகிய மூவரும் சபதம் செய்வதுடன் காப்பியம் முடிவடை

---

13. ௸ 5.67:282, 283

கின்றது. மேனாட்டு அறிஞர் கருத்துப்படி கதையில் நிகழ்ச்சிகளின் புணர்ப்பு (Plot) நோக்கத்தின் பெருமையாலும் நிகழ்ச்சிகளின் மேம்பாட்டாலும் சிறப்படைகின்றது. ஒரு துன்பியல் நாடகத்திற்குக் கொடுக்கப்பெறாத காலக் கட்டுப் பாடு இதற்கு இல்லை. இதில் தொடர்ந்தாற்போல் முழு வளர்ச்சியைப் பார்ப்பதற்கு மனிதக் கற்பனைக்கு இடம் உண்டு. சிறு நிகழ்ச்சிகள் கூடியவரை நீக்கப்பெறினும் அவை பெரு நிகழ்ச்சிக்குத் துணை புரியுமானால் ஏற்றுக் கொள்ளப்படும். இந்த முறையில் பாஞ்சாலி சபதத்தின் நிகழ்ச்சிகளின் புணர்ப்பு நன்கு அமைந்துள்ளது என்றுதான் சொல்ல வேண்டும். இதனை நினைவில் கொண்டுதான் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையும்,

அன்னை 'பாஞ்சாலி—சபதம்'
அறைதல் கேட்டேனடா
முன்னைக் கதையெல்லாம்—கண்ணின்
முன்நடந்ததடா[14]

என்று கற்பனை நயத்துடன் பட்டிக்காட்டான் ஒருவன் வாய் மொழியாகக் கூறிச் சென்றார். காவியத்தை உணர்ச்சியுடன் படிப்போர் காவியத்தில் காட்டப்பெறும் நிகழ்ச்சிகள் யாவும் படிக்கும் பொழுதே உருக் காட்சியாகக் (Imagery) காணமுடியும் என்ற உண்மையை நன்கு அறிவார்கள்.

நிகழ்ச்சிகளின் புணர்ப்பில் ஒரே ஒரு குறை தட்டுப்படு கின்றது. திரெளபதி கண்ணனைத் துதி செய்யும் பகுதி நீண்டு காப்பிய அழகில் ஒரு சொட்டு வைத்து விட்டது என்று கருத இடம் ஏற்பட்டு விட்டது.

---

14. மலரும் மாலையும்-பாரதியும் பட்டிக் காட்டானும் 12.

'மார்பிலே துணியைத் தாங்கும்
வழக்கம்கீ ழடியார்க் கில்லை
சிறிய மகளு மல்லள்;
ஐவரைக் கலந்த தேவி
யாரடா பணியாள்! வாராய்;
பாண்டவர் மார்பி லேந்தும்
சிரையும் களைவாய்; தையல்
சேலையும் களைவாய்.[15]

என்று கர்ணன் ஆணையிட்டதும் ஐவர் தாமாகவே மேலாடையைக் கீழே போட்டு விடுகின்றனர்.

நவ்வியைப் போன்ற கண்ணாள்
ஞான சுந்தரிபாஞ் சாலி
'எவ்வழி உய்வோ' மென்றே
தியங்கினாள் இணைக்கை கோத்தாள்[16]

துச்சாதனன் அவளது துகிலினை உரிகையில்,

உட்சோதியிற் கலந்தாள்—அன்னை
உலகத்தை மறந்தாள் ஒருமையுற்றாள்.[17]

என்று கூறுவதைத் தொடர்ந்து,

பொய்யர்தந் துயரினைப்போல், —நல்ல
புண்ணிய வாணர்தம் புகழினைப் போல்
தையலர் கருணையைப் போல்—கடல்
சலசலத் தெரிந்திடும் அலைகளைப் போல்

பெண்ணொளி வாழ்ந்திடுவார்—அந்தப்
பெருமக்கள் செல்வத்திற் பெருகுதல்போல்
கண்ண பிரானரு ளால்—தம்பி

15. பா.ச. 5.69:290
16, ஷை 5. 69 291
17. ஷை 5.69:292

கழற்றிடக் கழற்றிடத் துணி புதிதாய்
வண்ணப்பொற் சேலைக ளாம்—அவை
வளர்ந்தன, வளர்ந்தன, வளர்ந்தனவே[18]
... ... ... ...

என்று பாடல்கள் அமைந்திருத்தல் வேண்டும்.

வில்லி இக்கட்டத்தை மிக நன்றாகக் கையாண்டுள்ளார். திரௌபதி கண்ணபிரானைத் துதி செய்வதை,

ஆறாகி இருதடங்கண் அஞ்சனவெம்
புனல்சோர அளகம் சோர
வேறான துகில்தகைந்த கைசோர
மெய்சோர வேறோர் சொல்லும்
கூறாமல் 'கோவிந்தா! கோவிந்தா!!'
என்றரற்றிக் குளிர்ந்து நாவில்
ஊறாத அமிழ்தூற உடல் புளகித்
துள்ள மெலாம் உருகி னாளே.[19]

என்று மிக அழகாகக் காட்டுவர். ஆனால் பாரதியார்,

உட்சோதியிற் கலந்தாள்;—அன்னை
உலகத்தை மறந்தாள் ஒருமையுற்றாள்

என்று மிக அழகாகத்தான் காட்டினார். இவ்வடிகள் சரணாகதித் தத்துவத்தை மிக அழகாக உணர்த்துகின்றது. இதனையடுத்து,

'ஹரி, ஹரி, ஹரி, என்றாள் ... ... ...

என்று தொடங்கி,

ஐய, நின் பதமலரே—சரண்
ஹரி ஹரி ஹரி ஹரி ஹரி' - என்றாள்

---

18. ஷை 5. 70: 299, 300
19. வில்லி பாரதம். சூதுப்போர்-400

என்று முடியும் வரையிலும்[20] (கிட்டத்தட்ட அருச்சனை பரணியிலமைந்துள்ள 52 வரிகள்) உள்ள பகுதியை நீக்கிவிட்டால் துகிலுரிதல் சருக்கம் மிக அற்புதமாக அமைந்திருக்கும். 'சரணாகதி'க்குப்பின் துதி பாடுவது அவசியமில்லை; எல்லாவற்றையும் அவன் அருளுக்கு விட்டபின் தன் முயற்சி ஏது? இஃது உளவியல் உண்மைக்கும் மாறாக, அநுபவத்திற்கும் விரோதமாக, தத்துவத்திற்கும் முரணாக உள்ளது என்று தான் சொல்ல வேண்டும். இது கவிஞனின் உரிமம் என்று வாதாடுவதை விட்டு கவிஞனின் குறையை ஒப்புக் கொள்வோம்.

20. ஷை 5.70: 293-299

# காவியத்தின் ஒருமைப்பாடு

காவியத்தின் ஒருமைப்பாடு என்ற குறிக்கோள் (Ideal of unity) அரிஸ்ட்டாட்டில் காலத்திலிருந்து சிறப்பாகக் கருதப் பெறும் ஒரு விதியாகும். மேனாட்டு திறனாய்வாளர்கள் இதனை ஒரு சிறந்த கொள்கையாகவே போற்றி வருகின்றனர். துன்பியல் நாடகத்தைப் போலவே காப்பியத்திலும் ஒரே தொடர்ந்த நிகழ்ச்சி (Organic action) வளர்ச்சி பெறுதல் வேண்டும்; அது சாதாரணமாக ஒரு சந்தர்ப்பத்தின் விளைவாகத் தோன்றி வளர்ந்து, தெளிந்த அமைதியுடன் முடிவடைதல் வேண்டும். அரிஸ்ட்டாட்டில் கருத்துப்படி ஒரு காப்பியத்திற்குத் தொடக்கம், நடு, முடிவு இருத்தல் வேண்டும்.[1] இராமயணம் போன்ற ஒரு பெரிய இதிகாசக் காப்பியத்தில் ஒரு தனி நிகழ்ச்சியுடன் எண்ணற்ற கிளைக் கதைகள் (Episodes) அவை பொருந்தும் அளவுக்கு நுழைக்கப் பெறும். ஆனால், அவையனைத்தும் காப்பியத் தலைவனைப்பற்றியே கூறுவனவாக இருக்கும். பெரும் காலும் இக் காப்பியம் பேரெடுப்பாகத் தொடங்குவதற்கும் இவ்விணைப்புகள் தெளிவாக இருப்பதற்கும் ஏதோ ஒரு

1. இவற்றை வடநூலார் உபக்கிரமம், மத்திய பாகம், உபசம்ஹாரம் என்று கூறுவர்.

நிகழ்ச்சி எங்கோ ஓரிடத்தில் தொடங்கிப் பின்னால் விளக்கத்திற்குத் துணை புரிவனவாக அமையும்.

பாரதியின் 'பாஞ்சாலி சபதம்' அழைப்புச் சருக்கம், சூதாட்டச் சருக்கம், அடிமைச் சருக்கம், துகிலுரிதற் சருக்கம் சபதச் சருக்கம் என்ற ஐந்து சருக்கங்களாக அமைந்துள்ளது. தண்டியாசிரியரின் இலக்கணப்படி 'சருக்கம் இலம்பகம் பரிச்சேதம் என்னும் பான்மையின் விளங்கி' அமைந்துள்ளது என்று சொல்லலாம். அழைப்புச் சருக்கத்தில் காப்பியத்தின் கதை கருக் கொள்கின்றது; துரியோதனனின் பொறாமையே கதையின் தொடக்கத்திற்கு வித்தாக அமைகின்றது. இராசசூயப் பெரு வேள்வியைப் பாண்டவர்கள் வெற்றியுடன் நிறைவேற்றியதும், அதில் நாரதர் முதல் பல முனிவர்கள் பங்கு பெற்றதும், கண்ணன் அருளாலும் தம்பியர் தோள் வலியாலும் 'வழவழத் தருமன்' சக்கரவர்த்தியாக உயர்ந்ததுவும், அம்புவி மன்னரெல்லாம் நம்பரும் பெருஞ்செல்வம் தருமனின் நலங்கிளர் சபையினில் பொழிந்ததும், பல்வேறு பரிசுப் பொருள்கள் வந்து குவிந்ததுமான நிகழ்ச்சிகளையெல்லாம் எண்ணி எண்ணி மனம் புழுங்கிப் பொறாமையாக வடிவெடுப்பதை அற்புதமாகக் காட்டுகின்றார் கவிஞர். இதனை அவர்,

'என்றிவ் வாறு பலபல எண்ணி
    ஏழை யாகி இரங்குத லுற்றான்
வன்றி றத்தொரு கல்லெனும் நெஞ்சன்
    வானம் வீழினும் அஞ்சுதல் இல்லான்,
குன்ற மொன்று குழைவுற் றிளகிக்
    குழம்பு பட்டழி வெய்திடும் வண்ணம்
கன்று பூதலத் துள்ளுறை வெம்மை
    காய்ந்தெழுந்து வெளிப்படல் போல

என்று காட்டுவர். தன் நெஞ்சிலுள்ளவற்றைச் 'சூதும் பொய்யும் உருவெனக் கொண்ட துட்டமாமனிடம்' எடுத்து ரைத்து நைவதும், அவனும் அவனைச் சூழ்ந்துள்ளோரும் இப் பொறாமைத்தீயை மேலும் வளர்ப்பதும் அருமையாகச் சித்தி ரிக்கப் பெறுகின்றன. சூதாட்டச் சருக்கத்தில் கதை முளை விட்டு வளரத் தொடங்குகின்றது. இச் சருக்கத்தில் சகுனி தருமனை நோக்கி,

'வில்லுறு போர்த்தொழி லாற் - புவி
வென்றுதங் குலத்தினை மேம்படுத்தீர்
வல்லுறு சூதெனும் போர் - தனில்
வலிமைகள் பார்க்குதும் வருதி,

என்று சூதுப்போருக்கு அழைக்கின்றான். தருமன் மறுப்பதும், சகுனியின் ஏச்சும், தருமன் நீதியுடன் கூடிய மறுமொழியும், அதனால் சகுனி

'வல்லமர் செய்திடவே — இந்த
மன்னர்முன் னேநினை அழைத்து விட்டேன்;
சொல்லுக வருவதுண் டேல் — மனத்
துணிவிலை யேலதுஞ் சொல்லுக'

என்று வல்லுக்கு அழைப்பதும், தருமன் இறுதியில் சூதாடு வதற்கு இணங்குவதும், சூதாட்டத்தில் தருமன் அனைத்துப் பொருள்களையும் இழத்தலும், சகுனி நாட்டை வைத்தாடு மாறு கேட்டலும், வெகுண்டெழுந்து விதுரன் ஆட்டத்தை நிறுத்துமாறு கூறும் உருக்கமான பேச்சும் போன்ற விறுவிறுப் பான நிகழ்ச்சிகளால் கதை விரைந்து வளரத் தொடங்கு கின்றது. அரிஸ்ட்டாட்டில் கூறும் 'தொடக்கம்' இங்கு அமைந்திருத்தலைக் காணலாம்.

அடிமைச்சருக்கத்தில் கதை நன்கு வளர்ச்சி பெறு கின்றது. விதுரனின் உருக்கமானஅறவுரைக்குத்துரியோதனன்

சிற்றப்பன் என்ற முறையையும், தந்தை அமைச்சரவையில் ஒரு முக்கியமான அமைச்சன் என்றும் பாராமல்,

நன்றி கெட்ட விதுரா! — சிறிதும்
நாண மற்ற விதுரா
தின்ற உப்பினுக் கே — நாசம்
தேடு கின்ற விதுரா
அன்று தொட்டு நீயும் — எங்கள்
அழிவு தேடு கின்றாய்

ஐவ ருக்கு நெஞ்சும் — எங்கள்
அரண்ம னைக்கு வயிறும்
தெய்வ மன்று னக்கே — விதுரா!
செய்து விட்ட தேயோ?
மெய்வ குப்பவன் போல் — பொதுவாம்
விதிஉ ணர்ந்த வன்போல்
ஐவர் பக்கம் நின்றே — எங்கள்
அழிவு தேடுகின்றாய்.

... ... ... ... ...

அன்பி லாத பெண்ணுக்கு — இதமே
ஆயி ரங்கள் செய்தும்
முன்பின் எண்ணு வாளோ? — தருணம்
மூண்ட போது கழிவாள்;
வன்பு ரைத்தல் வேண்டா — எங்கள்
வலிபொ றுத்தல் வேண்டா
இன்ப மெங்க ளுண்டோ — அங்கே
ஏகிடு'[2]

என்றெல்லாம் மரியாதைக் குறைவாக துரியோதனின் ஏசிப் பேசும் பேச்சும், அதற்கு மீண்டும் விதுரன்,

---

2. பா.ச.3 41:208, 209, 212

சென்றாலும் நின்றாலும் இனி என் னேடா
செப்புவன நினக்கென நான் செப்பினேனோ
மன்றார நிறைந்திருக்கும் மன்னர் பார்ப்பார்
மதியில்லா மூத்தோனும் அறியச் சொன்னேன்
இன்றோடு முடிகுவதோ? வருவ தெல்லாம்
யானறிவேன், வீட்டுமனும் அறிவான் கண்டாய்.
வென்றான்உள் ஆசையெலாம் யோகி யாகி
வீட்டுமனும் ஒன்றுரையா திருக்கின் றானே.

விதிவழிநன் குணர்ந்திடினும் பேதை யேன் நான்
வெள்ளைமன முடைமையினால், மகனே நின்றன்
சதிவழியைத் தடுத்துரைகள் சொல்லப் போந்தேன்;
சரிசரிஇங் கேதுரைத்தும் பயனொன்' றில்லை.
மதி வழியே செல்லுக'

என்று கூறி வாய் மூடித் தலை குனிந்து தன் இருக்கையில் அமர்ந்து கொண்டது போன்ற நிகழ்ச்சிகளில் கதையின் வளர்ச்சி 'ஆமை வேகம்' கொண்டாலும், மீண்டும் சூதாட்டம் தொடங்கும்போது கதையின் வளர்ச்சியில் 'சூடு' பிடிக்கின்றது.

இந்த ஆட்டத்தில் ஆயிரங்களான நீதிகளை எல்லாம் உணர்ந்த தருமன் நாட்டை இழத்தலை,

தேயம் வைத்தி ழந்தான்; —சீச்சீ!
சிறியர் செய்கை செய்தான்

என்று கவிஞர் காட்டுவார். அடுத்து சகோதரர்களையும் தன்னையும் வைத்து ஆடினால் தருமன் இழந்த அனைத்தையும் திரும்பப் பெற வாய்ப்புண்டு என்று சகுனி கூறி அழைக்க, தருமனும் சகாதேவன், நகுலன், பார்த்தன், வீமன், தான் என்ற வரிசையில் பணயமாக வைத்து அனைவரையும் இழந்து விடுகின்றான். சகுனி பேசுகின்றான்:

இன்னும் பணயம் வைத் தாடுவோம்;— வெற்றி
இன்னும் இவர்பெற லாகுங் காண்!
பொன்னும் குடிகளும் தேசமும் — பெற்றுப்
பொற்பொடு போதற் கிடமுண்டாம் — ஒளி
மின்னும் அமுதமும் போன்றவள் — இவள்
மேவிடு தேவியை வைத்திட்டால் — (அவள்)
துன்னும் அதிட்ட முடையவள் — இவர்
தோற்ற தனைத்தையும் மீட்டலாம்.

இந்தப் பேச்சுடன் இந்தச் சருக்கம் முடிவடைகின்றது. கதையின் 'நடுவை' இங்குக்காண முடிகின்றது.

துகிலுரிதல் சருக்கத்திலும், சபதச் சருக்கத்திலும் கதை, யின் உச்சநிலையைக் (Cimax) காண்கின்றோம். துகிலுரிதல் சருக்கத்தில் திரௌபதியைப் பணயமாக வைத்து இழத்தல் கௌரவர்கள் அடைந்த மகிழ்ச்சி, துரியோதனின் மட்டற்ற களிப்பு, அவன் பஞ்சாலியை மன்றுக்கு அழைத்து வருமாறு விதுரனைக் கேட்டல், விதுரனின் அறவுரை, தேர்ப்பாகனை இருமுறை அனுப்பியும் அவளால் திரௌபதியை அழைத்து வர இயலாமை, துச்சாதனனை அனுப்புதல்—இவை யாவும், துகிலுரிதல் சருக்க நிகழ்ச்சிகளாக அமைந்து கதையின் உச்ச நிலையை அடையத் துணை செய்கின்றன. அடுத்து வரும் சபதச் சருக்கத்தில் திரௌபதியைத் துச்சாதனன் கூந்தலைப் பற்றி இழுத்துவரல், ஊரவர் இக்காட்சியைக் கண்டு நெஞ்சங் கவல்தல், அரசவையில் கன்னெஞ்சமும் உருகுமாறு திரௌபதி நீதி கேட்டு அழுதல். வீடுமனின் கையாலாகாத பேச்சு, திரௌபதியின் மறுமொழி, வீமன் வெகுண்டு தருமனின் கையை எரிப்பதற்குச் சகாதேவனை எரிதழல் கொண்டு வருமாறு ஏவுதல், அருச்சுனன் வீமனை அமைதிப் படுத்தல், விகர்ணனின் எச்சரிக்கை, துச்சாதனன் பாஞ்சாலியின் ஆடையைக் களையத் தொடங்குதல், கண்ணனின்

திருவருளால் துகில் எண்ணத்திலடங்காத நிறங்களைக் கொண்டு, புதுப் புதுக் கோலங்களாக, பொன்னிழையும் பட்டிழையும் கொண்டதாக வளரத் தொடங்குதல் - இவை விரைந்து தொடர்ந்து நடைபெறும் வரையிலும் கதை கொடுமுடியினை எட்டுவதைக் காணலாம்.

இறுதிச் சருக்கத்தில் (சபதச் சருக்கத்தில்) வீமன், அருச்சுனன், திரௌபதி ஆகியோர் சபதம் செய்தல் ஆகிய நிகழ்ச்சிகளில் கதையின் 'முடிவு' தென்படுகின்றது. சபதங்களினால் கதையின் விளக்கம் தெளிவாக்கப்பெறுகின்றது. பாஞ்சாலி செய்த சபதம் காவியத்தின் பெயராகவே அமைந்தும் விடுகின்றது.

பெண்மைக்கு - தாய்க்குலத்திற்கு-ஏற்றங்காட்டிய தமிழ் இலக்கிய மரபினை நன்கு கருத்தில் கொண்டவர் பாரதி. மணிமேகலை, சிலப்பதிகாரம் என்ற பெண் தொடர்பால் பெயர் பெற்ற காப்பியங்களை மனத்திற்கொண்டு இதற்குப் 'பாஞ்சாலி சபதம்' என்று பெண்ணின் பெயரையே இட்டுள்ளார் என்று கருதுவது பொருத்தமாகத் தோன்றுகின்றது. அதற்கேற்றவாறு காவியப் போக்கையும் அமைந்துள்ளார் என்று கருதவும் இடந் தருகின்றது.

> இதிகாச சிரேஷ்டமான ஸ்ரீராமாயணத்தால்
> சிறையிருந்தவள் ஏற்றம் சொல்லுகின்றது,[3]

என்ற வாக்கையும் பாரதி நினைவில் கொண்டிருத்தல் வேண்டும்.

> பெண்மை வாழ்கென்று
> கூத்திடுவோ மடா![4]

என்று பெண்மையைப் போற்றுபவர் பெண் பெயரால் காவியத்தை வழங்கினார் என்று கொள்வதும் பொருத்தமாகும்.

---

3. ஸ்ரீவசனபூஷணம் - 5 (புருடோத்தம நாயுடு பதிப்பு)
4 பல்வகைப்பாடல்கள் - 5 பெண்மை

# காவியத் தலைவி - திரௌபதி

சிலப்பதிகாரத்திற்குக் கண்ணகி காவியத் தலைவியாக அமைவது போல், திரௌபதி இச்சிறு காவியமாகிய பாஞ்சாலி சபதத்திற்குக் காவியத் தலைவியாக அமைகின்றாள். 'உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்' என்ற உண்மை சிலம்பில் அமைந்து கிடப்பதை நாம் அறிவோம். காவியத்திலேயே இளங்கோவடிகள் கண்ணகிக்குக் கோயில் எடுத்த செய்தியைக் காட்டுகின்றார். இக்காவியத்திலோ அல்லது பாரதத்திலோ திரௌபதிக்குக் கோயில் எடுத்த செய்தியைக் கவிஞர்கள் குறிப்பிடாவிடினும் நாடெங்கும் பலவிடங்களில் 'திரௌபதி அம்மன் கோயில்' என்றிருப்பதைக் காண்கின்றோம். சில இடங்களில் 'தீ மிதித்தல்' என்ற விழாவும் இத்திருக் கோயில்களில் நடைபெற்று வருவதையும் காண்கின்றோம்.

பாரதியார் நமக்கு இப்பத்தினித் தெய்வத்தை இவ்வாறு அறிமுகம் செய்து வைப்பர்; சூதில் இவள் பணயப் பொருளாக வைக்கப்பெறுவதைக் காட்டும்போது,

பாவியர் சபைதனிலே—புகழ்ப்
பாஞ்சால நாட்டின் தவப்பயனை
ஆவியில் இனியவளை—உயிர்த்
தணி சுமந் துலவிடு செய்யமுதை,

ஓவியம் நிகர்த்தவளை—அருள்
ஒளியினைக் கற்பனைக் குயிர தனைத்
தேவியை, நிலத்திருவை—எங்குந்
தேடினும் கிடைப்பருந் திரவியத்தை.

படிமிசை இசையுறவே—நடை
பயின்றிடுந் தெய்விக மலர்க்கொடியைக்
கடிகமழ் மின்னுருவை,—ஒரு
கமனியக் கனவினைக் காதலினை,
வடிவுறு பேரழகை,—இன்ப
வளத்தினைச் சூதினில் பணயம்என்றே
கொடியவர் அவைக்களத்தில்—அறக்
கோமகன் வைத்திடல் குறித்து விட்டான்.[1]

என்று கூறுவார். 'ஐவர் பூவை' என்றும் குறிப்பிடுவார். இவளைக் கவிஞர் குறிப்பிடும் உருவகங்களை—சொல்லோவியங்களை - உருக் காட்சிகளை (Imagery) - மரபுக் கவிதைகளில் அமைத்தால் ஒவ்வோர் உருவகத்திற்கும் ஒவ்வொரு வெண்பாவோ விருத்தமோ அமையும். இவற்றுள்,

படிமிசை இசையுறவே—நடை
பயின்றிடும் தெய்விக மலர்க்கொடி

என்ற தொடர் நாடு முழுவதும் இப்பெருமாட்டிக்குக் கோயில் அமைந்துள்ள செய்தியைக் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம்.

பல்லாண்டுகளாக ஆந்திரப் பல்கலைக்கழகத்தை நிறுவக் காரணமாக இருந்தவரும், அதன் துணை வேந்தர் பதவியைப் பல்லாண்டுகள் அணி செய்தவருமான டாக்டர் சி.ஆர் ரெட்டியவர்கட்குத் தெலுங்கு மகாபாரதத்தில் தனி ஈடுபாடு உண்டு. அங்ஙனமே திரௌபதி என்ற பாத்திரமும் இவருடைய தனிப்

1 பா.ச.4 52:243,244

பற்றுக்குரியவளாக இருந்தாள். பஞ்சமி என்ற தம்முடைய ஐந்து கட்டுரைகள் கொண்ட நூலில் சேர்க்கப்பெற்றுள்ள கட்டுரையொன்றில் சீதையையும் திரௌபதியையும் அறிவுக் கூர்மையுடன் ஒப்பிட்டு ஆய்ந்துள்ளார். இந்த நாட்டில் சீதை ஊழிக்காலம் தொட்டு பெண்ணினத்தின் மிகச் சிறந்த மூல மாதிரியாக இருந்து வருகின்றாள் என்பதை நாம் அறிவோம். ஆனாலும் டாக்டர் ரெட்டியவர்கள் பற்றுறுதி, பொறுமை, குடிப்பண்பு, துன்பத்தை அநுபவிக்கும் திறன் போன்ற சீதையின் நற்குணங்களில் தனி ஈடுபாட்டைக் காட்டுகின்றார். ஆனால், திரௌபதிதான் தன்னுடைய துணிவாலும், விரைந்து மாறும் இயல்பாலும் டாக்டர் ரெட்டி அவர்களின் ஆண் இதயத்தை அதிகமாகக் கவர்கின்றாள்

இவர் கூறுவார்: ‘‘திரௌபதியைப் போலவே சீதையும் உலகோரின் இதயத்தைக் கவர்ந்துள்ளாள்; ஆனால் அவள் இல்லத்திலுள்ள ஒரு விளக்கேயாவாள்; கொழுந்து விட்டெரியும் அனற் பிழம்பு அல்லள். பொது மக்களுக்குரிய மன்றத்திற்கும் பொருத்தமானவள் அல்லள். இவற்றின் சுவையும் மனப்பாங்கும் இல்லாத ஓர் இல்லக் கிழத்தி இவள். இவள் சொல் நயமுடைய வாதப் போருக்கும் பொது மன்றப் போருக்கும், நேருக்கு நேர் நேரிடும் மோதல்கட்கும் சிறிதும் பொருத்தமானவள் அல்லள். இவள் வெல்லம் போல் இனிமையானவள்; மிளகு போன்ற காரசாரத்திற்கு இவள் பண்பில் இடமே இல்லை...... திரௌபதியைப் பொறுத்த மட்டிலும் இக்கால அமெரிக்கப் பெண் தலைவர்களும் இவளுடன் ஒப்பிடப்பெறும்பொழுது அவர்கள் தம்மை அடிமைகளாவே உணர்வர். இவளுடைய அறிவுத் திறனும் பாகுபடுத்திப் பார்க்குந்திறனும், பொது அறிவும், கூரிய அரசியலறிவும். துணிவும் உயர்பண்பும், தனிப்பட்ட சொந்தக் கவர்ச்சியும் இவளுடைய சுதந்திர உணர்ச்சிக்கு அடிப்படையாக இருந்தன. தன்னுடைய கணவன்மார்களைக் கடிந்

தால் அவர்கள் இவளைக் குறை கூறார்கள்; பிறரும் அந்நிலையில் தான் இருந்தனர். இவள் தனி முதன்மை உள்ளவள். குறைபாடே இல்லாதவள். இவளைப் போன்றவர்கள் இவளுடன் தொடர்புள்ளவர்களால் மட்டுமன்றி எல்லாராலும் அன்பு காட்டப்பெறுகின்றனர்; இல்லை. மதிப்புடன் போற்றப் பெறுகின்றனர்; பூசனை செய்யப்பெறுகின்றனர்... இவர்களிடம் இவ்வுலகம் தன்னுடைய நிறைவினையே காண்கின்றது' [2]

சிலப்பதிகாரக் கண்ணகி திரௌபதியுடன் ஒப்பிடத் தக்க பாத்திரமாகின்றாள். டாக்டர் சி. ஆர். ரெட்டி மேலே குறிப்பிட்டபடி இருவருமே தனி முதன்மையுடையவர்கள்; குறைபாடே இல்லாதவர்கள். நம் எல்லாருடைய அன்புக்கும் பாத்திரர்களாகின்றனர். மதிப்புடன் போற்றப் படுகின்றவ.ர்களாகின்றனர்; பூசனைக்கும் உரியவர்களாகின்றனர்.

புகார்க் காண்டத்தில் கண்ணகியை மிக அமைதியான பெண்ணாகக் காண்கின்றோம்.

போதில் ஆர் திருவினாள்
    புகழ்உடை வடிவுஎன்றும்
தீதுஇலா வடமினின்
    திறம்இவள் திறம்என்றும்
மாதரார் தொழுது ஏத்த
    வயங்கிய பெருங் குணத்துக்
காதலாள்[3]

என்று இளங்கோ அடிகள் காட்டுவார். மதுரைக் காண்டத்திலும் ஆவேசமுற்ற சாலினி மூலம்,

2. டாக்டர் சி. ஆர். ரெட்டி—பக். 49- 0

3. சிலப். 1. 1: 26-28

இவளோ கொங்கச் செல்வி;
குடமலை ஆட்டி
தென்தமிழ்ப் பாவை;
செய்த தவக் கொழுந்து;
ஒருமா மணியாய்,
உலகிற்கு ஓங்கிய
திருமாமணி[4]

என்று இவளைக் காட்டுவர். கவுந்தி அடிகள் இவளை மாதரி யிடம் அடைக்கலமாகத் தந்த போது,

என்னொடு போந்த
இளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி
மண்மகள் அறிந்திலள்;
கடுங்கதிர் வெம்மையின்
காதலன் தனக்கு
நடுங்குதுயர் எய்தி
நாப்புலர வாடி,
தன்துயர் காணாத்
தகைசால் பூங்கொடி
இன்துணை மகளிர்க்கு
இன்றி யமையாக்
கற்புக்கடம் பூண்ட இத்
தெய்வம் அல்லது,
பொற்புடைத் தெய்வம்
யாம்கண் டிலமால்[5]

என்று புகழ்ந்து உரைப்பர். அமைதியாக இருந்த கண்ணகி தன் கணவன் கொலைக்களப்பட்ட செய்தியைக் கேட்டதும்

4. ஷை. 2. 12: 47-50
5. ஷை 2.15: 137-144

பலவாறு அலற்றி அழுகின்றாள்' 'தீவேந்தன் - தனைக் கண்டு, இத்திறம் கேட்பல் யான்' என்று பாண்டியன் அரண் மனையை நோக்கி வருகின்றாள். பாண்டியன் அவையில் இவள் தன்னை அறிவித்துக் கொண்ட திறமும், தன் சிலம் பின் தன்மையை எடுத்துக் காட்டிய திறமும் நம்மை வியக்க வைக்கின்றன. தன் கணவன் கள்வன் அல்லன் என்று மெய்ப் பித்த திறனைக் கண்டு இறும்பூது எய்துகின்றோம்.

இனி, திரௌபதியைக் காண்போம். திருதராட்டினது அழைப்பைத் தெரிவிப்பதற்காக இந்திரப் பிரத்தம் வரும் விதுரனை வரவேற்கும் கட்டத்தில் இவளை முதன்முத லாகக் காண்கின்றோம். குந்தி தேவியை விதுரன் வணங்கிய பின்னர் துருபதன் செல்வம் விதுரனை வணங்குகின்றாள். இதனைக் கவிஞர்,

குந்தி எனும்பெயர்த் தெய்வதந் தன்னைக்
கோமகன் கண்டு வணங்கிய பின்னர்
வெந்திறல் கொண்ட துருபதன் செல்வம்
வெள்கித் தலைகுனிந் தாங்குவந் தெய்தி,
அந்தி மயங்க விசும்பிடைத் தோன்றும்
ஆசைக் கதிர்மதி யன்ன முகத்தை
மந்திரந் தேர்ந்ததோர் மாமன் அடிக்கண்
வைத்து வணங்கி வனப்புற நின்றாள்.

[கோமகன்-விதுரன்; துருபதன் செல்வம்-திரௌபதி]

என்ற பாடலில் காட்டுவர். இங்கு மிக அடக்கமான திரௌ பதியைக் காண்கின்றோம்.

அடுத்து, பாஞ்சாலியை அருச்சுனன் தொடையின் மீது சாய்ந்து கொண்டு பரிதியின் எழிலைக் கண்டு களிக்கும்

6. ஷை. 1. 18: 120

நிலையில் காண்கின்றோம். இவன்தானே இவளைத் தனது வில்லாண்மையினால் வென்று பெற்றான்? எனவே, இவன் மீது இவளுக்கு ஒரு வகையான தனிப்பற்று இருந்திருக்க வேண்டும் என்று ஊகிக்கின்றோம். கானுறை வாழ்க்கையில் கூட இவளுக்கு நேரிடும் இடர்களை யெல்லாம் அருச்சுனனனும் வீமனும்தான் களைவதைக் காண்கின்றோம்.

வாதம் புரிவதிலும், நீதிகளை எடுத்துக்காட்டுவதிலும் அவையில் துணிவாகப் பேசுவதிலும் இவளை யொத்த பாத்திரம் கண்ணகியைத் தவிர, தமிழ்க் காவியங்களில் வேறொருவரைக் காண்டல் அரிது. துரியோதனன் ஆணையினால் முதலில் இவளை அழைத்துச் செல்ல வந்த தேர்ப் பாகன் சபையில் நிகழ்ந்ததைச் சொல்லி அழைக்கும்போது இவள் கூறுவாள்:

... ... ...''யார் சொன்ன வார்த்தையடா!
சூதர் சபைதனிலே தொல்சீர் மறக்குலத்து
மாதர் வருதல் மரபோடா? யார்பணியால்
என்னை அழைக்கின்றாய்?''

என்று கேட்க, தேர்ப்பாகன் 'மன்னன் சுயோதனன் வார்த்தையினால்' என்று மறுமொழி தருகின்றான். உடனே அவள்,

'நல்லது; நீசென்று நடந்ததைகதை கேட்டுவா
வல்ல சகுனிக்கு மாண்பிழந்த நாயகர்தாம்
என்னை முன்னேகூறி இழந்தாரா? தம்மையே
முன்ன மிழந்து முடித்தென்னைத் தோற்றாரா?
சென்று சபையில் இச் செய்தி தெரிந்துவா'

என்று கூறி அவனைத் திருப்பியனுப்புவதில் இவளது துணிவினையும் பிரச்சினையை அணுகும் நுட்ப மதியினையும் காண முடிகிறது. இரண்டாம் முறை திரௌபதியிடம் சென்று துரியோதனன் சினந்து கூறியதைச் செப்பி அழைக்கும்போது அவள் கூறிய மறுமொழி:

'நாயகர் தாந்தம்மைத் தோற்றபின்-என்னை
நல்கும் உரிமை அவர்க்கில்லை புலைத்
தாயத்தி லேவிலைப் பட்டபின்,-என்ன
சாத்திரத் தாலெனைத் தோற்றிட்டார்?-
அவர்
தாயத்தி லேவிலைப் பட்டவர்; -புவி
தாங்குந் துருபதன் கன்னிநான் -நிலை
சாயப் புலைத்தொண்டு சார்ந்திட்டால்-பின்பு
தாரமுடைமை அவர்க்குண் டோ?[7]

மேலும் கூறுவாள்: "கௌரவர் அவையில் அறங் கண்டவர் ஒருவரும் இல்லையா? மன்னர் நிலை மாறு முன்னர் சாத்திரம் கூடச் செத்து விட்டதா? புகழ் வாய்ந்த குரவர் களும் கல்வி கற்ற மன்னர்களும் செல்வத்தை வெளவுதலைத் தான் கண்டனரோ? என் மானம் அழிவதையும் காண்பார் களா? இன்பமும் துன்பமும் தனிப்பட்டோருக்கு மாறிமாறி வருவதைக் கண்டுள்ளோம். ஆனால் நேமியுருட்டிப் புவி யாளும் வேந்தர்கள் அறத்தின் மாட்சியைக் கொன்று களிப் பார்களோ? இதனை அன்பும் தவமும் சிறந்த அந்தணர்களும் கண்டு களிப்பார்களோ? அவர் முன்பு என் வினாவினை மீட்டும் வைத்து தெளிவுறக் கேட்டுவா?"

தேர்ப்பாகனும் திரும்பி வந்து சபையை அடைந்து நிகழ்ந்ததைக் கூறினதுடன் அவள் மாதவிடாயிலிருப்பதையும் குறிப்பிடுகின்றான். உடனே அரவக் கொடியோன் துச்சா தனனை நோக்கி, 'தம்பி, போகக் கடவை இப்போது அங்கே; இங்கு அப் பொற்றொடியோடும் வருக நீ' என்று கூறவும் அவன் திரௌபதி இருக்கும் மாளிகையை அடைகின்றான். மைத்துனனைக் கண்டதும் தீண்டலை எண்ணி ஒதுங்குகின்

7. ஷை. 4. 59: 256.

றாள் அப் பொற்கொடி. 'அடி, எங்கே போகின்றாய்?' என்று அவன் உரப்ப, இவளும் அவனை ஆண்டகையற்ற புலையன் என்று கருதி துணிவை வருவித்துக் கொண்டு "நீ வந்த செய்தியை விரைவில் சொல்லி நீங்குக" என்று கூற, அவனும் "மன்னர் கூடியிருக்கும் அவையில் உன்னைக் கூட்டி வருமாறு அண்ணன் சுயோதனன் பணித்தனன். ஏதும் சொல்லாது என்னோடு ஏகுவாய். பேடி மகன் பாகனுக்கு உரைத்த பேச்சுகள் வேண்டா" என உரைக்கின்றான்.

திரௌபதியின் நீண்ட கருங்குழலைத் துச்சாதனன் பற்றி இழுத்துச் சென்ற காட்சியும், அவள் அவையோரை நீதி கேட்டு அழுத காட்சியும் வீடுமனின் பேச்சும், அதற்குப் பாண்டவரின் தேவி,

> பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத் திரங்கள்!
> மாய முணராத மன்னவனைச் சூதாட
> வற்புறுத்திக் கேட்டதுதான் வஞ்சனையோ? நேர்மையோ?
> முற்படவே சூழ்ந்து முடித்ததொரு செய்கை யன்றோ?
> மண்டபம்நீர் கட்டியது மாநிலத்தைக் கொள்ள வன்றோ?
> பெண்டிர் தமையுடையீர்! பெண்களுடன் பிறந்தீர்!
> பெண் பாவ மன்றோ பெரியவசை கொள்ளீரோ?
> கண் பார்க்க வேண்டும்![8]

என்று துணிவுடன் தந்த மறுமொழியும் கன்னெஞ்சத்தையும் உருக்கும் தன்மையுடயவை. இந்தக் கட்டத்தில் பாண்டியன் அவையில் நீதி கேட்டழுத கண்ணகியை ஒக்கின்றாள் பாஞ்சாலி. கதை நடந்த காலத்தில் நாமும் இருந்ததைப் போன்ற மனநிலை நம்மிடம் ஏற்படுகின்றது. காவியத்

8. ஷை. 5.65:81-88

தலைவியின் நிலை கண்டு பச்சாதாபப் படுகின்றோம். நெஞ்சத் துணிவு கொண்ட ஒரு புதுமைப் பெண்ணைக் கண்டு வியக்கின்றோம். திரௌபதியை மனத்தில் கொண்டுதான் பாரதி "புதுமைப் பெண்" என்ற கவிதையைத் தொடுத்தனரோ என்று கூட நினைக்கத் தோன்றுகின்றது.

கண்ணனை அவன் வாழ்ந்த காலத்தில் தெய்வம் என்று நினைத்தவர்களுள் திரௌபதியும் ஒருத்தி. தன்னால் துச்சாதனின் கயமைச் செயலினின்றும் விடுவித்துக் கொள்ள முடியாது என்றும், அவையோர் கையாலாகாத கபோதிகள் என்றும் தெளிந்தும் இவள் கண்ணனைச் சரண் அடைகின்றாள்.

> உட்சோ தியிற் கலந்தாள்—அன்னை
> உலகத்தை மறந்தாள் ஒருமை யுற்றாள்.[9]

என்று சரணாகதி தத்துவம் இரத்தினச்சுருக்கமாகக் காட்டப் படுகின்றது. பலனும் கையிலங்கு நெல்லிக்கனியாகக் கிடைத்து விடுகின்றது.

> கண்ண பிரானருளால்—தம்பி
> கழற்றிடக் கழற்றிடத் துணிபு திதாய்
> வண்ணப்பொற் சேலைகளாம்,—அவை
> வளர்ந்தன, வளர்ந்தன, வளர்ந்தனவே.[10]

கற்புக்கரசி மானங்காக்கப் பெறுகின்றாள்.

வீமனும் அருச்சுனனும் செய்த சபதங்களைத் தொடர்ந்து இப்பத்தினித் தெய்வம் செய்த சபதத்தை கவிஞர் அற்புதமாகக் காட்டுவார்:

---

9. ௸.5.70:292
10. ௸.5.70:300

தேவி திரௌபதி சொல்வாள்:—ஓம்
தேவி பராசக்தி ஆணை யுரைத்தேன்
பாவி துச்சாதனன் செந்நீர்—அந்தப்
பாழ்த்துரி யோதனன் ஆக்கை இரத்தம்
மேவி இரண்டும் கலந்து— குழல்
மீதினிற் பூசி நறுநெய் குளித்தே
சீவிக் குழல் முடிப்பேன் யான்—இது
செய்யுமுன் னேமுடியேன் என்றுரைத்தாள்.[11]

இங்குக் கவிஞர் திரௌபதியையே பராசக்தியாகக் காண்கின்றார் போல் தோன்றுகின்றது. அவர் மனம் சுதந்திர தேவியின் தரிசனத்தை எதிர் நோக்கி இருத்தல் போலவும் தோன்றுகின்றது. நம்நாடு சுதந்திரம் அடைந்ததற்கு முன்பு பாடிய காவியம் அல்லவா? இப்படிக் காவிய நாயகி சிறந்த முறையில் காட்சி அளிக்கின்றாள். கவிஞர் பழைய இதிகாசப் பாத்திரத்தையே புதுமெருகூட்டி அற்புதப் படைப்பாக்கி விடுகின்றார். பாமர மக்கள் மனத்தில் ஊறிக்கிடந்த 'திரௌபதி அம்மன்' என்ற கருத்து நம் கவிஞருக்குக் கை கொடுத்து உதவியிருப்பதாக எண்ணுவதில் இருவேறு சிந்தனை இருக்க முடியாது.

---

11. ஷை. 5.73:307

# காவியத்தின் எதிர்த்தலைவன்: துரியோதனன்

இராமகாதையில் இராவணன் எதிர்த்தலைவனாக அமைந்திருப்பதுபோல் 'பாஞ்சாலி சபதம்' என்ற இச்சிறு காவியத்திற்குத் துரியோதனன் எதிர்த்தலைவனாக அமைகின்றான். காவியத்தில் நடைபெறும் அடாத செயல்கட்கெல்லாம் இவனே பெருவிசையாக — முதன்மைக் கருவியாக— அமைந்திருப்பதால் இவனை எதிர்த்தலைவனாகக் கொள்வது பல்லாற்றானும் பொருந்தும். இவன் கண்ணிலான்— திருதராட்டிரனுக்கு முதல் மகன். திருதராட்டிரன் நல்ல அமைச்சரவையைக் கொண்டு நல்லாட்சி புரிய முயன்றாலும் அனைத்துச் செயல்களிலும் இவன் கைதான் .ஓங்கி நிற்கின்றது. இதனால்தான் கவிஞர் இவனை,

> தந்தைசொல் நெறிப்படியே—இந்தத்
> தடந்தோள் மன்னவன் அரசிருந்தான்[1]

என்று குறிப்பிடுகின்றார். இவன் அரவக் கொடி உயர்த்தி ஆட்சி புரிந்து வந்ததாக அறிகின்றோம்.

துரியோதனன் தீய குணங்களின் இருப்பிடமாகத் திகழ்பவன். பொது மக்கள் மனத்தில் 'வணங்கா முடி' என்ற திரு

---

1. பா.ச. 1.4:17.

நாமத்தால் நிலைத்து வாழ்பவன். சிற்றூர்களில் பாரதம் படிக்கும் பெரியோர்கள் இவன் உள்ளங்காலிலும் உரோமம் முளைத்திருப்பதாகச் சொல்லிக் கிண்டல் செய்வர். அந்த அளவுக்குக் கால்களைப் பயன்படுத்தாத 'காலி' என்று சுட்டு வர். இவனைக் கவிஞர் 'முடி பணி வறியான்'[2] என்றே குறிப் பிடுவர். பல இடங்களில் இங்ஙனம் பொது மக்கள் கருத்தினைக் காவியத்தில் பொதிய வைத்துக் கவிதையைக் கவின்பெறச் செய்வர்.

நெஞ்சத் துணிவுடைய இவன் உடல் வலியை,

'கரியோ ராயிரத் தின்—வலி
காட்டிடு வோன் என்றக் கவிஞர்பிரான்
பெரியோன் வேதமுனி —அன்று
பேசிடும் படிதிகழும் தோள்வலி யோன்[3]

என்று கவிஞர் காட்டுவர். இவன் அரசவையில் அறம் அறிந்த அந்தமில் புகழுடைய வீட்டுமன், வந்தனை பெருங்குரவர் (துரோணர், கிருபர்) மெய்ந்நெறியுணர்ந்த விதுரன் முதலி யோர் இருந்தனர். இதனைக் கவிஞர்,

கேள்வி பல உடையோர்,
கேடிலா நல்லிசையோர்,
வேள்வி தவங்கள்
மிகப் புரிந்த வேதியர்கள்
மேலோர் இருக்கின்றார்.[4]

என்று வேறோர் இடத்தில் காட்டுவர். இன்று மாநில அரசு களிலும் மைய அரசிலும் உள்ள அமைச்சர்கள் தலைமை யமைச்சர், முதல் அமைச்சர்களிடம் வாயடைத்துப் போய் வாளா இருப்பதுபோல் இவர்களும் 'வாக்கின்றி—செல்வாக் கின்றி'த் திகழ்கின்றனர்! துரியோதனும் எல்லாச் செயல்களை

2. ஷை.1.4:16
3. ஷை. 1:4.16
4. ஷை.5.63:35-37

யும் தந்தையைக் கலந்தே செய்வதாகவே வெளித்தோற்றம்! வள்ளுவர் சித்திரித்துக் காட்டும் 'கயமை' எல்லாக் காலத்து மக்கள் சிலரிடமும், எல்லா நாட்டு மக்கள் சிலரிடமும் இருக்கும் பண்புதானே. இந்தக் கயமைப் பண்பு இதிகாச மாந்தர்களிடமும் இருப்பதாகக் காட்டுவர் கவிஞர்கள்.

எல்லா நலன்களையும் பெற்றவன்தான் துரியோதனன் எண்ணில்லாத பொருட்குவை அவனுக்கு உண்டு; யாங்கணும் செலும் சக்கர மாண்பும் அவனிடம் இருந்தது. தானை பலத் திற்கும் குறைவு இல்லை. தானும் 'ஆயிரம் யானை வலி கொண்டவன்'தான்'. எனினும், அவனுடைய 'காய்ந்த நெஞ்சு' அவனைப் பலவாறு ஆட்டி வைக்கின்றது. அவன் நெஞ்சு பொறாமை அலைகளால் எற்றுண்டு கிடப்பதைக் கவிஞர் மிக அற்புதமாகக் காட்டுகின்றார்.

'பாண்டவர் முடியுயர்த்தே—இந்தப்
பார்மிசை யுலவிடு நாள்வரை, நான்
ஆண்டதோர் அரசாமோ?—எனது
ஆண்மையும் புகழுமோர் பொருளா மோ?
காண்டகு வில்லுடை யோன்—அந்தக்
காளை அருச்சுனன் கண்களி லும்
மாண்டகு திறல்வீ மன்—தட
மார்பிலும் எனதிகழ் வரைந்துள தே![5]

என்று துரியோதனின் பொறாமையைக் காட்டும் அழகிய சொல்லோவியம். இதனைத் தொடர்ந்து வரும் பகுதிகள் அவனது நெஞ்சக் குமுறலை நிரல் பட எடுத்தோதுகின்றன. இந்த நெஞ்சக் குமுறலைச் சொற்களால் எடுத்தோதும் பகுதி களும் மனங்கவர் முறையில் மாண்புற அமைந்துள்ளன. இறுதியர்கச் சகுனியிடம் கூறுவான்:

5. ஷை. 1.5:20

பேச்சை வளர்த்துப் பயனொன்று
 மில்லை, என் மாமனே!— அவர்
பேற்றை அழிக்க உபாயஞ் சொல்வாய்
 என்றன் மாமனே!
தீச்செயல் நற்செயல் ஏதெனினும்
 ஒன்று செய்து, நாம்—அவர்
செல்வங் கவர்ந்த வரைவிட
 வேண்டும் தெருவினிலே.[6]

என்று தன் உள்ளக்கிடக்கையை வெளியிடுவான்,

துரியோதனன் உலகியலை நன்கு அறிந்தவன். பண பலத்தால் எதையும் இந்த உலகில் சாதித்துக் கொள்ள முடியும் என்ற கொள்கையில் மிக்க உறுதியுடையவன் நெய்க் குடத்தையும் தேன் குடத்தையும் எறும்புகள் ஏறியும் சுற்றியும் திரிவனபோல, பணக்காரர்கள் அருகில் பத்துப்பேர் சுற்றித் திரிவதை நன்கு கண்டவன்.

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்[7]

என்று வள்ளுவர் கூறுவது போல், அறிவில்லாதார், இழிகுலத்தார் இவர்களிடம் நிதிமிக்கிருந்தால் அவர்களைப் பொருட்படுத்தி எல்லாரும் கிறப்புச் செய்தலை நேரில் கண்டு அறிந்தவன்.

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில்[8]

என்ற வள்ளுவத்தின் கருத்தினை நன்கு தெளிந்தவன். தன் உள்ளக் கிடக்கையை எல்லாம் சகுனியிடம் சொல்லும்போது

6. ஷை. 1:6:52
7. குறள்-751
8. ஷை- 759

நிதிசெய் தாரைப் பணிகுவர் மானிடர் மாமனே!
-எந்த
நெறியி னாலது செய்யினும், நாயென நீள்புவி
துதிசெய் தேயடி நல்குதல் கண்டனை மாமனே
- வெறுஞ்
சொல்லுக் கேயற நூல்கள் உரைக்கும் துணி
வெலாம் [9]

என்று கூறுவான். இன்றைய உலகில் இதைத்தானே காண்கின்றோம்? அரசியல் வாதிகள், அரசியல் அலுவலர்கள், வணிகர்கள், தரகர்கள், பிறர் இவர்கள் யாவரும் நாடோறும் தகாத முறைகளில் பணம் பண்ணுவதையும், இதனால் விலையேற்றம் இராக்கெட்டு ஏறுவதைப்போல் ஏறுவதையும், அப்பாவிப் பொதுமக்கள் இவர்கள் தீச் செயலால் சொல்லொணா அவல முறுவதையும் நாம் அன்றாடம் காணும் காட்சிகளன்றோ?

துரியோதனன் நெஞ்சுறுதி மிக்கவன். நினைத்த செயலை எவ்வாறேனும் முற்ற முடியக் கொண்டுசெலுத்தும் திறமை மிக்கவன். பேச்சிலும் சதுரன். திரிதராட்டிரன் எடுத்துக் கூறும் அறிவுரைகளுக்கும் செவி கொடுத்தான் இலன். அவை யாவும் இவனுக்குச் செவிடன் காதில் ஊதின சங்கொலிகள் போலாகின்றன. சகுனி அருகிலிருக்க முன்னிலைப் புறமொழியாகப் பேசுகின்றான்:

வேம்பு நிகரிவ னுக்குநான்; சுவை
மிக்க சருக்கரை பாண்டவர்; - அவர்
தீம்பு செய்தாலும் புகழ்கின்றான் - திருத்
தேடினும் என்னை இகழ்கின்றான்

... ... ... ... ...

9. ஷெ .1 :6. 49

—பிறர்

செந்திருவைக் கண்டு வெம்பியே-உளம்
　　தேம்புதல் பேதமை என்கின்றான்;
தந்திரந் தேர்ந்தவர் தம்மிலே - எங்கள்
　　தந்தையை ஒப்பவர் இல்லைகாண்!

மாதர்தம் இன்பம் எனக்கென்றான்; - புவி
　　மண்டலத் தாட்சி அவர்க்கென்றான்; - நல்ல
சாதமும் நெய்யும் எனக்கென்றான் - எங்கும்
　　சாற்றிடும் கீர்த்தி அவர்க்கென்றான்; - அட
ஆதர விங்ஙனம் பிள்ளைமேல்-வைக்கும்
　　அப்பன் உலகினில் வேறுண்டோ?[10]

இவ்வாறு பல்வேறு விதமாகத் தந்தையைக் 'கிண்டல்' செய்தவன் தந்தையை நோக்கி,

—உயிர்ச்

சோதரர் பாண்டவர் தந்தைநீ - குறை
　　சொல்ல இனியிட மேதையா!

என்று எள்ளல் குறிப்புடன் பேசுகின்றான். சற்றுத் தாழ்ந்து செல்பவன்போல் தன்னைக் காட்டிக் கொண்டு தொடர்ந்து பேசுவான்.

சொல்லின் நயங்கள் அறிந்திலேன், - உனைச்
　　சொல்லில் வெல்ல விரும்பிலேன்; - கருங்
கல்லிடை நாருரிப் பாருண்டோ? - நினைக்
　　காரணங் காட்டுத லாகுமோ? - என்னைக்
கொல்லினும் வேறெது செய்யினும், - நெஞ்சில்
　　கொண்ட கருத்தை விடுகிலேன்; - அந்தப்
புல்லிய பாண்டவர் மேம்படக் - கண்டு
　　போற்றி உயிர்கொண் டுவாழ்கிலேன்[11]

10. ஷெ 1. 10: 56, 88, 89
11. ஷெ. 1.:10. 90

என்று தன் நெஞ்சுறுதியைக் காட்டுவான். மேலும் தொடர்ந்து பேசுகின்றான்:

வாது நின்னொடு தொடுக்கிலேன்; - ஒரு
வார்த்தைமட் டுஞ்சொலக் கேட்பையால்:-ஒரு
தீது நமக்கு வராமலே - வெற்றி
சேர்வதற் கோர்வழி யுண்டு, காண்!- களிச்
சூதுக் கவரை யழைத்தெல்லாம் - அதில்
தோற்றிடுமாறு புரியலாம்; - இதற்
கேதுந் தடைகள் சொல் லாமலே - என
தெண்ணத்தை நீகொளல் வேண்டுமா.[12]

மீண்டும் தந்தை அறவுரை கூற, அதற்கிவன்,

எந்தை, நின்னொடு வாதிடல் வேண்டேன்
என்று பன்முறை கூறியும் கேளாய்:
வந்த காரியங் கேட்டிமற் றாங்குன்
வார்த்தை யின்றிஅப் பாண்டவர் வாரார்?
இந்த வார்த்தை உரைத்து விடாயேல்
இங்கு நின்முன் என்ஆவி இறுப்பேன்[13]

என்று தந்தை துணுக்குறப் பேசுகின்றான். தொடர்ந்து,

போர்செய்வோ மெனில் நீதடுக் கின்றாய்;
புவியினோரும் பழிபல சொல்வார்,
தார்செய் தோளிளம் பாண்டவர் தம்மைச்
சமரில் வெல்வதும் ஆங்கெளி தன்றாம்;
யார்செய் புண்ணியத் தோநமக் குற்றான்
எங்க ளாருயிர் போன்றஇம் மாமன்;
நேர்செய் சூதினில் வென்று தருவான்;
நீதித் தருமனும் சூதில்அன் புள்ளோன்[14]

---

12. ஷை. 1.10: 91
13. ஷை. 1. 13:97.
14. ஷை. 1.13: 104

என்று தடை விடைகளுடன் உரைக்கின்றான். இத்துடன் விட்டானா? அதிர்வெடி வைப்பது போல்,

'ஐய சூதிற் கவரை அழைத்தால்
ஆடி உய்குதும், அஃதியற் றாயேல்
பொய்யன் றென்னுரை; என்னியல் போர்வாய்;
பொய்ம்மை வீறென்றுஞ் சொல்லிய துண்டோ;
நைய நின்முனர் என்சிரங் கொய்தே
நானிங் காவி இறுத்திடு வேனால்;
செய்ய லாவது செய்குதி[15]

என்று பேசி முடிக்கின்றான். திருதராட்டிரனும் நெஞ்சம் உடைந்து, மகன் இழுத்த வழிக்கு ஏகுகின்றான். என்ன செய்வது?

விதிசெயும் விளைவி னுக்கே - இங்கு[16]
வேறு செய்வார் புவிமீ துளரோ?

பாரதியார் துரியோதனனை வெறும் அயோக்கியனாக மட்டிலும் மெருகு கொடுத்துக் காட்டவில்லை இக் காவியத்தில் இவன் தனது மறத் தொழிலுக்கும் பொறாமைக்கும் ஓர் அரசியல் தத்துவத்தையே அடிப்படையாக வைத்துக் கொண்டு செயலாற்றுவதாகக் கவிஞர் இவனை நமக்கு அறிமுகம் செய்து வைக்கின்றார்,

மன்னர்க்கு நீதி ஒருவகை;- பிற
மாந்தர்க்கு நீதிமற் றோர்வகை[17]

... ... ... ... ...

குழைதல் என்பது மன்னவர்க் கில்லை;
கூடக் கூட்டப்பின் கூட்டுதல் வேண்டும்;

---

15. ஷை. 1: 13: 106
16. ஷை. 1. 14: 107
17. ஷை. 1.11: 87

பிழையொன் றேஅர சர்க்குண்டு, கண்டாய்;
பிறரைத் தாழ்த்து வதிற்சலிப் பெய்தல்[18]
வெல்வதெங் குலத்தொழி லாம்; - எந்த
விதத்தினில் இசையினும் தவறிலை காண்
நல்வழி தீயவழி - என
நாமதிற் சோதனை செயத்தகு மோ?
செல்வழி யாயினு மே - பகை
தீர்த்திடல் சாலுமென் றனர்பெரி யோர்[19]

என்று தன் 'அரசியல் கொள்கைத் துளிகளைச்' சிதறவிடுகின்றான். இக்காலத்தில் மெக்கியவல்லி, ஹிட்லர், முஸ்ஸோலினி போன்ற அரசியல்வாதிகளை அறிந்த நமக்கு 'இவர்களும் துரியோதனனுக்கு முன் எம்மாத்திரம்?' என்று எண்ணும்படித் தோன்றுகின்றது.

துரியோதனனுடன் 'ஒத்து ஊதும்' சகுனியும் திருதராட்டிரனிடம் துரியோதனின் உட்கிடக் கையைச் சொல்லும் பொழுது,

நீபெற்ற புத்திர னேயன்றோ?—மன்னர்
நீதி யியல்பி லறிகின்யான்,— ஒரு
தீபத்தில் சென்று கொளுத்திய—பந்தம்
தேசு குறைய எரியுமோ?—செல்வத்
தாபத்தை நெஞ்சில் வளர்த்திடல்— மன்னர்
சாத்திரத் தேமுதற் சூத்திரம்:—பின்னும்
ஆபத் தரசர்க்கு வேறுண்டோ — தம்மில்
அன்னியர் செல்வம் மிகுதல்போல்'[20]

---

18. ஷை. 1. 13: 160
19. ஷை. 1.13: 101
20. ஷை.1.8:64

என்று வரும் பகுதியில் துரியோதனனின் அரசியல் தத்துவத்தின் 'வாடை' வீசுகின்றது. பொறாமைத் தீயின் கொழுந்தும் புலனாகின்றது.

சகுனி நாட்டைப்பணயப் பொருளாக வைத்து ஆடுமாறு தருமனைக் கேட்கும்பொழுது விதுரன் கூறிய அறிவுரைக்கு மறுமொழி கூறும் போக்கில், துரியோதனன் "நன்றி கெட்ட விதுரா, நாணமற்ற விதுரா" என்றெல்லாம் மரியாதைக் குறைவாகவும், சிற்றப்பனென்றும், முக்கியமான அமைச்சன் என்றும் பாராமல் ஏசிப் பேசுவதில் இவனுடைய கீழ்த்தரமான பண்பினைக் காண முடிகின்றது.

அன்பி லாத பெண்ணுக்கு—இதமே
ஆயி ரங்கள் செய்தும்
முன்பின் எண்ணு வாளோ? —தருணம்
மூண்ட போது கழிவாள்;
வன்பு ரைத்தல் வேண்டா—எங்கள்
வலி பொறுத்தல் வேண்டா
இன்ப மெங்க ணுண்டோ —அங்கே
ஏகிடு[21]

என்று கூறுவதில் இதனைக் காண்கின்றோம்.

துரியோதனன்திரௌபதியைத் தன் தம்பியைக் கொண்டு மன்றுக்கு இழுத்து வரச் செய்து அவளை உலகம் கேட்டிராத முறையில் அவமானம் செய்தது கயமையின் கொடு முடியாகும். சிற்றப்பனை நோக்கி,

செல்வாய் விதுரா! நீ சிந்தித் திருப்பதேன்?
வில்வாள் நுதலினாள், மிக்க எழிலுடையாள்,
முன்னே பாஞ்சாலர் முடிவேந்தர் ஆவிமகள்,
இன்னேநாம் சூதில் எடுத்த விலைமகள்பால்

21. ஷை 3.41:212

*சென்று விளைவெல்லாம் செவ்வனே தானுணர்த்தி*
*"மன்றிடை யுள்ளான் நின்மைத்துனன் நின் ஓர் தலைவன்.*
*நின்னை அழைக்கின்றான் நீள்மனையில் ஏவலுக்கே"*
*என்ன உரைத்தவளை இங்குக் கொணர்வாய்*[22]

என்று கூறுவதில் நாகரிகமற்ற தன்மையும் கயமையும் பளிச்சிடுகின்றன. குடும்ப நலத்தின்பொருட்டும் உலக நலத்தின்பொருட்டும் தன் பொறுமையை இழக்காமல் தனியாக துரியோதனனுக்கும் பொதுவாககௌரவர்கட்கும் அறிவுரை, அறவுரை கூறுகின்றான். இதனைச் செவிமடுக்காது பாஞ்சாலியை அழைத்து வருமாறு தேர்ப்பாகனை அனுப்புகிறான் துரியோதனன். அவனும் சென்று இயலாமையுடன் திரும்புகின்றான். பின்னர் துச்சாதனனை அனுப்ப, அந்த நீசன் பாண்டவர்தம் தேவியின் நீண்ட குழலைப் பற்றி இழுத்து வந்து துகிலுரிந்து அவமானப்படுத்தினதை நாம் அறிவோம். இச்செயல்கட்கெல்லாம் பொறுப்பாளி சுயோதனன் அன்றோ?

---

22. ஷை 4.56: 252.அடி 36-43

# பிற காவிய மாந்தர்கள்

கதையில் வரும் நிகழ்ச்சிகளின் உயர்வு காவியமாந்தர்களின் தகுதியால் சிறப்படையக் கூடியதாக அமையும். பாரதத்திலுள்ள கதை மாந்தர்களின் குண நலன்கள்பற்றி நாம் ஓரளவு நன்றாகவே அறிந்துள்ளோம். ஆனால், 'பாஞ்சாலி சபதத்தில்' பாரதி அவர்கட்குப் புது மெருகு ஊட்டியிருப்பதில் ஒரு தனிப்பட்ட உயிர்த்தத்துவம் மிளிர்கின்றது. பாரதி காட்டும் காவிய மாந்தர்களின் குண நலன்களைப்பற்றி ஒரு சிறிது காண்போம்.

**க. திருதராட்டிரன்** வில்லி திருதராட்டிரனை ஓர் அயோக்கியனாகவே காட்டுகின்றார் என்று சொல்ல வேண்டும். 'விரகினுக் கோர் வீடு போல்வான்' என்பது வில்லி காட்டும் திருதராட்டிரனைப்பற்றிய சொல்லோவியம். இங்கு தந்தையைக் கேட்காமலேயே துரியோதனன் மண்டபம் சமைத்து விடுகின்றான். மண்டப வேலை முற்றுப் பெற்றபின் தன் மனக் கருத்தைத் தந்தையிடம் வெளியிடுகின்றான். அதனைக் கேட்ட தந்தை மகிழ்வடைவதுபோல் காட்டுகின்றார் வில்லி.

மகன் மொழி நயந்து கேட்டு
　　வாழ்வுறு தந்தை தானும்
'மிகநயந் துருகி நல்ல
　　விரகினால் வெல்ல றுற்றீர்!

அகநெடும் போர்செய் தாலும்
ஐவரை அடக்கொ ணாது;
சகுனியை யன்றி வேறார்
தரவல்லார் தரணி'' என்றான்.[1]

என்று கூறும் தந்தையைக் காண்கின்றோம். இங்குச் சகுனியின் சூழ்ச்சியைத் திருதராட்டிரன் மெச்சிப் பாராட்டுகின்றான். மைந்தன் கருத்துப்படியே பாண்டவர்களை அழைத்து வருமாறு விதுரனை இந்திரப் பிரத்தத்துக்கு அனுப்பி வைக்கின்றான்.

ஆனால், பாரதியார் காட்டும் திருதராட்டிரனோ ஓர் உத்தமன்.

வெற்றி வேற்கைப் பரதர்தங் கோமான்
மேன்மை கொண்ட விழியகத் துள்ளோன்,
பெற்றி மிக்க விதுரன் அறிவைப்
பின்னும் மற்றொரு கண்ணெனக் கொண்டோன்
முற்று ணதிரித ராட்டிரன்[2]

என்பது கவிஞர் காட்டும் திருதராட்டிரனைப்பற்றிய சொல்லோவியம். புறக்கண் செயற்படாவினும் சிந்தித்து உணரும் அகக்கண் இவனுக்கு உண்டென்பது கவிஞரின் மதிப்பீடு. மற்றொருகண் விதுரனின் அறிவு. விதுரனைக் கலந்து நன்கு சிந்தித்துதான் செயற்படுவான் என்று கவிஞர் நமக்கு இவனை அறிமுகப்படுத்துகின்றார். இவன் தன் மைந்தனின் மனக் கருத்தைச் சகுனி மூலம் அறிகின்றான். சினம் பொங்கி எழுகின்றது. சகுனியை நோக்கி,

1, வில்லிபாரதம்—சூதுப்போர்-49
2. பா. ச. 1.10:84

—அட
பிள்ளையை நாசம் புரியவே—ஒரு
பேயென நீவந்து தோன்றினாய்;—பெரு

வெள்ளத்தைப் புல்லொன் றெதிர்க்குமே?—இள
வேந்தரை நாம்வெல்ல லாகுமோ?[3]

என்று கூறுகின்றான். மேலும் அவன்,

சோதரர் தம்முட் பகையுண்டோ?—'
சுற்றத்திலே பெருஞ் செற்றமோ?'

என்றும் கேட்கின்றான். இதற்கு முன் ஆயிரம் சூழ்ச்சியால் பாண்டவரை அழிக்க முயன்றதையும் அவை யாவும் அந்தச் சிதரன் தண்ணருளாலும், பாண்டவர் தம் சீலத்தாலும், புய வலியாலும் பயன்படாது போனமையையும் எடுத்துக் காட்டுகின்றான். இவர்கள் செய்வதெல்லாம் வீணாக முடியுமென்றும், அவை சான்றோர் கருத்துக்கு மாறானவை என்று கூறுபவன்,

நொள்ளைக் கதைகள் கதைக்கின்றாய் —பழ
நூலின் பொருளைச் சிதைக்கின்றாய்[4]

என்கின்றான்.

—மனக்
கவலை வளர்த்திடல் வேண்டுவோர்—ஒரு
காரணம் காணுதல் கஷ்டமோ?[5]

என்றும் கேட்கின்றான்.

---

3. ஷை 1.9:71
4. ஷை. 1.9:73
5. ஷை. 1.9:77

ஆதிப்பசம் பொருள்தான் கண்ணன் வடிவில் தோன்றியுள்ளது என்பது அவன் கண்ட உண்மை; நம்பிக்கை. அவன் கூறுவான்:

> "ஆதிப் பரம் பொருள் நாரணன்;—தெளி
> வாகிய பாற்கடல் மீதிலே—நல்ல
> சோதிப் பணாமுடி யாயிரம்— கொண்ட
> தொல்லறி வென்னுமோர் பாம்பின்மேல்—ஒரு
> போதத் துயில்கொளும் நாயகன்.—கலை
> போந்து புவிமிசைத் தோன்றினான்—இந்தச்
> சீதக் குவளை விழியினான்—என்று
> செப்புவர் உண்மை தெளிந்தவர்.[6]

அப்பரம் பொருள் துணை இருக்கும்வரைப் பாண்டவர்களை ஒன்றும் செய்ய இயலாது என்பது அவனுக்குத் தெரியும். கண்ணனைப்பற்றிச் சகுனியிடம் தான் கூறுவது ஒரு பேய்க்கு வேதம் உணர்த்துவது போலாகும் என்று பேசுகின்றான்.

தன் அறிவுரைகள் யாவும் தன்மைந்தன் காதில் ஏற வில்லை. 'கல்லாத புல்லர்க்கு நல்லோர் உரைத்த பொருள் போல்' ஒரு காதினுள் நுழைந்து மற்றொரு காது வழியாக வெளியேறிவிடுகின்றது; மைந்தன் மனவுறுதியை அவற்றால் அசைக்க முடியவில்லை. ஆகவே, மைந்தன் கருத்துக்கு ஒருப்படுகின்றான்.

> 'விதி! விதி! விதி! மகனே—இனி
> வேறெது சொல்லுவன் அட மகனே!
> கதியுறுங் கால னன்றோ—இந்தக்
> கயமக னெனநினைச் சார்ந்து விட்டான்?
> கொதியுறு முளம் வேண்டா; நின்றன்
> கொள்கையின் படிஅவர் தமைஅழைப்பேன்;
> வதியுறு மனைசெல் வாய்'[7]

6. ஷை 1.1:81
7. ஷை 1.14:108

என்று வழியுங்கண்ணீரொடு விடைகொடுத் தனுப்புகின்றான்.

பாண்டவர்களையும் பாஞ்சாலியையும் விருந்துக்கு அழைத்து வருமாறு விதுரனைத் தூது அனுப்பி வைக்கின்றான் திருதராட்டிரன். விருந்துபற்றிக் கூறும் பேச்சினிடையில்,

………"சகுனி சொற் கேட்டே
பேயெனும் பிள்ளை கருத்தினிற் கொண்ட
தீச்செயல் இஃதொன்றையும் குறிப்பாற்
செப்பிடுவாய்'[8]

என்றும் பணிக்கின்றான். இதனால் திருதராட்டிரனது நல்ல பண்புகளையும் அவன் தன் தம்பி மக்கள்மீது கொண்ட அன்பையும் பரிவையும் காண்கின்றோம். அவர்களைத் "தன் உயிராகக்" கொண்ட பெருமையினையும் பார்க்கின்றோம்.

உ. தருமன்: இவன் பாண்டவர் ஐவர்களில் மூத்தவன். வில்லிபாரதத்தில் இவன் 'ஞானக் கஞ்சுகன்' என்று போற்றப் பெறுவன். பாரதியார் இவனை,

நூல்வ கைபல தேர்ந்து தெளிந்தோன்
மெய்ய றிந்தவர் தம்மு ளுயர்ந்தோன்[9]

என்றும், 'தாமரைக் கண்ணன் யுதிட்டிரன்' என்றும், புண்ணியம் மிக்க தருமன் என்றும் காட்டுவார், மேலும் இவர்,

---

8. ஷை 1.16:113.
9. ஷை 2.36:181

குன்றினிலே ஏற்றிவைத்த விளக்கைப் போலக்
குவலயத்திற் கறம்காட்டத் தோன்றினாய்![10]

என்று தம்பிமார்களின் வாயில்வைத்துப் பேசுவர். சகுனி கூட இவனை 'அறத் தோன்றல்!' என்று விளிக்கின்றான். வில்லிபாரதம் 'நச்சுப் பொய்கைச் சருக்கத்தில்' யமனே இவனது அற உணர்வைச் சோதித்து உலகிற்கு உணர்த்துகின்றான். இவனது அறஉணர்வை இவன் வாயில் வைத்தே கவிஞர் பேசுவார். சகுனி இவனைச் சூதுக்கழைத்தபோது இவன் கூறும்,

ஐய, செல்வம் பெருமை இவற்றின்
காத லால்அரசு ஆற்றுவன் அல்லேன்;
காழ்ந்த நல்லறம் ஓங்கவும் ஆங்கே
ஓத லானும் உணர்த்துத லானும்
உண்மை சான்ற கலைத்தொகை யாவும்
சாதலின்றி வளர்ந்திடு மாறும்
சகுனி, யானரசு ஆளுதல் கண்டாய்[11]

என்ற மறுமொழிப் பகுதியில் இவன் 'அறத்திற்கோர் உருவம் போல்வான்' என்ற நிலையிலிருப்பதை அறியலாம். மேலும் இவன்,

என்னை வஞ்சித்தென் செல்வத்தைக் கொள்வோர்
என்ற னக்கிடர் செய்பவ ரல்லர்,
முன்னை நின்றதோர் நான்மறை கொல்வார்
மூது ணர்விற் கலைத்தொகை மாய்ப்பார்,
பின்னை என்னுயிர்ப் பாரத நாட்டில்
பீடை செய்யும் கலியை அழைப்பார்.
நின்னை மிக்க பணிவொடு கேட்பேன்;
நெஞ்சிற் கொள்கையை நீக்குதி.[12]

---

10. ஷை 1.25:143
11. ஷை 2.34:173
12. ஷை 2.34:174

என்று சகுனியை வேண்டுகின்றான். தனக்குக் கேடு இழைப் பதைப்பற்றிக் கவலை கொள்ளாதவன் உலக நியதியும் நாட்டு நீதியும் நான்மறை உண்மையும் சீரழிவதற்குக் கவலை கொள்கின்றான். நல்லரசையும் அதனை ஆள் வோரை அழிப்பதால் நாட்டிற்கேற்படும் நலிவுகளையும் காட்டும் தருமன் பேச்சில் நல்லாட்சி கொண்ட பாரதம் பிறர்க் கடிமையுற்று அடைந்த அல்லல்களை மறைமுகமாகக் கவிஞர் புலனாக்குவதைக் காணலாம்.

இவ்வளவு அறவுணர்வு மிக்கவன் 'கவறாடல்' என்ற தீச் செயலில் இறங்கலாமா? என்ற வினா எழுகின்றது. 'இருமை யும் கெடுப்பதுவாம் இந்த இழி தொழில்' என்பதை நன் கறிந்தும் இச் சூதினை ஏற்கலாமா?

தேவ லப்பெயர் மாமுனி வோனும்
செய்ய கேள்வி அசிதனும் முன்னர்
காவ லர்க்கு விதித்த தந்நூலிற்
கவறும் நஞ்செனக் கூறினர்[13]

என்று பேசுபவன் 'சிறுமை பல செய்து சீரழிக்கும் சூதில்'[14] பங்கு கொள்ளலாமா? என்றெல்லாம் கருதுகின்றோம். 'வல்லுக் கழைத்திடில் மன்னர் மறுக்கக் கூடாது' என்பது ஒரு பழைய வழக்கு. இதனைச் சகுனி எடுத்துக் காட்டிச் 'சாத்திரம் பேசும்' தருமனைக் கிண்டல் செய்கின்றான். மேலும் அவன்,

தேர்ந்தவன் வென்றிடு வான்; - தொழில்
தேர்ச்சில் லாதவன் தோற்றிடுவான்;
நேர்ந்திடும் வாட்போரில் - குத்து
நெறிஅறிந் தவன்வெலப் பிறனழிவான்;

---

13. ௸ : 2. 34: 171
14. குறள் - 935

ஓர்ந்திடு சாத்திரப் போர் - தனில்
உணர்ந்தவன் வென்றிட, உணராதான்
சோர்ந்தழி வெய்திடுவான்;—இவை
சூதென்றும் சதிஎன்றும் சொல்வாரோ?[15]

என்று தனது கொள்கைக்கு அரண் அமைத்துக் கொள்ளுகின்றான். இத்துடன் விட்டானா?

வல்லமர் செய்திடவே - இந்த
மன்னர்முன் னேநினை அழைத்துவிட்டேன்,
சொல்லுக வருவதுண் டேல் - மனத்
துணிவிலை யேலதும் சொல்லு' கென்றான்[16]

தருமனுக்கு வாய் ஓடவில்லை; சகுனியின் சவால் அழைப்பை ஒரு கௌரவப் பிரச்சினையாக ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று.

பொய்ய தாகுஞ் சிறுவழக் கொன்றைப்
புலனி லாதவர் தம்முடம் பாட்டை
ஐயன் நெஞ்சில் அறமெனக் கொண்டான்.[17]

என்கின்றார் கவிஞர். தருமனும், 'வெய்யதான விதியை நினைந்தான்'. அற உணர்வையும் மாற்றும் ஆற்றலுடையது விதி என்ற உண்மையையும் உணர்த்துகின்றார் கவிஞர். இதனை வற்புறுத்தும் முறையில்,

மதிய னும்விதி தான்பெரி தன்றோ?
வைய மீதுள வாகு மவற்றுள்
விதியி னும்பெரி தோர்பொரு ளுண்டோ?
மேலை நாம்செய்யுங் கர்மமல் லாதே.

---

15. ஷை: 2. 35: 176
16. ஷை: 2:35:177
17. ஷை. 2. 36: 178

நதியி லுள்ள சிறுகுழி தன்னில்
நான்கு திக்கி லிருந்தும் பல்மாசு
பதியு மாறு, பிறர் செய்யுங் கர்மப்
பயனும் நம்மை அடைவ தொன்றன்றோ?[18]

என்று கூறி அதற்கு அரியதோர் உவமையின் வாயிலாக ஒரு நியாயத்தையும் காட்டுகின்றார் கவிஞர்.

எவ்வளவு அறவுணர்வு மிக்கோனாயினும் தவறான வழியில் இறங்கி விட்டால் தடம் மாறாமல் போக வேண்டியதுதான் என்பதற்குத் தருமன் ஓர் எடுத்துக்காட்டாக அமைகின்றான். குடிவெறியும் காம வெறியும் மேலும் மேலும் அப்பாதையை விட்டு விலக முடியாமல் செய்வது போலவே, சூதுப் பழக்கமும் அந்நெறியிலேயே கொண்டு செலுத்தும். 'இழத்தொறூஉங் காதலிக்கும் சூது' என்பார் வள்ளுவப் பெருந்தகை. தருமனும் அவ்வழியில் இறங்கி செல்வம், நாடு முதலியவற்றை யெல்லாம் இழந்து தம்பியரையும் தன்னையும் - ஏன் தன் துணைவியையும் - வைத்திழக்கும் எல்லைக்குப் போய்விடுகின்றான்.

பொறுமைக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்குபவன் தருமன். எல்லாவற்றையும் இழந்த நிலையில் கர்ணன் 'மார்பிலே துணியைத் தாங்கும் வழக்கம் கீழ் அடியார்க்கில்லை. யாரடா பணியாள்! பாண்டவர் மார்பிலேந்தும் சீரையும் களைவாய்; தையல் சேலையும் களைவாய்' என்று கூறும்போதும், திரௌபதி அவையில் போந்து, 'விதியோ கணவரே! அம்மி மிதித்து அருந்ததியைக் காட்டி எனை, வேதச் சுடர்த்முன் வேண்டி மணம் செய்து, பாதகர்முன் இந்நாள் பரிசழிதல் காண்பீரோ?' என்று கேட்கும்போதும் தருமன் ஊமையன்போல் ஒன்றும் பேசாதிருக்கின்றான்.

18. ஷை. 2. 36: 182

'தருமனும் மற்றாங்கே தலை குனிந்து நின்றிட்டான்' என்று கவிஞர் குறிப்பிடுவர். பொறுமை உணர்வு இவனைப் பல் வேறு விதமாகத் தடுத்து நிறுத்தி விடுகின்றது, பாஞ்சாலி யின் மானம் பறிபோவதை நேரில் பார்த்திருந்தும் வாய்மூடி மௌனியாகவே காணப்பெறுகின்றான்: வீமனும் அருச்சுன னும்தான் சபதம் வெகுண்டு எழுந்து செய்கின்றனர்.

இவ்வளவு நற்பண்புகளும் பெருமையும் கொண்ட தருமனைத் துரியோதனாதியர் மதிக்க வில்லை.

கிழவியர் தபசியர் போல்-பழங்
கிளிக்கதை படிப்பவன, பொறுமை யென்றும்
பழவினை முடிவென்றும் - சொலிப்
பதுங்கிநிற் போன்மறத் தன்மையிலான்;
வழவழ தருமன்[19]

என்பது இவனைப்பற்றிய துரியோதனனின் மதிப்பீடு.[20] பாண்டவர்களின் பெருமையையும் புகழையும் கண்டு அழுக் காறு கொண்டு பேசுகின்ற பேச்சு இது. இணக்க வணக்கம் இல்லாதவர்கள் இக் காலத்தில் எதையும் தான்தோன்றித் தனமாக பேசுவதைப் போல் அக்காலத்தில் இவர்கள் நிலையில் இருந்து பேசுகின்றான் துரியோதனன். எனினும் பாரதியார் காட்டும் தருமன்,

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல்.[21]

என்று வள்ளுவர் கூறும் வாய்மொழிக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்பவன் என்பதற்கு இவன் எள்ளளவும் ஐயம் இல்லை.

---

19. ஷை 1. 5:25
20. இங்குக் கவிஞர் பழமை, பழவினை என்று பேசி முயற்சியின்றிக் கொன்னே காலத்தைக் கழிக்கும் மூடரை வைகின்றதாகவும் கொள்ளலாம்.
21. குறள் - 158

௩. விதுரன்: இவன் திருதராட்டிரன் அமைச்சரவையில் இருந்த நல்லவர்களுள் ஒருவன். கண்ணிலானின் கடைசித் தம்பி. இவனை வில்லி 'வென்றிறல் விதுரன்' என்று கூறுவர். பாரதியார் இவனை 'மெய்ந்நெறி யுணர் விதுரன் என்று காட்டுவர். திருதராட்டிரன் ஆட்சியில் அக்கண்ணி லானுக்கு இவன் ஒரு கண்போல் துணைபுரிபவன். பாண்டவர் களைப் பாஞ்சாலியுடன் மறு விருந்திற்கழைத்து வர இவனைத்தான் திருதராட்டிரன் இந்திரப் பிரத்தத்திற்குத் தூதாக அனுப்பி வைக்கின்றான். துரியோதனனின் தீச் செயலைப்பற்றிக் கண்ணிலான் குறிப்பிடுங்கால்,

> போச்சுது! போச்சுது! பாரத நாடு!
> போச்சுது நல்லறம்! போச்சுது வேதம்!
> ஆச்சரி யக்கொடுங் கோலங்கள் காண்போம்
> ஐய இதனைத் தடுத்தல் அரிதோ?[22]

என்று பெருந்துயர் கொள்வதைக் காண்கின்றோம். இக் கூற்றில் 'மெய்ந் நெறியுணர் விதுரன்' நமக்குக் காட்சி தரு கின்றான்.

பாண்டவர்கள்பால் இவன் பேரன்பு கொண்டவன்; அவர்களும் இவன்பால் பெருமதிப்பு கொண்டிருந்தனர். விதுரன் தம் நகர் வரும் செய்தியறிந்து அவனைச் சதுரங்க சேனையுடன் பல பரிசும் தாளமும் கொண்டு எதிர் கொண் டழைத்தலாலும், மணிமுடி தாழ்த்திபதமலர்போற்றி வணங் குதலாலும், 'மதுரமொழியில் குசலங்கள் பேசுவதாலும்' இவன்மீது அவர்கள் கொண்டிருந்த பெருமையை அறிய முடிகின்றது. விதுரனும் ஐவரையும் தனியாக அழைத்துச் சென்று துரியோதனன் மண்டபம் கட்டியதையும், அதில் பாண் டவர்களைச் சூதுக் கழைக்கும் திட்டத்தையும் அறிவித்து

22. ஷை. 1. 16: 113

எச்சரிப்பதால் பாண்டவர்கள்மீது இவன் கொண்டிருந்த பேரன்பு தெளிவாகின்றது. மேலும், திருதராட்டிரன் தன் மைந்தனுக்கு உரைத்த நீதிகள் பலவற்றையும், அவன்'மது மிகுத்துண்டவன்போல் ஒரு வார்த்தையையேபற்றிப் பிதற்று வதையும்' தெளிவாக எடுத்துரைக்கின்றான்.

கௌரவர்களிடம் இவனுக்குப் பாசம் இல்லை யென்று சொல்லுவதற்கில்லை. இவன் அவர்களிடம் அன்பு காட்டு வது அவர்கள் தகாத முறையில் செயற்படும்போதுதான். வள்ளுவப் பெருந்தகை நட்புபற்றி.

நடுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு[23]

என்று கூறுவது உறவுடையார் இடித்துக் கூறி அன்பு காட்டு வதற்கும் பொருந்தும். எல்லாவற்றையும் இழந்து நிற்கும் தருமனை நோக்கி,

நாடிழக்க வில்லை,—தருமா
நாட்டை வைத்திடு[24]

என்று சகுனி கூறுவதைக் கேட்டு வெகுண்ட இவன்,

ஐய கோஇதை யாதெனச் சொல்வோம்?
அரச ரானவர் செய்குவ தொன்றோ?
மெய்ய தாகவோர் மண்டலத் தாட்சி
வென்று சூதினில் ஆளுங் கருத்தோ?
வையம் இஃது பொறுத்திடு மோ?மேல்
வான்பொ றுத்திடுமோ?பழி மக்காள்!
துய்ய சீர்த்தி மதிக்குல மோநாம்?
தூ! வென் றெள்ளிச்[25]

23. குறள் - 784
24. ஷை. 2. 37:195
25. ஷை. 2. 38:196

'சொல்லுகின்றான். கௌரவர்களை நோக்கிப் பேசுவது: 'நீங்கள் செய்யும் அடாத செயல்களைப் பாண்டவர்கள் பொறுத்தாலும் பொறுக்கலாம். பைந்துழாயானும் பாஞ் சாலத்தானும் வெஞ்சினங் கொண்டு உங்களை வேருடன் ஒழித்துக் கட்டுவறன்றோ?'' என்று கூறியவன் அவையி லிருந்த குருகுல வேந்தர்கள் அனைவரையும் நோக்கி,

"மாண்டு போரில் மடிந்து நரகில்
மாழ்கு தற்கு வகைசெயல் வேண்டா''[26]

என்று எச்சரிக்கின்றான். மேலும், பேசுகின்றான்: "சந்திர குலம் அழிவெய்துவதற்கென்றே துரியோதனனை விதி நம் மிடையே வைத்துள்ளான். அவன் பிறந்தபோது நரிபோல் அலறிக் குரைத்தான். இதனை உணர்ந்த நிமித்திகர் இப் பாலகனால் கலகந்தோன்றும் என்று வருவதுரைத்தார்களல் லவா?'' என்கின்றான். விழியிலாத அண்ணனை நோக்கிப் பேசுவது இது: ' அண்ணா, சூதில் உன்பிள்ளை வென்று உம்ப ருலகப்பேறு பெறுவான் என்று கருதி முகமலர்ச்சியுடன் வீற்றிருக்கின்றாயா? மலை முகட்டிற்குச் சென்ற வேடன் ஒருவன் தான் நழுவி விழுந்து மாயும் மலைச் சரிவு ஒன்று இருப் பதைப் பாராமல் மேலுள்ள தேனில் ஆசை வைத்திருப்பது போல நின் மகன் பாண்டவர்க்குரிய நாட்டின்மீது ஆசை வைத் துள்ளான். நீயும் சூதெனும் கள்ளால் மதி மயங்கிக் காணப் படுகின்றாய். மூடனான சுயோதனனுக்காகப் பாண்டவர் களைப் பாதகத்தில் அழித்திடுகின்றாய். நீ கற்ற கல்வியும் கேள்வியும் கடலில் கரைத்த பெருங்காய மாகின்றதை ஓராய். வீட்டிலே நரியைவிடப் பாம்பே மேல் என்று பிள்ளையை வளர்த்து விட்டோம். இனி நீ நரியை விற்றுப் புலிகளைக் கொள்வாய். கூகையையும் காக்கையையும

26. ஷை 2. 38:197

விற்று மயில்களைக் கொள்வாய். கண்கள்தாம் உனக்கு இல்லை யென்றால் காதுகளையும் இழந்தனையோ? காடு 'வா' என்றும், வீடு 'போ' வென்றும் கூறும் இத்தள்ளாத வயதில் தம்பி மக்களின் பொருளை வெஃகுவாயோ? தம்பி மக்கள் நின்னைத் தலைவர் என்று கொண்டனரன்றோ? நீ விரும்பினால் தம் பொருள்களை யெல்லாம் நினக்குத் தான மாகக் கொடுப்பார்களே. அங்ஙனமிருக்க, பாழ்நகரில் வீழ்த்தும் கொடிய செய்கையைத் தொடர்வது என் காரண மோ?''

மேலும் தொடர்கின்றான்: ''நீ குருகுலத் தலைவன். உன் அவையில் கொற்றம் மிக்க துரோணன், கிருபன், புகழ் மிக்கோங்கிய கங்கையின் மைந்தன் இருக்கின்றனர். பேதை யாகிய அடியேனும்தான் இருக்கின்றேன், இப்பெரியார் களின் மதிப்பு இழந்து போகும் நிலையில் சகுனியின் பேச்சு அம்பலம் ஏறுதல் நன்று, நன்று! இச்சிறியோர் அருகில் அவன் 'வீற்றிருக்கத்' தகுதி உள்ளவனா? அவனை வெற்பிடை விரட்டுவது தான்[27] தகுதியான செயல் ஆகும். நெறியல்லா நெறிசென்று வாழ்வதில் இன்பம் உண்டாகும் எனக் கருதுதல் வேண்டா. அறிவு கெட்ட சகுனியின் சூதால் புண்ணியரான பாண்டவர்களைப் பகைவர்களாகிக் கொள்வல்தகுமா? உலகெல்லாம் நம்மைச் 'சிறியர்' 'பாதகர்' என்று ஏச, நீ அதனை உகந்து அரசாள விரும்புகின்றாயா? சூதை மேலும் தொடராமல் நிறுத்துக; நீ வாழ்க'' என்று தன் உரையை முடிக்கின்றான். துரியோதனன் தன் அற வுரையை ஏற்கான் என்று தெரிந்தே அறவுரை கூறுகின்றான்.

---

27 கவிஞரின் குறிப்பு: காந்தாரத்து மலை நாட்டிலிருந்து வந்தவனாதலால், சகுனியை மீட்டும் 'அவனது மலை நாட்டுக்கு அனுப்பி விடுக' என்று சொல்லியது.

விதுரன் எதிர்ப்பார்த்த படியே துரியோதனன் இவன் அறவுரையை ஏற்கவில்லை. மாறாகச் சிறியதந்தைமீது வசை மாரி பொழிகின்றான். இவற்றையும் பொறுத்துக்கொண்டு மீண்டும் அறம் உரைக்கின்றான் விதுரன். நெறியறியா மன்னன் ஒருவன் அரசர் அவையில் வடுச் சொல் கூறி ஏசினாலும் உண்மை நெறியொழுகும் அமைச்சன் அணுவளவும் குழப்பம் அடையான். இந்நிலையில் விதுரன் பேச்சு: "மகனே, நின்னை நல்வழியில் திருப்ப நினைத்தேன். ஆனால் விதி என்னைப் புறம் தள்ளுகின்றது. கடுஞ் சொற்கள் பொறுக்காத மென்மைக் காதும்,கருங்கல்லில் விடந்தோய்ந்த நெஞ்சும் கொண்டோர் நிகழ்ச்சி தோன்றும் முன்னரே அழிவர். ஆனால், பால்போலும் தேன்போலும் இனிமையாகப் பேசுவோர் அழிவுக்கு வழி காட்டுவர். நன்மையை நாடுவோர் பசப்பு மொழி பகரார் காண். நீயோ நெடுமரம்போல் வளர்ந்து விட்டாய்; இடித்துரைப்போர் மொழி நின் செவியில் ஏறுவதில்லை. நின் அவையில் அறம் உரைக்கும் பார்ப்பார் அமைச்சராக இருப்பதற்குத் தகுதி பெற்றிலர்! கச்சணிந்த வேசை மாதர், சிறுமைக்குத் தலை கொடுக்கும் தொண்டர், குலங்கெட்ட புலை நீசர், முடவர், பித்தர் இவர்களே நினக்கு அமைச்சராக இருப்பதற்குத் தகுதி பெற்றவர்கள்."

"நான் நின்னோடு இருந்தாலும் நின்னை விட்டு அகன்றாலும் எனக்கு வருவது ஒன்று மில்லை. இதுகாறும் கூறியவை நினக்கு அன்று. அவையில் வீற்றிருக்கும் மன்னர், பார்ப்பார், மதியில்லா அண்ணன் (நின் அப்பன்) இவர்கட்காகவே எடுத்துரைத்தேன். நடப்பவை இன்றோடு முடிவதில்லை. எதிர் காலத்தில் என்னென்ன வரும் என்பதை யான் அறிவேன். நின் பிதாமகன் வீட்டுமனும் அறிவான். அவனோ ஆசைகளை வென்ற யோகியாகிப் பேசாதிருக்

கின்றான். விதியின் செயல்களை நன்கு அறிந்தவன் ஆயினும், நின்னிடம் நான் ஒரு பேதை போலாகி விட்டேன். நின் சதி வழியைத் தடுத்து அறவுரைகள் சொன்னேன். அவை யாவும் நினக்கு வீணுரைகளாகி விட்டன. இனிப் பேசிப் பயனொன் றில்லை. நின் மதி வழியே சென்று பயன் பெறுக'' என்று கூறி வாய் மூடி, தலைகுனிந்து, அமர்ந்து விடுகின்றான். கண்மூடி மௌனியாகி ஒரு தலையாட்டி பொம்மைபோல் அரசவையில் ஓர் அமைச்சனாக இருக்க விரும்பாதவன் இப் பெருமகன்.

பின்னர் திரௌபதியை அவைக்குக் கொணருமாறு துரியோதனன் தன்னை ஏவும்போது அவன் உரைக்கும் அறவுரை கன்னெஞ்சத்தையும் உருகச் செய்யும். ஆனால் இவ்வுரையைக் கேட்ட மூடன் துரியோனன் இவனுக்குத் தந்த பரிசு இது:

'சீச்சீ! மடையா, கெடுகநீ
எப்போதும் எம்மைச் சபித்தல் இயல் புனக்கே
இப்போதுன் சொல்லை எவரும் செவிக் கொள்ளார்?[28]

என்பதுதான். இவன் நோக்கமெல்லாம் மாபாரதப் போர் இல்லாமல் மன்பதை உய்ய வேண்டும் என்பதுதான். இச் சிறிய காவியத்தில் விதுரன் படைப்பு நம் கவனத்தை நன்கு ஈர்க்கக் கூடியதாகும்.

ச. வீமன்: ஒளி மறைவு இல்லாமல் திரௌபதிக்கு உதவுபவன். எளியவர், வலுவற்றர் இவர்கள் பொருட்டும் உதவுபவன். தருமனுக்கு அடுத்த தம்பியாகக் குந்தியிடம் பிறந்தவன் இவன். கவிஞர் இவனைத் தருமன் வாய்மொழியாக அறிமுகம் செய்யும்போது,

28. ஷெ 4.57:252 - (79-81).

ஐவர் தமக்கொர் தலைவனை—எங்கள்
ஆட்சிக்கு வேர்வலி அ.·.தினை,—ஒரு
தெய்வம்முன் னேநின் றெதிர்ப்பினும்—நின்று
சீறி அடிக்கும் திறலனை, – நெடுங்
கைவளர் யானை பலவற்றின்—வலி
காட்டும் பெரும் புகழ் வீமன்[29]"

என்று காட்டுவர்.

விதுரன்மூலம் பெரிய தந்தை விடுத்த அழைப்பை ஏற்று, தருமன் அத்தினபுரம் செல்லத் தீர்மானித்து விடுகின்றான். பயணத்திற்கு ஆயத்தம் செய்யுமாறு வீமனைப் பணிக்கின்றான் தருமக் கோமான். இந்த ஆணையைக் கேட்ட வீமன் திகைத்துப் போகின்றான். காரணம், விதுரன் பேச்சிடையே மொழிந்திட்ட துரியோதனின் சூழ்ச்சிக் குறிப்பை உன்னிப்பாகக் கேட்டவனல்லவா? அருச்சுனனை நோக்கி ஆவேசத்துடன் பேசுகின்றான்: "தம்பீ, மாமனும் மருகனும் இணைந்து நம்மை அழித்திடக் கருதி இவ்வழியைத் தொடர்கின்றனர். தாமதம் வேண்டாம்; அண்ணன் சொல்லுவது 'தகும் தகும்.' நாம் படையுடன் செல்வோம். பார்த்தா, இந்தப் பகை இன்று நேற்று ஏற்பட்டதல்ல; இது நெடுநாட் பகை கண்டாய். இந்த நினைவிலேயே பல நாட்களைக் கழித்து விட்டேன். ஒரு கிருமியை அழிப்பதற்குக் காத்திருப்பார் உளரோ? கெடுவான் கேடு நினைப்பான். பாதகம் நினைப்பவர் அழியுங் காலம் நெருங்கி விட்டது. விடுநாண் கோத்திடுவாய். வில்லினுக்கும் சரியான இரை வாய்த்து விட்டது போர்க் கோலம் பூணுவோம். தந்தையும் மகனுமாக யாரிடம் தம் புலைமைகளை அவிழ்க்கின்றனர்? இவர் தம் அடாத செயலை எத்தனை நாள் பொறுப்பது?

---

29. ஷை 3.45:236

இவரோடு ஒத்து வாழ வழி ஏது? இருநெருப்பினுக்கிடையில் நாம் விறகோ?'' இங்கு வீமனின் உட்கிடக்கையைக் காட்டு கின்றார் கவிஞர்.

துச்சாதனன் திரௌபதியை மன்றுக்கு இழுத்து வருங் கால், அவள் அம்புபட்ட மான்போல் அழுது துடிதுடிக்கின் றாள்; ஆடைகுலைவுற்று நிற்கின்றாள்; 'ஆ' வென்று அழுது துடிக்கின்றாள் அவளது மைகுழல்பற்றி இழுக்கும் துச்சாதனனை வீமன் காண்கின்றான். அவனது வெஞ்சினம் கரைமீறி எழுகின்றது. தருமனை நோக்கிப் பேசுகிறான்:

சூதர் மனைகளிலே—அண்ணே!
தொண்டு மகளி ருண்டு
சூதில் பணய மென்றே—அங்கோர்
தொண்டச்சி போவதில்லை.

ஏது கருதி வைத்தாய்? அண்ணே
யாரைப் பணயம் வைத்தாய்?
மாதர் குலவிளக்கை—அன்பே
வாய்ந்த வடிவழகை.

பூமி யரச ரெல்லாம் – கண்டே
போற்ற விளங்கு கின்றாள்,
சாமி, புகழினுக்கே— வெம்போர்ச்
சண்டனப் பாஞ்சாலன்.

அவன் சுடர்மகளை—அண்ணே!
ஆடி யிழந்து விட்டாய்
தவறு செய்து விட்டாய்—அண்ணே!
தருமங் கொன்று விட்டாய்

சோரத்திற் கொண்டதில்லை;—அண்ணே!
சூதிற் படைத்த தில்லை

வீரத்தினாற் படைத்தோம்—செம்போர்
வெற்றியினாற் படைத்தோம்;

சக்கர வர்த்தி யென்றே—மேலாந்
தன்மை படைத் திருந்தோம்;
பொக்கென ஓர் கணத்தே—எல்லாம்
போகத் தொலைத்து விட்டாய்,

நாட்டையெலாந் தொலைத்தாய்;—அண்ணே,
நாங்கள் பொறுத்திருந்தோம்;
மீட்டும் எமையடிமை—செய்தாய்;
மேலும் பொறுத் திருந்தோம்.

துருபதன் மகளைத்—திட்டத்
துய்நன் உடன்பிறப்பை
இருபகடை என்றாய்,—ஐயோ!
இவர்க் கடிமை யென்றாய்![30]

இவ்வாறு பேசுபவன் சகாதேவனை நோக்கி,

இது பொறுப்ப தில்லை,—தம்பி!
எரிதழல் கொண்டுவா;
கதிரை வைத்திழந்தான்—அண்ணன்
கையை எரித்திடுவோம்.[31]

என்று ஆணை இடுகின்றான். திரௌபதி படுகின்ற அவமானத்தை, ஏனைய நால்வரும் பார்த்துக் கொண்டு வாளா இருக்க, இவன் ஒருவன்தான் துடிக்கின்றான்.

கண்ணன் திருவருளால் திரௌபதியின் சேலை வளரத் தொடங்குகின்றது. தொழும்பத் துச்சாதனும் கைசோர்ந்து

---

30. பா. ச. 5.66: 273-281
31. ஷை. 5.66: 281

மெய்சோர்ந்து தரையில் வீழ்கின்றான். இதனைக் காணும் வீமன்தான் முதலில் சபதம் செய்கின்றான்:

—'இங்கு
விண்ணவ ராணை பராசக்தி யாணை;
தாமரைப் பூவினில் வந்தான்—மறை
சாற்றிய தேவன் திருக்கழ லாணை;
மாமகளைக் கொண்ட தேவன்—எங்கள்
மரபுக்கு தேவன் கண்ணன் பதத்தாணை;
காமனைக் கண்ணழலாலே—சுட்டுக்
காலனை வென்றவன் பொன்னடிமீதில்

'ஆணையிட் டிஃதுரை செய்வேன்;—இந்த
ஆண்மை யிலாத்துரி யோதனன் தன்னை
பேணும் பெருங்கன லொத்தாள்—எங்கள்
பெண்டு திரௌபதி யைத்தொடைமீதில்
நாணின்றி 'வந்திரு' என்றான்—இந்த
நாய்மக னாந்துரி யோதனன் தன்னை;
மாணற்ற மன்னர்கண் முன்னே,—என்றன்
வன்மையி னால்யுத்த ரங்கத்தின் கண்ணே,

'தொடையைப் பிளந்துயிர் மாய்ப்பேன்;—தம்பி
சூரத்துச் சாதனன் தன்னையு மாங்கே
கடைபட்ட தோள்களைப் பிய்ப்பேன்;—அங்கு
கள்ளென ஊறும் இரத்தம் குடிப்பேன்;
நடைபெறுங் காண்பி ருலகீர்!—இது
நான்சொல்லும் வார்த்தை என்றெண்ணிடல்
வேண்டா!
நடையற்ற தெய்வத்தின் வார்த்தே!—இது
சாதனை செய்க பராசக்தி' என்றான்.[32]

32. ஷை 5. 71: 303—305

இந்தச் சபதத்தினால் இவன் திரௌபதியின்மீது வைத் திருந்த கரை கடந்த அன்பும், இக்கொடுஞ் செயல்கட்கெல் லாம் காரணமாக இருந்த துரியோதன்மீதும், இச்செயல்களை நிறைவேற்றி வைத்த துச்சாதனன்மீதும் இவன் கொண் டிருந்த சீற்றமும் புலனாகின்றன. இக்காவியத்தில் அப்பழுக் கற்ற செயல் திறம் வாய்ந்த கதை மாந்தன் இவன்.

ருீ. **அருச்சுனன்:-** இவன் பாண்டவர்களுள் குந்திவயிற்றில் உதித்த மூன்றாவது மகன்; வீமனுக்கு இளையவன். 'வில்லுக்கு விசயன்' என்று புகழ பெற்ற இவன்தான் தன்னுடைய விற்றொழில் திறனால் மச்சக் குறியை வீழ்த்தி திரௌ பதியைக் கைப்பிடித்தவன். திருதராட்டிரன் அழைப்பை ஏற்று தருமன் அத்தினபுரத்திற்குச் செல்லத் தீர்மானித்ததை வீமனும் விசயனும், காமனும் சாமனும் ஒத்தவர்கள், அண்ணன் சொல்லைத் தட்டிப் பணிவுடன் மறுத்தபோது தருமன் பல நீதிகளையும் விதியின் விளையாட்டையும் எடுத்துரைத்தபின் இருவரும் பயணத்திற்கு ஒப்புக் கொள்ளு கின்றனர்.

இதுகாறும் அருச்சுனனைப் பெயரளவில் சுட்டிய கவிஞர் சூதாட்டத்தின்போதுதான் தருமன் வாய்மொழி யாக நமக்கு அறிமுகம் செய்து வைக்கின்றார்; அருச்சுனனைப் பற்றித் தருமனின் மதிப்பீட்டையும் காட்டி விடுகின்றார். பார்த்தனைப் பணயப் பொருளாக வைக்கப்படும்போது தான் இவன் பெருமையையும் திறமையையும் நாம் காண முடிகின்றது. தருமன் கூறுவான்:

'சிங்க மறவர் தமக்குள்ளே-வில்லுத்
 தேர்ச்சியி லேநிக ரற்றவன்—எண்ணில்
இங்குப் புவித்தலம் ஏழையும்—விலை
 யீடெனக் கொள்ளத் தகாதவன்

'கண்ணனுக் காருயிர்த் தோழனாம்—எங்கள்
கண்ணினும் சால இனியவன்
வண்ணமும் திண்மையும் சோதியும்—பெற்று
வானத்தமரரைப் போன்றவன்—அவன்
எண்ணரு நற்குணம் சான்றவன்—புக
ழேறும் விசயன் பணயங் காண்!

என்ற கவிதைப் பகுதியில் அருச்சுனனைப்பற்றிய சொல் லோவியத்தைக் காண்கின்றோம். 'கண்ணனுக்கு ஆருயிர்த் தோழனாம்' என்ற தொடரால் இவர்கள் நர-நாராயணர் களாகத் தோன்றி சீடனும் ஆசாரியனுமாக நின்று இவ் வுலகிற்கு வைணவர்களின் மூலமந்திரமாகிய 'திருமந்திரம்' தத்த வரலாற்றையும், பாரதப் போர் தொடங்குவதற்கு முன்னர்க் கண்ணன் சாரதியாக அருச்சுனனின் தேர்த்தட்டி லிருந்து கொண்டு கீதை உரைத்த வரலாற்றையும் குறிப்பாக நமக்கு அறிய வைக்கின்றார் கவிஞர்.

பாண்டவர்கள் அத்தினபுரம் செல்லும் பயணத்தின் போது சேனையுடன் ஒரு பொழிலிடையே தங்க நேரிடு கின்றது. மாலை நேரம். பார்த்தன் பாஞ்சாலியைத் தனி யிடத்திற்கு இட்டுச் சென்று அவள் தன் தொடைமீது மெல்லச் சாய்ந்திருக்கப் பரிதியின் எழிலை விளக்குகின்றான். இந்நிகழ்ச்சி சித்திரகூட பர்வதத்தில் சீதைக்கு இராமன் பல காட்சிகளைக் காட்டும் நிகழ்ச்சியை நினைக்கச் செய் கின்றது. இங்கு நாம் அருச்சுனனைக்காவியத்தில் இரண்டாம் முறையாகச் சந்திக்கின்றோம். கவிஞர் பார்த்தன் வாய்மொழி யாகச் சில அற்புதமான கவிதைகளை வழங்குகின்றார். இக் கவிதைகளுள் சிலவற்றை இந்நூலில் பிறிதோர் இடத்தில் கண்டு மகிழலாம்.

---

33. ஷெ 3. 47: 232-233

துச்சாதனன் பாஞ்சாலியை அவைக்கு இழுத்து வரும் அவல நிலையைக் காணும் வீமனின் வெஞ்சினம் கரைமீறி எழுந்து,

'கதிரை வைத்திழந்தான்-அண்ணன்
கையை எரித்திடு வோம்'[34]

என்று சகாதேவனை நோக்கிப் பேசும்போது அதனை எதிர்த்துச் சொல்லும் வில்விசயனைக் காண்கின்றோம்.

'மனமாறச் சொன்னாயோ? வீமா! என்ன
வார்த்தைசொன்னாய்? எங்குசொன்னாய்? யாவர் முன்னே?
கனமாருந் துருபதனார் மகளைச்; சூதுக்
களியிலே இழந்திடுதல் குற்ற மென்றாய்;
சினமான தீஅறிவைப் புகைத்த லாலே
திரிலோக நாயகனைச் சினந்து சொன்னாய்.

"தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்
தருமம் மறுபடி வெல்லும்" எனுமியற்கை
மருமத்தை நம்மாலே உலகம் கற்கும்
வழிதேடி விதிஇந்தச் செய்கை செய்தான்;
கருமத்தை மேன்மேலும் காண்போம்; இன்று
கட்டுண்டோம், பொறுத்திருப்போம், காலம் மாறும்;
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்;
தனுஉண்டு காண்டிவம் அதன் பேர்

என்று நெருக்கடி நிலையிலும் மன அமைதி குலையாதிருக்கும் அருச்சுனனைக் காண்கின்றோம். பின்னர், கண்ணனின் கீதையைக் கேட்கும் பரிபக்குவ மனநிலையைக் கொண்டவன் என்பதை ஒருவாறு ஊகமும் செய்கின்றோம்.

34. ஷை 5. 66: 281
35. ஷை 5. 67: 282-283

இறுதியாக, காவியத்தின் இறுதியில் வீமனுக்கு அடுத்து சபதம் செய்தவன் இக் கோமகன். இதனைக் கவிஞர்,

பார்த்தன் எழுந்துரை செய்வான்:- 'இந்தப்
பாதகக் கர்ணனைப் போரில் மடிப்பேன்.
தீர்த்தன் பெரும்புகழ் விஷ்ணு-எங்கள்
சீரிய நண்பன் கண்ணன் கழலாணை;
கார்த்தடங் கண்ணி எந்தேவி-அவள்
கண்ணிலும் காண்டிவ வில்லினும் ஆணை;
போர்த்தொழில் விந்தைகள் காண்பாய்,—ஹே!
பூதலமே! அந்தப் போதினில்' என்றான்.[36]

என்று காட்டுவர். பார்த்தன் தன் காண்டிவத்தையே தெய்வ மாகக் கொண்டவன். அதனை இகழ்பவர் எவராயிருந்த போதிலும் கொல்லாது விடான். அதனால்தான் அதனையும் தெய்வமாக எண்ணிச் சபதம் செய்கிறான்.

சா. சகுனி : 'சூதும் பொய்யும் உருவெனக் கொண்ட துட்ட மாமன்' என்று இவனை அறிமுகம் செய்து வைக்கின்றார் கவிஞர். இன்னும் 'ஈன மாமன்' என்றும், 'அருளற்ற சகுனி', 'மோசச் சகுனி', 'திருகு நெஞ்சச் சகுனி', 'தீய சகுனி', 'கள்ளச் சகுனி', என்றும் சுட்டி உரைக்கின்றார். பிறிதோர் இடத்தில்,

புன்தொழில் கவறதனில்—இந்தப்
புவிமிசை இணையிலை எனும்புகழான்
நன்றறி யாச்சகுனி[37]

என்று காட்டுவர். கவிஞர் மேலும் இவனைப் பேச்சில் சதுர னென்றும், வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல் தன்

---

36. ஷெ. 5. 72 : 306
37. 2. 31 : 164.

கருத்தைப் பிறர் மனம் நோகாதபடி அவரிடம் உரைக்க வல்லவன் என்றும் காட்டுவர்.

சூதே இவன் கற்ற வேதம். பஞ்சவர் வீரத்தைப் பெரிதென மதிப்பிட்டவன்; ஒரு பார்த்தன் கை வில்லுக்கு எதிர் ஒன்றுமில்லை என்பதை நன்கு அறிந்தவன். தன் கொள்கையை இவ்வாறு கூறுவான்:

நாடும் குடிகளும் செல்வமும் எண்ணி
நானிலத் தோர்கொடும் போர்செய்வார்;—அன்றி
ஓடும் குருதியைத் தேக்கவோ?—தமர்
ஊன்குவை கண்டு களிக்கவோ?—அந்த
நாடும் குடிகளும் செல்வமும் —ஒரு
நாழிகைப் போதினில் சூதினால்—வெல்லக்
கூடுமெனிற்பிறி தெண்ண லேன்?—என்றன்
கொள்கை இது'[38]

என்பதாக. துரியோதனன் தன் நிலையை நைந்து கூறிய போது, தான் அவனுக்கு வெற்றி தருவதாக உறுதி கூறுகின்றான். ஓர் அழகிய மண்டபம் சமைக்குமாறும் அந்த மண்டபத்தைக் காணும் வகையில் பாண்டவர்களை விருந்திற்கு அழைக்குமாறும், அப்படி வருபவர்களைத் சூதுக் கழைத்துத் துரியோதனன் கருத்தை முடிப்பதாகவும் தெரிவிக்கின்றான்.

வண்டரை நாழிகை யொன்றிலே—தங்கள்
வான்பொருள் யாவையும் தோற்றுனைப்—பணி
தொண்ட ரெனச்செய் திடுவன்யான்—என்றன்
சூதின் வலிமை அறிவை நீ[39]

என்பது அவன் சூழ்ச்சியின் சாரம்.

---

38. ஷை 1. 7; 56
39. ஷை 1. 7 : 54

இந்த உலகில் மந்திர வாதிகளும் தந்திர வாதிகளும் வல்லவர்களாக இருப்பர். சகுனி ஒரு தந்திரவாதி. பேச்சில் திறமை மிக்கவன். இவனும் துரியோதனனும் திருதராட்டிரனிடம் வருகின்றனர். துரியோதனனுக்காகப் பரிந்து பேசும் பேச்சில் இவன் திறமையைக் காணலாம். அவன் கூறுவான் : 'ஐயனே, நின் மகன் உடல் வற்றித் துரும்பாகி வாழ்வையே முற்றிலும் வெறுக்கின்றான். சரியாக உண்பதில்லை; சரியாக உடுத்துவதுமில்லை. நண்பர்களோடு சரியாக உறவாடுவதில்லை; நாரியர்களையும் நச்சுவதில்லை'' என்று கூறித் தன் பேச்சைத் தொடங்குகின்றான். பல்வேறு வகையில் தந்தை மைந்தனிடம் குழைந்து பேசி,

மன்னும்அப் பாண்டவர் சோதரர்—இவை
வாய்த்தும் உனக்குத் துயருண்டோ?[40]

என்று முடிக்கும்போது அரவக் கொடியோன் அரவெனச் சீறி தன்னை மீறிப் பலவாறு பிதற்றத் தொடங்கியபோது அவன் சீற்ற மொழிகளைப் பொறுக்குமாறு வேண்டுவதில் இவனது நளினத்தைக் காணலாம்.

தன்னுளத் துள்ள குறையெலாம்—நின்றன்
சந்நிதி யிற்சென்று சொல்லிட—முதல்
என்னைப் பணித்தனன்; யானிவன்—றனை
இங்கு வலியக் கொணர்ந்திட்டேன்; பிள்ளை
நன்னய மேசிந்தை செய்கின்றான்; —எனில்
நன்கு மொழிவ தறிந்திலன்;—நெஞ்சைத்
தின்னுங் கொடுந்தழல் கொண்டவர்—சொல்லுஞ்
செய்தி தெளிய உரைப்பரோ?[41]

என்பதில் இவனது தந்திரச் சாயலைக் காணலாம். 'அன்னியர் செல்வம் மிகுதல்போல் அரசர்க்கு ஆபத்து வேறு இருக்குமா?'

40. ஷை 1 : 8 : 61
41. ஷை 1: 8. 63

என்று பேசுகின்றான். இராச சூயப் பெரு வேள்வியில் துரியோதனன் பட்ட அவமானத்தையும் இவனை நீக்கிக் கண்ணனுக்கு முதல் மரியாதை தந்ததையும் எடுத்துக்காட்டுகின்றான். பேச்சுக்கிடையில்,

பாண்டவர் செல்வம் விழைகின்றான்;—புவிப்
பாரத்தை வேண்டிக் குழைகின்றான்;—மிக
நீண்ட மகிதலம் முற்றிலும்—உங்கள்
நேமி செலும்புகழ் கேட்கின்றான்;—குலம்
பூண்ட பெருமை கெடாதவா—றெண்ணிப்
பொங்குகின் றான்நலம் வேட்கின்றான்-மைந்த
ஆண்டகைக் கிஃது தகுமன்றோ? —இல்லை
யாமெனில் வையம் நகுமன்றோ?

... ... ... ...

ஆரியர் செல்வம் வளர்வதற்கே—நெறி
ஆயிரம் நித்தம் புதியன—கண்டு
வாரிப் பழம்பொருள் ஏற்றுவார்;—இந்த
வண்மையும் நீயறி யாததோ?[42]

என்று துரியோதனன் கொண்ட குறிக்கோளுக்கு ஒரு நியாயம் கற்பிப்பதில் இவனது பேச்சுத் திறனைக் காணலாம்.

சபையில் அமர்ந்திருக்கும் பொழுதில் தருமபுத்திரனைச் சூதுப்போர்க்கு இழுந்த திறன் வியத்தற்குரியது; "அறத் தோன்றல், மன்னர் பலர் நெடும்பொழுதாக நின் வரவினைக் காத்துள்ளனர். வில்தொழிலால் புவி முழுவதையும் வென்று குலத்தினை மேம்படுத்தினீர். சூதுப் போருக்கு வா. நம் வலிமைகள் பார்ப்போம்" என்று அழைப்பு விடுக்கின்றான். தருமபுத்திரன் பல சாத்திர நியாயங்களைக் கூறி மறுத்திடவும், சகுனி அவனை விட்டான் இலன். கூறுகின்றான் :

42. ஷெ 1. 8 : 68, 70

நாத்திறன் மிகஉடை யாய்!—எனில்
நம்மவர் காத்திடும் பழவழக் கை
மாத்திரம் மறந்துவிட்டாய்;—மன்னர்
வல்லினுக் கழைத்திடில் மறுப்பதுண்டோ?

... ... ... ...

வல்லமர் செய்திட வே—இந்த
மன்னர் முன்னேநினை அழைத்து விட்டேன்;
சொல்லுக வருவதுண்டேல்—மனத்
துணிவிலை யேலதுஞ் சொல்லுக![43]

என்று கூறி வல்லுக்கு அழைக்கவும் வேறு வழி இல்லாது தருமனும் ஒருப்படுகின்றான்.

அனைத்தையும் இழந்த தருமனை மீண்டும் சுவை காட்டி ஆடச் செய்கின்றான். துரியோதனன்,

'பரவு நாட்டை யெல்லாம்—எதிரே
பணய மாக வைப்போம்'
'தம்பி மாரை வைத்தே—ஆடித்
தருமன் வென்று விட்டால்
முன்பு மாமன் வென்ற—பொருளை
முழுதும் மீண்டளிப் போம்'[44]

என்று அறிவிக்கின்றான். உடனே சகாதேவன், நகுலன், பார்த்தன் இவர்களையும், இறுதியில் தன்னையும் வைத்து இழக்கின்றான் அறத்திற்கோர் உருவம் போல்வான். சூதில் நுட்பமான அறிவுடைய சகுனி இத்துடன் விட்டானா? பேசுகின்றான்:

43. ஷை 3. 35: 175, 177
44. ஷை 3. 44: 224, 225

—ஒளி
மின்னும் அமுதமும் போன்றவள்—இவர்
மேவிடு தேவியை வைத்திட்டால், அவள்
துன்னும் அதிட்ட முடையவள் —இவர்
தோற்ற தனைத்தையும் மீட்டலாம்.[45]

என்றவுடன் கவிஞர் இதனைத் தாங்க முடியாமல் ''அழிவுற்றது உலகத்து அறமெலாம்'' என்று சருக்கத்தை முடிக்கின்றார். இறுதியில் பாஞ்சாலியையும் இழக்க நேரிடுகின்றது. துரியோதனனும்,

நாச மடைந்த தடா!—நெடுநாட்பகை,
நாமினி வாழ்ந்தோ மடா!
பேசவும் தோன்று தில்லை;—உயிர் மாமனே!
பேரின்பம் கூட்டிவிட்டாய்![46]

என்று மகிழ்ச்சிக் கடலில் மூழ்குகின்றான். இங்ஙனம் சகுனி பாரதப் போருக்கு வித்திடுகின்றான்.

எ. **துச்சாதனன்:** 'சொல்லிடை நஞ்சு கக்கும் துன்மதி யுடைய தம்பி' என்று வில்லி குறிப்பிடும் துச்சாதனனைப் பாரதியார்' தீமையில் அண்ணனை வென்றவன்' என்று காட்டுவார். இவனைப்பற்றிய கவிஞரின் மதிப்பீடு இது:

—கல்வி
எள்ளள வேனுமி லாதவன்; கள்ளும்
ஈரக் கறியும் விரும்பு வோன்;—பிற
தெவ்வர் இவன்றனை அஞ்சுவார்;—தன்னைச்
சேர்ந்தவர் பேயென் றொதுங்குவார்;

45. ஷெ 3. 51: 241
46. ஷெ 4. 53: 250

புத்தி விவேக மில்லாதவன்;-புலி
போல உடல்வலி கொண்டவன்;—கரை
தத்தி வழியும் செருக்கினால்-கள்ளின்
சார்பின் றியேவெறி சான்றவன்;—அவ
சக்தி வழிபற்றி நின்றவன்;—சிவ
சக்தி நெறிஉண ராத வன்—இன்பம்
நத்தி மறங்கள் இழைப்ப வன்;—என்றும்
நல்லவர் கேண்மை விலக்கி னோன்

அண்ண னொருவனை யன்றியே—புவி
அத்தனைக் குந்தலை யாயினோம்—என்னும்
எண்ணம் தனதிடைக் கொண்டவன்,[47]

இத்தகைய தீப் பண்புகளைக் கொண்டவன் 'அண்ணன் ஏது சொன்னாலும் மறுத்திடான்'. அவன் 'வெட்டிவிட்டு வா' என்றால், இவன் 'கட்டிக் கொண்டே' வந்து விடுவான். இந்த 'அருட் கண்ணழிவற்ற பாதகனை' துரியோதனன் திரௌபதியை மன்றுக்கு அழைத்து வருமாறு ஏவுகின்றான்

திரௌபதி யிருந்த மாளிகைக்கு வருகின்றான் இக் கொடியவன். அங்கு நீண்ட துயரில் குலைந்துபோய் நின்றிருந்த நேரிழையைக் காண்கின்றான். அவள் தீண்டலை எண்ணி ஒதுங்கிநிற்க, 'இவன் அடி! செல்வ தெங்கே?' என்று இரைகின்றான். அவளும் துணிவாகவே பேசுகின்றாள்; ஆனால் மைத்துனன் என்று கருதி மரியாதையுடன் 'தம்பி, நீ வந்த செய்தியை விரைவில் சொல்லி நீங்குக' என்றே மொழிகின்றாள். அவன் பேசக் கற்றுக் கொண்ட மிருகம். மனிதப் பண்பு இழந்து இவ்வாறு பேசுகின்றான்:

பாண்டவர் தேவியுமல்லை நீ;—புகழ்ப்
பாஞ்சாலத் தான்மக ளல்லைநீ—புவி
யாண்டருள் வேந்தர் தலைவனாம்-எங்கள்
அண்ணனுக் கேயடி மைச்சி நீ;

---

47. ஷை 5. 61: 264, 265, 266

... ... ... ...

ஆடி விலைப்பட்ட தாதிநீ;-உன்னை
    ஆள்பவன் அண்ணன் சுயோதனன்;'—'மன்னர்
கூடி யிருக்கும் சபையிலே-உன்னைக்
    கூட்டி வரு'' கென்று மன்னவன் -சொல்ல
ஓடி வந்தேனிது செய்திகாண்;—இனி
    ஒன்றுஞ் சொலாதென்னோ டேகுவாய்-அந்தப்
பேடி மகனொரு பாகன் பாற்—சொன்ன
    பேச்சுகள் வேண்டிலன் கேட்கவே.[48]

பாஞ்சாலியோ மீண்டும் 'அச்சா' என்று விளித்து தான் மாத விலக்காக இருப்பதாகவும், தார்வேந்தர் பொற்சபைமுன் தன்னை அழைத்தல் மன்னர் குலத்து மரபு அன்று என்றும் கூறி அவனுடன் ஏக மறுக்கின்றாள்.

காண்டா மிருகம் போன்ற துச்சாதனச் சண்டாளன் 'கக்கக் க'வென்று நகைத்து காரிகையின் கூந்தலினைப் பற்றிக் கரகரவென்று இழுத்துச் செல்லுகின்றான். வழி நெடுக இருப்பவர் யாரும் இவனைத் தடுக்க வில்லை; அவையோரும் மூங்கையர்போல் வாளா இருக்கின்றனர். துச்சாதனன் உலகம் கேட்டிராத முறையில் அன்னையின் துகிலினை மன்றிடை உரிகின்றான். இவற்றால் துச்சாதனின் கயமையைப் புலப்படுத்துவர் கவிஞர்.

அ. **கர்ணன்**: இவன் குந்தியின் முதல் மகன்; குந்தியின் திருமணம் ஆவதற்கு முன்னரே சூரியனைக் கலந்ததால் பிறந்தவன்; அவளால் பெட்டியில் வைக்கப்பெற்று ஆற்றில் விடப்பெற்றவன். திருதராட்டிரனின் தேர்ப்பாகனால் எடுத்து வளர்க்கப்பெற்றவன். இவனது வில்லாற்றலை நன்கு அறிந்த துரியோதனன் அருச்சுனனுக்கு நிகரானவன் இவன் என்று இவனை நண்பனாக்கிக் கொண்டான். 'தேர்ப்பாகன் மகன்' என்ற இழிசொல் நீங்கும்பொருட்டு இவனை அங்க

48 ஷெ 5. 62 : 269-270

நாட்டு மன்னனாக்கினான். இவனும் கொடையில் சிறந்து விளங்கினான். 'கர்ணனுக்குப் பின் கொடையும் இல்லை' என்றபழமொழி பிறப்பதற்கும் காரணமாகின்றான்.

இவனைப்பற்றி இக்காவியத்தில் அதிகமான குறிப்புகள் இல்லை. துரியோதனன் அவையில் இவன் முக்கிய உறுப்பினன். இதனைக் கவிஞர்,

மெந்நெறி வான்கொடை யான்—உயர்
 மானமும் வீரமும் மதியு முளோன்
உய்ந்நெறி யறியாதான் இறைக்கு
 உயிர்நிகர் கன்னனும் உடனிருந்தான்.[49]

என்று குறிப்பிடுவார். துரியோதனுக்கு 'உயிர் நிகர் நண்பன்' என்றும், 'மெந்நெறி வான்கொடையான்' என்றும் குறிப்பிடுவதைக் காண்க. மிக்க அறிவுடையவன்; மானத்தையும் வீரத்தையும் போற்றுபவன் என்பதனைக் காட்டுவதையும் காண்க.

காவியத்தில் இவன் துரியோதனனுக்குப் பதிலாக ஆணை பிறப்பிப்பதனால் இவனுடைய நட்பின் நெருக்கம் தெளிவாகப் புலனாகும். துச்சாதனனால் அவைக்கு இழுத்து வரப் பெற்ற திரௌபதியின் நிலை கண்டு கௌரவர்களில் கடைக்குட்டியான விகர்ணன் நீதியுரைக்கும்போது கர்ணன் அவனை வாயடக்குகின்றான் "தாரணி வேந்தர் யாவரும் நடைபெறுவது சரி என்றெண்ணி வாய் புதைத்திருக்க, நீ பெரிய மனிதன் போல் நியாயம் பேசவந்து விட்டாய். நினக்கு விரகும் இல்லை; அறிவும் இல்லை. பசுமையால் பிதற்றுகின்றாய்; சிந்திக்கத் திறனும் இல்லாதவன் நீ" என்று அவனைத்தட்டிக் கேட்கும் அளவுக்கு உரிமை பெற்றிருந்தான். உடனே பாண்டவர்கள் பக்கம் திரும்பிப் பேசுவான்:

49. ஷை 1.4:18

'மார்பிலே துணியைத் தாங்கும்
வழக்கம்கீழ் அடியார்க் கில்லை,
சீரிய மகளு மல்லள்;
ஐவரைக் கலந்த தேவி.
யாரடா பணியாள்! வாராய்;
பாண்டவர் மார்பி லேந்தும்
சீரையும் களைவாய்; தையல்
சேலையும் களைவாய்'[50]

என்கின்றான். 'மானமும் வீரமும் மதியும்' இருந்தென்ன? போயென்ன? இவையெல்லாம் துட்டர்களின் நட்பால் மறைந்தன; சேர்ந்த இடத்தின் பண்பு ஆழமாய் பற்றிக் கொண்டு விடுகின்றது;

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியலப தாகும் அறிவு.[51]

என்ற வள்ளுவத்திற்கு இலக்கியமாக அமைகின்றான் கர்ணன். அழுக்காறும்அவாவும் வெகுளியும் ஒன்று சேர்ந்து இன்னாச் சொல்லைஇயம்ப வைத்து விடுகின்றன. ஐவரையும் திரௌபதியையும் துகிலுரியுமாறு துரியோதனன் தம்பிக்குப் பணித்ததாக வில்லி கூறுவார்.

திறமை, தகுதி, கொடையினால் மிகுபுகழ் இவையனைத்தும் பெற்றிருந்தும் பெருமிதப் பண்பு இவனிடம் இல்லை. தருமன் செல்வம், நாடு ஆகிய அனைத்தையும் இழந்து நிற்கும் நிலையில் சகுனி தருமனிடம் தம்பியரைப் பணயமாக வைத்து ஆடலாம் என்று கூறும்போது பரிவும் பச்சாதாபமும் மிக்க அவையினர் கண்களின் நீருதிர்க்க இவன் மட்டிலும் "சிரிக்கின்றான்". இச்செயல் இவனது நற்குணங்களையெல்லாம் அழித்து விடுகின்றது.

---

50. ஷை 5.69:290
51. குறள்—452

சு. விகர்ணன்: நூற்றுவர்களில் இவன் கடைக்குட்டி; சேற்றில் பிறந்த செந்தாமரை போல் பண்பிலும் செயலிலும் உத்தமனாகத் திகழ்கின்றான். இவனுடைய படைப்பில் வில்லிக்கும் பாரதிக்கும் அதிக வேற்றுமை இல்லை. திரௌபதியின் அவல நிலையைக் கண்டு அவையிலுள்ளோர் வாயடைத்துப் போய் வாளா இருக்கின்றனர். வீமனின் சினப் பேச்சும் அருச்சுனனின் சாந்தப் பேச்சும் முடிந்த பிறகு விகர்ணன் அரவக் கொடியோன் அண்ணனை வணங்கி நின்று இவ்வாறு பேசுகின்றான்: "அண்ணா, பெண்ணரசி விடுத்த வினாவிற்குப் பாட்டன் சொன்ன பேச்சதனை யான் ஒப்புக் கொள்வேன். பெண்களை விலங்குபோல் எண்ணி அவர்களை என்ன வேண்டுமானலும் செய்திடலாம் என்கின்றான் பாட்டன் பண்டைய வேதநெறி மாறிப் பின்னால் வழங்கும் நெறி இதுதான் என்கின்றான். இது தவறு; பெருந்தவறு.

"பாட்டன் சொன்னதை அப்படியே ஒப்புக் கொண்டாலும் எந்தையர் தம் மனைவியரை (நம் அன்னையரை) விற்பதுண்டோ? இதுகாறும் அரசமாதேவியரைச் சூதில் தோற்ற விந்தையை நீர் கேட்டதுண்டோ? விலைமாதர்க்கு விதித்தவற்றை நீதிக்காரர் சொந்தமெனச் சாத்திரத்தில் புகுத்திப் பெருந்தவறு இழைத்து விட்டனர். இதுவும் சொல்லளவாகத்தான் இருந்தது; நடைமுறைச் செயலாக என்றுமே வழக்கத்தில் இருந்ததில்லை. சூதர் வீட்டில் ஏவற் பெண்ணை பணயமாக வைக்கும் வழக்கமும் இல்லையென்பதை அறிவோம்."

அடுத்து, இவன் அவையிலிருந்த மன்னர்களையும் பிதாமகனையும் நோக்கிப் பேசுகின்றான்: "ஐயன்மீர், தன்னைத் தருமன் இழந்து அடிமையான பின்னர் 'அடிமைக்கு மனைவி ஏது? வீடு இருக்கமுடியுமா? அடிமைக்கு சொத்து எப்படி இருக்கமுடியும்?' என்றல்லவா பெண்ணரசு பெண்மை

வாயால் கேட்கின்றார்? மன்னர்காள், பொழுது போக்கிற்கும் மகிழ்ச்சிக்கும் சூது என்று வைத்துக் கொண்டாலும் மனுநீதி துறக்கவும் இரு விழிகள் பாவத்தைப் பார்க்கவும் ஒன்றும் பேசாது வாயடைத்துப் போனதன் காரணம்தான் என்ன? தாத்தனே, நீயாவது சொல். இப்படி நடைபெறுவதற்கு விட்டு வைப்பது தகுமா?'' என்ற ஆவேசமான இவன் பேச்சைக் கேட்டதும் அவையில் ஒரு சிறு குழப்பம் ஏற்படுகின்றது.

சில வேந்தர்கள் தம் இருக்கைகளிலிருந்து எழுகின்றனர்; சிலர் இரைச்சலிடுகின்றனர். 'ஒவ்வாது சகுனி செயும் கொடுமை' என்கின்றார் சிலர்; இன்னும் சிலர்,

'எவ்வாறு புகைந்தாலும் புகைந்து போவீர்;
ஏந்திழையை அவைக்களத்தே இகழ்தல்
வேண்டா
செவ்வானம் படர்ந்தாற்போல் இரத்தம் பாயச்
செருக்களத்தே தீருமடா பழிஇஃது'[52]

என்று உரைப்பர். ஆனால் இந்தக் கூச்சலும் குழப்பமும் எடுபடவில்லை; எப்படியோ அடங்கிப் போகின்றது. கர்ணன் பேச்சு இதனை அடக்கி விடுகின்றது.

௧௦. **வீடுமன்** : திருதராட்டிரனின் அமைச்சரவையில் சிறந்து விளங்கும் ஓர் அமைச்சன். பாண்டவர்கட்கும் கௌரவர்கட்கும் பாட்டன். 'ஆரிய வீட்டுமன்' என்றே இவனைக் கவிஞர் குறிப்பர். அவர் இவனை 'அந்தமிழ் புகழுடையான், அந்த ஆரிய வீட்டுமன் அறன் அறிந்தோன்' என்று அறிமுகம் செய்து வைக்கின்றார். துரியோதன் விடுத்த அழைப்பைக் கொண்டு பாண்டவர்கள் அத்தினபுரம் வந்தபோது, திருதராட்டிரனை வணங்கிய பின்னர் 'ஆரிய வீட்டுமன் அடி வணங்கியதாகக்' குறிப்பிடுகின்றார் கவிஞர். துச்சாதனனால்

52. ஷை 5.68: 287

அவைக்கு இழுத்து வரப்பெற்ற பாஞ்சாலி சபையில் நீதி கேட்டு அழும்போது இவன் பேசுகின்றான்: ''தையலே, தருமனே நீ நின்னைச் சூதில் தோற்றான். நீ அவன் செயலை மறுக்கின்றாய்; நின்னைப் பந்தயமாக வைத்ததே குற்ற மென்று வாதாடுகின்றாய்.

... கோமகளே, பண்டையுக
வேதமுனிவர் விதிப்படி, நீ சொல்லுவது
நீதமெனக் கூடும்; நெருங்காலச் செய்தியது!
ஆணொடுபெண் முற்றும் நிகரெனவே அந்நாளில்
பேணிவந்தார். பின்னாளில் இஃது பெயர்ந்துபோய்
இப்பொழுதை நூல்களினை எண்ணுங்கால்,
ஆடவருக்கு
ஒப்பில்லை மாதர். ஒருவன்தன் தாரத்தை
விற்றிடலாம்; தானமென வேற்றவர்க்குத்
தந்திடலாம்.
முற்றும் விலங்கு முறைமையன்றி வேறில்லை.
தன்னை அடிமையென விற்றபின் னுந்தருமன்
நின்னை அடிமையெனக் கொள்வதற்கு நீதியுண்டு.
செல்லு நெறியறியார் செய்கையிங்குப்
பார்த்திடிலோ
கல்லும் நடுங்கும், விலங்குகளும் கண்புதைக்கும்.
செய்கை அநீதியென்று தேர்ந்தாலும்சாத்திரந்தான்
வைக்கும் நெறியும் வழக்கமும் நீ கேட்பதனால்
ஆங்கவையும் நின்சார்பி லாகா வகையுரைத்தேன்
தீங்கு தடுக்கும் திறமிலேன்'[53]

என்று தான் செயற்படு நிலையில் இல்லாமையைத் தெளி வாக்குகின்றான். இதற்குமேல் இவன் பங்குபற்றிக் கவிஞர் குறிப்பிடவில்லை.

---

53. ஷை. 5.64: 271 (56-72)

கக. சகாதேவன் : பாண்டவர்களின் கடைக்குட்டி இவன்; மாத்ரியின் இரண்டாவது மகன். இவனைப் பாரதியார்,

எப்பொழு தும்பிர மத்திலே—சிந்தை
ஏற்றி உலகமொ ராடல்போல் – எண்ணித்
தப்பின்றி இன்பங்கள் துய்த்திடும் – வகை
தானுணர்ந் தான்[54]

என்று காட்டுவார். இதனால் இவன் சிறந்த யோகி என்பது தெளிவு. தம்பியரில் இவன்தான் தருமனுக்கு முதன் முதலாகச் சூதுப் போரில் பணயப் பொருளாகின்றான். அவையில் ஆடை குலைவுற்று நிற்கும் பாஞ்சாலியை மாடு நிகர்த்த துச்சாதனன் மைகுழலைப் பற்றி இழுக்கும் நிலையைக் கண்டு வெஞ்சினம் மீறி எழுந்த பீமன், இவனை அண்ணன் பணயப் பொருளாக வைத்ததைப் பொறுக்க மாட்டாது,

இது பொறுப்ப தில்லை—தம்பீ!
எரிதழல் கொண்டுவா
கதிரை வைத்திழந்தான்—அண்ணன்
கையை எதித்திடுவோம்[55]

என்று சகாதேவனை நோக்கிக் கூறியதாகப் பாரதி காட்டுவார். கடைக் குட்டியாதலால் குற்றேவல் புரிவதற்கு உரிமையாக ஏவப்படுகின்றான் போலும்.

இவனது யோகத்தின் மகிமையை வில்லியில் தெளிவாகக் காணலாம். கிருட்டிணன் தூது செல்வதற்கு முன் ஒருநாள் சகாதேவனை தனியிடத்திற்கு அழைத்துச் சென்று 'பாரதப் போர்' நிகழாதிருக்க உபாயம் என்?' என்று வினவ, அதற்

54. ஷை. 3.45:229
55. ஷை. 5.66:281

கவன், 'நீ அன்றி, மகாபாரதம் அகற்ற மற்று ஆர்கொல் வல்லாரே?' என்று அடக்கமாகத் தொடங்கி,

'பார்ஆளக் கன்னன்இகல்
பார்த்தனைமுன் கொன்று அணங்கின்
கார்ஆர் குழல் களைந்து
காலில் தளைபூட்டி
நேராகக் கைபிடித்து
நின்னையும்யான் கட்டுவனேல்
வாராமல் காக்கலாம்
மாபாரதம்'[56]

என்று கூறுகின்றான். உடனே கண்ணன் 'நீ உரைத்தபடி யாவும் முடிப்பினும், என்னைக் கட்ட இயலுமோ?' என்று கேட்கின்றான். 'உன் வடிவு காட்டின் இயலும்!' என்று மறு மொழி பகல்கின்றான் சகாதேவன். மாயவனும் பதினாயிரம் வடிவு கொள்ளுகின்றான். சகாதேவன் மூலமாம் தோற்றம் உணர்ந்து, எவ்வுலகும் தாய அடி இணைகள் தன் கருத்தி னால்' பிணைக்கின்றான். கண்ணனும் 'அன்பால் இன்று என்னை அறிந்தே பிணித்தமை நன்று; என்பாதம் தன்னை விடுக!' என்று கேட்கின்றான். பின் நடப்பதை முன்னரே அறியும் யோகியாதலால் தூயவனும்,

வன்பா ரதப்போரில்
வந்தடைந்தேம் ஐவரையும்
நின்பார்வை யால்காக்க
வேண்டும் நெடுமாலே![57]

என்று வரம் வேண்டி, அதனைப் பெற்று கழலை விடுவிக்கின் றான். கண்ணனும் நிகழ்ந்ததைப் பிறர் அறிய மொழியா திருக்க உறுதி பெறுகின்றான். சகாதேவனிடம். எப்போதும் பிரும்மத்தில் சிந்தை செலுத்தியிருக்கும் சகாதேவன் மாய வனையும் பிணிக்கும் மாயன் ஆவதை நாம் உணர்ந்து மகிழ் கின்றோம். பஞ்சவரில் கடைக்குட்டியான இவன் இவ்வியலி லும் கடைசிக் கதை மாந்தனாகின்றான்.

---

56. வில்லிபாரதம்: கிருட்டிணன் தூது—33
57. ஷை. ஷை. 37

# தெய்விகக் கூறுகள்

தெய்விக சம்பந்தமான செயல்கள் கலந்து வருவது பெருங்காப்பியங்களின் ஒரு முக்கியக் கூறாக அமைந்திருப்பதைக் காணலாம். சிலப்பதிகாரம் முதல் பாஞ்சாலி சபதம் ஈறாகவுள்ள எல்லாக் காப்பியக் கவிஞர்களும் இந்தக் கூறினைக் கலக்காமல் காவியத்தை இயற்றவில்லை. மேனாட்டுக் காப்பியங்களில் கூட பெரும்பாலானவற்றில் இந்தத் தெய்விகக் கூறுகள் (Supernatural elements) கலந்தே உள்ளன.

நாள்—அங்காடிப் பூதத்தைமறக் குடிமக்கள் வழிபடுதல், பூதத்திற்கு வீரர்கள் உயிர்ப்பலி கொடுத்தல், இந்திர விழா எடுத்தல், மாதிரி சில உற்பாதங்களைக் காணல், ஆய்ச்சியர் மாயோனை வழிபாடு செய்தல், ஆய்ச்சியர் முன்னிலையில் கண்ணகி கதிரவனை விளித்து தன் கணவன் கள்வனோ என வினவல், அவன் 'கள்வன் அல்லன்' என்று மறுமொழி தருதல், கண்ணகி தன் இடமுலையைத் திருகி எடுத்து மதுரையின்மீது எறிதல் ஊர்தீப்பற்றி எரிதல், தெய்வம் உற்று தேவந்தி பேசுதல், மாடலன் தெய்வம் சுட்டிய மூன்று பெண்களின் மேலும் கரக நீரைத் தெளித்தலால் அவர்கள் மூவரும் பழம் பிறப்பு உணர்ந்து கூறுதல், தேவந்தியின்மீது கண்ணகி ஆவேசித்துப்பத்தினிக் கோட்டம்சென்ற இளங்கோ

அடிகளது துறவின் சிறப்பினைப் புகழ்ந்துரைத்தல் போன்ற நிகழ்ச்சிகள் யாவும் தெய்விகக் கூறுகள் அடங்கியவை யாகும்.

இராமாயணத்தில் இந்தத் தெய்விகக் கூறுகள் இல்லாமல் கதை நடைபெறுவதில்லை. காவிய நாயகன் இராமனே திருமாலின் அவதாரமாகவும் சீதாப்பிராட்டி பூமிப்பிராட்டியின் அவதாரமாகவும் கருதப் பெறுகின்றனர். புத்திர காமேஷ்டி வேள்வியின் பயனால்தான் தசரதனுக்கு மகப்பேறு உண்டாகின்றது தேவர்கள் வானரங்களாகப் பிறக்கின்றனர். இந்திரன் கூறாக வாலியும், கதிரவன் கூறாகச் சுக்கிரீவனும் வாயுபுத்திரனாக மாருதியும் அக்கினி தேவன் நீலனாகவும் பிறப்பெடுக்கின்றனர் அரக்கர்கள் யாவரும் கடவுளர்களின் வரங்களினால் புதிய ஆற்றல்களைப் பெறுகின்றனர். இராம ராவணப் போரில் தேவர்களால் அளிக்கப் பெற்ற அம்புகள் தொடுக்கப்பெறுகின்றன. மேகநாதன் இயற்றும் நிகும்பலை வேள்வி தெய்வக்கூறுகள் கொண்டவை. இங்ஙனம் பல எடுத்துக்காட்டுகள் இராமகாதையில் நிறைந்துள்ளன.

சிந்தாமணியிலும் இந்தத் தெய்விகக் கூறுகள் காணப் பெறுகின்றன. காந்தர்வ தத்தையார் இலம்பகத்தில் மக்களுடன் விஞ்சையர் தொடர்பு ஏற்படுகின்றது. வேறு சில தொடர்புகளையும் இக்காவியத்தில் ஆங்காங்குக் காணலாம். பெரிய புராணத்திலும் திருவிளையாடற் புராணத்திலும் இறைவன் சம்பந்தப்படாத நிகழ்ச்சிகளே இல்லை.

பாஞ்சாலி சபதத்தில் கண்ணன் இத்தெய்விகச் சக்தியாகக் காட்சி அளிக்கின்றான். கோவிந்த நாமத்தின் மகிமையால் திரௌபதியின் துகில் முடிவின்றி வளர்வது,

கண்ண பிரானரு ளால்-தம்பி
 கழற்றிடக் கழற்றிடத் துணிபுதிதாய்

வண்ணப்பொற் சேலைக ளாம்-அவை
வளர்ந்தன, வளர்ந்தன வளர்ந்தனவே!
எண்ணத்தி லடங்கா வே;-அவை
எத்தனை எத்தனை நிறத்தன வோ

என்று அற்புதமாகக் காட்டப்பெறுகின்றது. கொடியன் துச்சாதனனும் கைசோர்ந்து வீழ்ந்து விடுகின்றான், இராமாயணத்திலுள்ள நிகழ்ச்சிகள் போலன்றி இங்குள்ளவை தெய்விக ஆற்றலால்தான் நடைபெறுகின்றன. கண்ணன் பரம்பொருளின் கூறு என்று எல்லோரும் உணரும்படி மக்களுடன் கலந்து பழகுகின்றான்.

',ஆதில் பரம்பொருள் நாரணன்;-தெளி
வாகிய பாற்கடல் மீதிலே-நல்ல
சோதிப் பணாமுடி யாயிரம்-கொண்ட
தொல்லறி வென்னுமோர் பாம்பின் மேல்-ஒரு
போதத் துயில்கொளும் நாயகன்,-கலை
போந்து புவிமிசைத் தோன்றினான்-இந்தச்
சீதக் குவளை விழியினான்''[2]

என்ற திருதராட்டிரன் வாய்மொழியால் அவன் கண்ணனை நன்கு அறிந்தவன் என்பது தெளிவு. இங்ஙனமே விதுரன் வீட்டுமன், துரோணர் போன்ற பெரியோர்கள் கண்ணனை நன்கு அறிந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

பாண்டவர்களும் கண்ணனைத் தெய்வக் கூறாகவே கொண்டிருந்தனர். வீமன் சபதம் உரைக்கும் போது.

---

1. பா. ச 5. 70:300
2. ஷை 1:9:81

மாமகளைக் கொண்ட தேவன்-எங்கள்
மரபுக்கு தேவன் கண்ணன் பதத்தாணை

என்று கூறுவதனாலும், அருச்சுனன் சபதம் செய்யும்போது,

தீர்த்தன் பெரும்புகழ் விஷ்ணு-எங்கள்
சீரிய நண்பன் கண்ணன் கழலானை

என்று உரைப்பதிலிருந்தும் இதனைத் தெளியலாம்.

பாரதியாருக்குப் பாஞ்சாலியே ஒரு தெய்வக் கூறாகத் தென்படுகின்றாள். விதுரன் வாய்மொழியாக "தெய்வத் தவத்தி" என்றே பேசுகின்றார். இந்தக் கற்புக்கரசியைத் துரியோதனன் மன்றுக்கு அழைத்து வருமாறு சொல்ல நினைத்தவுடனே சகத்தில் அதர்மக் குழப்பம் உண்டானதாகப் பேசுகின்றார் கவிஞர். சக்தியே ஆட்டங்கண்டால் யார்தான் அதனை நிலை நிறுத்த முடியும்? கவிஞரின் வாக்கிலேயே அந்தக் குழப்ப நிலையைக் காண்போம்:

தருமம் அழிவெய்திச் சத்தியமும் பொய்யாக
பெருமை தவங்கள் பெயர்கெட்டு மண்ணாக
வானத்து தேவர் வயிற்றிலே தீப்பாய
மோன முனிவர் முறைகெட்டுத் தாமயங்க,
வேதம் பொருளின்றி வெற்றுரையே யாகிவிட,
நாதங் குலைந்து நடுமையின்றிப் பாழாக,
கந்தருவ ரெல்லாம் களையிழக்கச் சித்தர் முதல்
அந்தரத்து வாழ்வோ ரனைவோரும் பித்துறவே,
நான்முகனார் நாவடைக்க நாமகட்குப் புத்தி கெட
வான்முகிலைப்போன்றதொரு வண்ணத்திருமாலும்
அறிதுயில்போய் மற்றாங்கேஆழந்ததுயிலெய்திவிட,
செறிதருநற் சீரழகு செல்வமெலாந் தானாகுஞ்
சீதேவி தன்வதனம் செம்மைபோய்க் காரடைய,
மாதேவன் யோகம் மதிமயக்க மாகிவிட—

வாலை, உமாதேவி, மாகாளி, வீறுடையாள்,
மூலமா சக்தி, ஒரு மூவிலைமேல் கையேற்றாள்,
மாயை தொலைக்கும் மகாமாயை தானாவாள்,
பேயைக் கொலையைப் பிணக்குவையைக் கண்டு
வப்பாள்,
சிங்கத்தி லேறிச் சிரித்தெவையும் காத்திடுவாள்,
நோவுங் கொலையும் நுவலொணாப் பீடைகளும்
சாவும் சலிப்புமெனத் தான்பல் கணமுடையாள்,
கடாவெருமை ஏறுங் கருநிறத்துக் காலனார்
இடாது பணிசெய்ய இலங்குமகா ராணி
மங்களம் செல்வம் வளர்வாழ்நாள் நற்கீர்த்தி
துங்கமுறு கல்வியெனச் சூழும் பல கணத்தாள்,
ஆக்கந்தா னாவாள், அழிவுநிலை யாவாள்
போக்குவர வெய்தும் புதுமையெலாந் தானாவாள்
மாறிமாறிப் பின்னும் மாறிமாறிப் பின்னும்
மாறிமா றிப்போம் வழக்கம தானாவாள்
ஆதி பராசக்தி—அவள் நெஞ்சம் வன்மையுறச்
சோதிக் கதிர்விடுக்கும் சூரியனாந் தெய்வத்தின்
முகத்தே இருள் படர——[3]

கவிஞரின் நீள்நோக்கு—இந்த அகிலத்தில் ஏற்படும் அனைத்துக் குழப்பங்களையும் ஒருசேரப் பார்க்கச் செய்யவல்ல அகில நோக்கு (Cosmic view)- இந்தப்பகுதியில் தெளிவாகத் தென்படுகின்றது. தம் காலத்திலேயே இந்த அக்கிரமங்கள் அரசவையில் நடைபெறுவதாக நினைத்துத் தம் நெஞ்சுக் குமுறலை வெளியிடுகின்றார் கவிஞர்.

3. ஷை. 5.4:252-அடி (1-32)

# காப்பிய நடை

ஒரு காப்பியத்தைப் படைக்கும் கவிஞன் கையாளும் நடையும் அக்காப்பியத்திற்குச் சிறப்பளிக்கும். மேனாட்டு இலக்கிய வரலாற்றைக் கவனித்தால் பற்பல காலங்களில் காப்பியத்தில் கையாளப்பெறும் பாநடை மாறி மாறித்தான் வந்துள்ளது. மில்ட்டன் துறக்க இழப்பை எழுதின பிறகு அகவல் நடைதான் (Blank verse) காப்பியத்திற்கு ஏற்றது என்ற கொள்கை நிலவி வந்தது. தமிழ் இலக்கிய வரலாற்றிலும் பெருங்காப்பியத்தை இயற்றினவர்கள் பற்பல நடைவகையினைத்தான் கையாண்டிருப்பதைக் காணலாம். கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முன்னர் எழுந்த காப்பியங்கள் யாவற்றிலும் பாக்கள் (சிறப்பாக அகவற்பா) பயின்று வந்திருத்தலையும், அதற்குப் பின்னர் எழுந்த காப்பியங்களில் பாவினங்கள் (தாழிசை, துறை, விருத்தம்) பயின்று வந்திருத்தலையும் காணலாம். ஆகவே, 'இம்மாதிரி தான் காப்பிய நடை அமைதல் தேண்டும்' என்ற கட்டுப்பாடு என்றும் இருந்ததில்லை, இருக்கவும் முடியாது உன்பதை நாம் அறிகின்றோம்.

நடையைப்பற்றி மேனாட்டுத்திறனாய்வாளர் கூறியுள்ளவற்றை ஈண்டுச் சிந்தித்தல் பொருத்தமாக அமையும். நடை என்பது அடிப்படையில் தனிப்பட்ட எழுத்தாளரின்

தனித்தன்மை வாய்ந்த சிறப்பியல்பு என்பதாகும். போப் என்பார் நடையை 'கருத்தின் ஒப்பனை' (Drcss of thought) என்று கூறுவது பொருந்துமாறில்லை; காரணம், அவர் நடையின் சிறப்பியல்பாகவுள்ள உயிர்ப்பண்பைக் காணத் தவறி விட்டார்; அஃது எழுத்தாளரினின்றும்வேறுபட்டதாகக் கருதுவது தெளிவாகின்றது; எழுத்தாளர் வேண்டாமென்றால் கழற்றி எறியவும் வேண்டுமென்றால், அணிந்து கொள்ளவும் கூடிய ஒரு குப்பாயமாக அல்லது ஒரு மேலங்கியாகக் கருதி விட்டார். இது தவறானமதிப்பீடு என்பது அங்கை நெல்லி யாகும். கார்லைல் என்பார் நடை என்பது எழுத்தாளரின் மேலங்கி அல்ல; அஃது அவருடைன் உடலின் தோலாகும் என்று தெளிவு படுத்தியுள்ளார். தேர்ந்தெடுக்கப்பெற்ற சொற்கள், கையாளப்பெறும் சொற்டொர்கள், வாக்கியங் கள் அமைப்பு முறை, வாக்கியங்களின் சந்தநயம், இசை யொழுங்கு—இப்பண்புகள் எழுத்தாளரின் தனித்திறமையைத் தனிப்பட்ட ஆளுமைப் பண்பை-வெளிபடுத்தி நிற்பதை அறியலாம். இப்பண்புகள் உரைநடைக்கேயன்றிப் பாநடைக் கும் நன்கு பொருந்தும். சிலவகை இலக்கியங்களைப் படைத்துத் தனிப்பெரும் புகழையும் சிறப்பையும் அடைந்த சிலரது வரலாற்றை,

வெண்பாவிற் புகழேந்தி; பரணிக்கோர்
சயங்கொண்டான்; விருத்த மென்னும்
ஒண்பாவில் உயர்கம்பன்; கோவைஉலா
அந்தாதிக்கு ஒட்டக் கூத்தன்;
கண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள்;
வசைபாடக் காளமேகம்;
பண்பாய பகர்சந்தம் படிக்காச
லாலொருவர் பகரொணாதே.

1. தனிப்பாடல்

என்ற பாடலில் சிறப்பித்துள்ளமை காணலாம். யார் யார் எந்தெந்த வகை இலக்கியங்களை இயற்றுவதில் வல்லவர் என்றுஎடுதுதுக் காட்டும் 'திறனாய் கவிதை' இது. பன்முறை இதனைப் படித்துத் தமிழ் இலக்கியக்களஞ்சியத்தை முன்னும் பின்னும் பன்முறை நோக்கித் திறனாய்ந்த புலவரின் திறனை எண்ணி எண்ணி மகிழ்கின்றோம்.

பாரதியின் காப்பியத்தில் பயின்று வந்திருக்கும் யாப் பிலக்கணத்திற்குப் புறம்பான 'நொண்டிச் சிந்து' போன்ற சாதாரணமான நடை சரியான இலக்கியக் கருவியாகுமா? என்ற வினா கற்றோரிடையே எழலாம். 'ஆம்' என்பதுதான் சரியான விடை. கவிஞருக்குத் தனி உரிமம் (License)உண்டு. அதில் யாரும் குறுக்கிட முடியாது. இளங்கோவும் சாத்த னாரும் தமது காப்பியங்களில் அகவல் நடையைக் கை யாண்டதற்கு எந்த மரபைப் பின்பற்றினர்? தொல்காப்பியத் திலோ அதற்கு முன்னரோ யாரும் இதற்கு ஒரு மரபினைக் காட்டவில்லை. அவர்களை யடுத்து சிந்தாமணியை இயற்றிய திருத்தக்கதேவரும் இராமகாதையை இயற்றிய கம்பனும் எந்த மரபினைப் பின்பற்றினர்? முன்னவர் பாவி னைப் கையாண்டதற்கும் பின்னவர் பாவினங்களைக் கை யாண்டதற்கும் என்ன காரணம் கூற முடியும்? அவரவர் விருப்பத்தை யொட்டியும், அக்காலத்துப் பொதுமக்களின் விடுப்பார்வத்தை யொட்டியுமே தம் முறைகளை வகுத்துக் கொண்டனர் என்று கொள்வதே பொருத்த முடைத்தாகும். பாரதியாரும் இக் காலத்து மக்களின் சுவையை யொட்டியும் புது மெருகுடன் புதிய முறையில் காவியம் ஒன்றைச் செய்ய வேண்டும் என்ற தம் மேதைத் தன்மைக் கேற்பவும் புதுப்புது நடைச்சிறப்புகளை மேற்கொண்டார் என்று கொள்வதே ஏற்புடைத்தாகும்.

தொல் காப்பியத்தில் கூறப்பெற்றிருக்கும் 'விருந்து' என்ற தலைப்பில் இவற்றினை அடக்கி இலக்கணமும் கூற முடியும்.

விருந்தே தானும்
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே[2]

என்பது தொல்காப்பியம். இதற்கு உரை கண்ட பேராசிரியரும், 'புதிதாகத் தாம் வேண்டியவாற்றாற் பல செய்யுளுந் தொடர்ந்து வரச் செய்வது' என்று கூறியிருப்பதும் இதனை வலியுறுத்தும். தவிர கடந்த பல நூற்றாண்டுகளாகச் சில சில்லறைப் பிரபந்தங்களைத் தவிர, முக்கியமான நூல்கள் யாவற்றையும் விருத்தப் பாக்களில் செய்து கவிஞர்கள் அப் பாக்களின் பரப்புக்கும் ஆற்றலுக்கும் ஓர் எல்லை கண்டு விட்டனர் என்று சொல்லாம். இதைநன்கு அறிந்த பாரதியார் தமது காப்பியத்திற்குப் புது யாப்புக் கருவிகளைக் தேடிக் கொண்டார். விருத்த யாப்பைக் கையாண்டால் அளவைக் கருதி அனாவசியமான சொற்களையும் பாவங்களையும் கையாள நேரிடும் என்றுதான் அதனைக் கையாள வில்லை. என்றாலும், அதனை அடியோடு நீக்கி விடவும் இல்லை. ஓரிரண்டு இடங்களில் புதிய முறையில் எண்சீர் விருத்தங் களைக் கையாண்டுதான் உள்ளார். புதிய கற்பனைகளும் தற் காலத்திற்கேற்ற கருத்துகளும் அழகுறப் பொதிய வேண்டு மானால் புதுப்புது யாப்பு முறைகள் கட்டாயம் வேண்டும். புலவர்கள் தமது மனநிலைக்கும் சொல்லாற்றலுக்கும் தகுந்த வாறு நடையை அமைத்துக் கொள்ள வேண்டும். நம்முடைய கவனமெல்லாம் காவியப் படைப்பு வெற்றிகரமாய் முடிந்துள் ளதா என்பதில்தான் செல்ல வேண்டும்: தமிழ்க் காவியங் களின் நடை கடினமாயும் விறைப்பாயும் கரடு முரடாயும் சாதாரண மக்களுக்குப் புரியக் கூடாத முறையிலுந்தான்

2. தொல். பொருள்-செய் 238

இருக்க வேண்டும் என்று கருதும் கல்விச் செருக்குடைய புலவர்களும் அறிஞர்களும் பாஞ்சாலி சபதத்தின் இலக்கியச் சிறப்பையாவது அதன் ஆற்றலையாவது அறிந்து கொள்ள முடியாது.

சாதாரண மக்களின் பேச்சுகளில் வரும் சொற்களைக் கையாண்டு சுயம்புவான இலக்கியச் சுவை கொப்பளிக்கும்படி செய்துள்ள பல இடங்களைக் காப்பியத்தில் கண்டு மகிழலாம். அத்தின புரத்து வீரர்களைப்பற்றிக் கூறும் 'கரி, நூறினைத் தனிநின்று நொறுக்க வல்லார்' என்ற அடியும், திருதராட்டிரன் சகுனியைக் கடிந்து கூறும்பொழுது,

—'வெறும்
நொள்ளைக் கதைகள் கதைக்கின்றாய், பழ
நூலின் பொருளைச் சிதைக்கின்றாய்—

என்ற அடிகளும், தந்தையின் மீது சினங்கொண்டு துரியோதனன் கூறும்,

—'கெட்ட
வேம்பு நிகரிவ னுக்குநான்;-சுவை
மிக்க சருக்கரை பாண்டவர்;

'சொல்லின் நயங்கள் அறிந்திலேன்,-உனைச்
சொல்லினில் வெல்ல விரும்பிலேன்;-கருங்
கல்லிடை நாருரிப் பாருண்டோ?-நினைக்
காரணம் காட்டுத லாகுமோ?'

மதித மக்கென் றிலாதவர் கோடி
வண்மைச் சாத்திரக் கேள்விகள் கேட்டும்
பதியும் சாத்திரத் துள்ளுறை காணார்,
பானைத் தேனில் அகப்பையைப் போல்வார்

என்ற பகுதிகளும் விதுரனைப் பாண்டவர்கள் வரவேற்ற பகுதியில் வரும் 'மதுர மொழியில் குசலங்கள் பேசி' என்ற அடியும் இதற்கு நல்ல சான்றுகளாகும். இம்மாதிரியான

பகுதிகள் பல சூதாட்ட வருணனையிலும் உள்ளன. மேலும், துரியோதனன் விதுரனை ஏசிப் பேசும்போது வரும்,

'நன்றி கெட்ட விதுரா!
சிறிதும் நாணமற்ற விதுரா!
தின்ற உப்பி னுக்கே
நாசந் தேடுகின்ற விதுரா!

... ... ... ... ... ...

ஐவ ருக்கு நெஞ்சும்
எங்கள் அரமனைக்கு வயிறும்
தெய்வ மன்று னக்கே— விதுரா!
செய்து விட்ட தேயோ?

... ... ... ... ...

என்ன குற்றங் கண்டாய்?—தருமம்
யார்க்கு ரைக்க வந்தாய்?
கன்னம் வைக்கி றோமோ?—பல்லைக்
காட்டி ஏய்க்கி றோமோ?

என்ற பகுதிகளும் இதற்கு நல்ல எடுத்துக்காட்டுகளாகும். திரௌபதியை அவமானப்படுத்தும்பொழுது கடுஞ்சினங் கொண்ட வீமன் பேச்சிலும் இதற்குச் சான்றுகள் உள்ளன. புதிய யாப்பு முறைகளைக் கையாள்வதில் பாரதியார் வங்கக் கவிஞர் தாகூரைப் போலவே இலக்கிய உலகில் ஒரு புதிய புரட்சியை உண்டாக்கி விட்டார் எனலாம்.

சில இடங்களில் சிந்து நடை காவியத்தை மிகவும் சுவையாகியுள்ளது.

லால லாலலா லா லாலா
லால லாலலா லா

என்ற மெட்டுள்ள சிந்துகள் சூதாட்டத்தை வருணிக்கும் போது கையாளப் பெற்றுள்ளன. தெருவில் ஊசிகளும் பாசி

மணிகளும் விற்பதோடு பிச்சை யெடுக்கவும் செய்கின்ற பெண்கள்.

மாயக் காரனம்மா—கிருஷ்ணன்
மருடிக் கார னம்மா!

என்று பாடும் நடை சூதாட்ட வருணனைக்கும் அதிலேற்படும் பரபரத்த சொற்களையும் செய்கைகளையும் விளக்கு வதற்கும் மிகவும் பொருந்தியதென்பது எளிதில் அறியப் பெறும்.

மாயச் சூதி னுக்கே— ஐயன்
மனமி ரங்கி விட்டான்;
தாய முருட்ட லானார்;—அங்கே
சகுனி ஆர்ப்ப ரித்தான்!
நேய முற்ற விதுரன்—போலே,
நெறியுளோர்க ளெல்லாம்
வாயை மூடி விட்டார்;—தங்கள்
மதிம யங்கி விட்டார்

என்றும்,

காயு ருட்ட லானார்—சூதுக்
களிதொ டங்க லானார்
மாய முள்ள சகுனி—பின்னும்
வார்த்தை சொல்லுகின்றான்;
'நீஅ ழித்த தெல்லாம்—பின்னும்,
நின்னி டத்து மீளும்
ஓய்வ டைந்தி டாதே—தருமா!
ஊக்க மெய்து' கென்றான்.

என்றும் வரும் பகுதிகளில் இப்பண்புகளைக் காணலாம். தாயக் கட்டைகள் போடும்போது ஏற்படும் ஒலிகளை யொட்டியே இந்தப் பகுதிகள் அமைந்து மிகவும் கனிந்த நாடகத் தன்மையுடன் மிளிர்கின்றன.

இந்தப் பகுதியில் அமைந்துள்ள காப்பிய நடை நிகழ்ச்சிகளை யொட்டிப் புதியதொரு விறுவிறுப்பைப் பெறுகின்றது. களத்தில் தோற்போர்க்கும் வெல்வோர்க்கும் இரு பக்கங்களில் நின்று பார்ப்போருக்கும் உள்ள படபடப்பும், மனத் துடிப்பும், ஏமாற்றமும் எதிர்பார்ப்பும் அற்புதமாகத் தெரிகின்றன. படபடப்பாகச் செல்லும் கவிதை நடையில் கருத்திற்கேற்ப நடை அமையும் என்பர் திறனாய்வாளர். இங்குச் சூதாடும் மனப்படபடப்பு, தோல்வி, விரைவுயாவும் நடையில் மிளிர்வதைக் காண்கின்றோம் திரௌபதியை வென்றதும் விளையாட்டரங்குகளில் வெற்றிக்குப் பின்னர் பார்வையாளர்களிடையே எழும் உள்ளக் கிளர்ச்சியும் ஆரவாரமும் போல் கௌரவர்களிடையே எழுகின்றன.

திக்குக் குலுங்கிடவே—எழுந்தாடுமாம்
　　தீயவர் கூட்டமெல்லாம்
தக்குத்தக் கென்றே அவர்—குதித்தாடுவார்
　　தம்மிரு தோள்கொட்டு வார்
ஒக்குந் தருமனுக்கே—இஃதென்பார், 'ஓ!
　　ஓ!' வென் றிரைந்திடுவார்;
கக்கக்கென் றேநகைப்பார்— 'துரியோதனா!
　　கட்டிக்கொள் எம்மை' என்பார்.

மாமனைத் 'தூக்கா' யென்பார்-அந்த மாமன் மேல்
　　மாலை பலவீசு வார்
சேமத் திரவியங்கள்—பல நாடுகள்
　　சேர்ந்ததி லொன்று மில்லை;
காமத் திரவிய மாம்—இந்தப் பெண்ணையும்
　　கைவச மாகச் செய்தான்;
'மாமனோர் தெய்வ' மென்பார்—'துரியோதனன்
　　வாழ்க' வென் றார்த்திடுவார்.

ஐவருக்கும் உரியதேவி நூற்றுவர்க்கும் உரியவளானாள் என்ற நினைப்பில் இங்ஙனம் கூத்தாடுகின்றனர் போலும்!

துரியோதனனும் மாமனை நெஞ்சொடு சேரக் கட்டிக் கொண்டு பேசுகின்றான்:

'என்துயர் தீர்த்தா யடா! – உயிர்மாமனே
ஏளனந் தீர்த்து விட்டாய்.
அன்று நகைத்தா ளடா!—உயிர்மாமனே!
அவளைஎன் ஆளாக்கி னாய்;
என்றும், மறவேனடா!—உயிர்மாமனே!
என்னகைம் மாறு செய்வேன்?

'ஆசை தணித்தாயடா? - உயிர்மாமனே!
ஆவியைக் காத்தாயடா!
பூசை புரிவோ மடா!—உயிர்மாமனே!
பொங்கலுனக் கிடுவோம்!
நாச மடைந்த தடா!— நெடுநாட்பகை,
நாமினி வாழ்ந்தோ மடா!
பேசவுந் தோன்று தில்லை:—உயிர்மாமனே!
பேரின்பங் கூட்டி விட்டாய்'.

உலக அநுபவத்தையுடைய கவிஞர் இக்கால ஆரவாரத்தை-வெற்றிக் களிப்பை - அப்படியே நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்த ஏற்ற நடையைக் கையாண்டுள்ளார்.

சாதாரண மக்கள் பேச்சில் எடுத்தாளப்பெறும் பழமொழிகளும் உவமைகளும் சொற்றொடர்களும் இவர்தம் காவிய நடைக்கு உயிர்ப்பூட்டுகின்றன. இராசசூயப் பெரு வேள்வி நடைபெற்றபோது தருமனுக்கு வந்து குவிந்த பெருமைகளையெல்லாம் எண்ணிப் புழுங்கிப் பொறாமைப் படுகின்ற துரியோதனன் பேச்சில் வரும்,

குப்பை கொலோ முத்தும்?—அந்தக்
குரைகடல் நிலத்தவர் கொணர்ந்து பெய்தார்

என்ற அடிகளில் 'குப்பையிலும் முத்தோ?' என்ற பழமொழி திகழ்வதைக் காண்க. இங்ஙனமே, துரியோதனன் தன் தந்தை யிடம் பேசும்போது வரும்,

> சொல்லின் நயங்கள் அறிந்திலேன்,—உனைச்
> சொல்லினில் வெல்ல விரும்பிலேன்;—கடுங்
> கல்லிடை நாருரிப் பாருண்டோ?—நினைக்
> காரணம் காட்டுத லாகுமோ?

என்ற பகுதியில் 'கல்லில் நார் உரித்தல்' என்ற பழமொழி பொதிந்திருப்பதைக்காணலாம். மேலும்இவன், தந்தையிடம் உண்மை அறிவு இல்லாதவர் சாத்திரங்களைப் படித்தாலும் கேட்டாலும் அவற்றின் உள்ளுறைப் பொருளை அறியார் என்பதை எடுத்துக்காட்டும்போது,

> மதித மக்கென் றிலாதவர் கோடி
> வண்மைச் சாத்திரக் கேள்விகள் கேட்டும்
> பதியும் சாத்திரத் துள்ளுறை காணார்,
> பானைத் தேனில் அகப்பையைப் போல்வார்

என்று கூறுவதில் பானைத் தேனில் அகப்பை இருந்தாலும், அது கொள்ளுவது மிகச் சிறிய பகுதிதான் என்று மக்களிடை வழங்கும் பழமொழியைக் கண்டு மகிழலாம். திருதராட்டிரன் விதுரனைத் தூது போக்கும்போது தன் மைந்தனின் சதியால் நாட்டிற்கு ஏற்படப் போகும் அவலங்களை நினைத்துப் பேசும்போது,

> அன்று விதித்ததை இன்று தடுத்தல்
> யார்க்கெளி தென்றுமெய் சோர்ந்து விழுந்தான்

என்று அவன் குறிப்பிடுவதைக் காட்டுவர் கவிஞர். இதில் 'அன்று விதித்ததை இன்று யார் தடுக்க முடியும்?' என்று மக்கள் பேச்சில் வரும் பழமொழி வருதல் தெளிவாகத் தெரிகின்றது. சகுனி தருமனைச் சூதுக்கு வருமாறு வல்லுக் கழைத்தபோது தருமன் பேசுகின்றான்:

'மதியு னும்விதி தான்பெரி தன்றோ?
வைய மீதுள வாகு மவற்றுள்
விதியி னும்பெரி தோர்பொரு ளுண்டோ?

இதில் 'மதியைவிட விதிதான் பெரிது' என்று மக்கள் அடிக்கடி எடுத்துக்காட்டும் பழமொழி அமைந்திருப்பதைக் கண்டு மகிழலாம்.

அன்றாட வாழ்வில் மக்கள் பேச்சில் கையாளப்பெறும் உவமைகளும் காவிய நடைக்கு மெருகூட்டுகின்றன. துரியோதனன் நிலையைச் சகுனி திருதராட்டிரனுக்கு உணர்த்தும்போது, நின்மகன்...உடல் வற்றித் துரும்பொத் திருக்கின்றான்' என்கின்றான். 'அவன் இளைத்துத் துரும் பாகிவிட்டான்' என்ற உலக வழக்கினைச் சகுனியின் பேச்சில் காணலாம்.

உண்ப சுவையின்றி உண்கின்றான்;-பின்
உடுப்ப திகழ உடுக்கின்றான்.'

என்ற அடிகளிலும் 'அவன் ருசியின்றிச் சாப்பிடுகின்றான்' 'உடையிலும் சரியான கவனம் இல்லை' என்ற உலகப் பேச்சு வழக்கினைக் காணலாம். 'சூரியனுக்கு முன் மின்மினி போல்' என்ற உலகவழக்கிலுள்ள உவமை,

—ஒளி
ஞாயிறு நிற்பவும் மின்மினி - தன்னை
நாடித் தொழுதிடும் தன்மைபோல்

என்ற அடிகளில் பொதிந்து கிடக்கின்றது.

—'அட!
பிள்ளையை நாசம் புரியவே — ஒரு
பேயென நீவந்து தோன்றினாய்; பெரு
வெள்ளத்தைப் புல்லொன் றெதிர்க்குமோ?'

என்ற அடிகளில் மக்கள் பேச்சு வழக்கில் உள்ள 'பேய்மாதிரி' 'பெருவெள்ளத்தைப் புல் என்ன செய்ய முடியும்?' என்ப

வற்றின் சாயல் புலப்படுவதைக் காணலாம். 'அதிகம் பேசிப் பயன் என்ன?' என்ற உலக வழக்கினைப் 'பலபல மொழிகுவ தேன்?' என்ற சகுனியின் பேச்சில் வருவதைக் காணலாம். 'அவன் ஒரு பிசுநாறி' என்ற மக்கள் பேச்சு வழக்கு,

பாரத மண்டலத்தார் - தங்கள்
பதிஒரு பிசுனன் என்றறிவேனோ?

என்ற அடியில் புலப்படுவதைக் கண்டு மகிழ்க.

இன்னும் 'நீரை யுண்ட மேகம் போல்', 'பேயினை வேதம் உணர்த்தல் போல்', 'வேம்பு நிகரிவனுக்கு நான்'' 'சேற்றில் உழலும் புழு', 'கடலிற் காயம் கரைத்த தொப் பாமே', 'கடுஞ் சொற்கள் பொறுக்காத மென்மைக் காது' 'கருங்கல்லில் விடந் தோய்ந்த நெஞ்சு',

கோயிற் பூசை செய்வோர் - சிலையைக்
கொண்டு விற்றல் போலும்
வாயில் காத்து நிற்போன் - வீட்டை
வைத்திழத்தல் போலும்'

'ஈயத்தைப் பொன்னென்று காட்டுவார்', 'புண்ணிடைக் கொண்டு குத்துதல் போல்', 'தவப்பயன்', 'ஆவியில் இனியவள்',

வேள்விப் பொருளினையே - புலைநாயின்முன்
மென்றிட வைப்பவர்போல்
நீள்விட்டப் பொன்மாளிகை - கட்டிப்பேயினை
நேர்ந்துகுடி யேற்றல்போல்
ஆள்விற்றுப் பொன்வாங்கியே-செய்த பூணையோர்
ஆந்தைக்குப் பூட்டுதல்போல்

'நெட்டை மரங்களென நின்று புலம்பினார்' என்பன போன்ற உவமைகளும், சொற்றொடர்களும் கவிதைநடைக்கு விறுவிறுப்பையும் உயிர்ப்பையும் ஊட்டுவதைக் கண்டு மகிழலாம்.

மிக எளிய சொற்களைக் கையாண்டு எல்லோரும் எளிதாகப் படித்து இலக்கியச் சுவையை நுகரக் கூடிய முறையில் கற்பனை நிறைந்ததாயும், ஓசையின்பமும் ஒலிநயமும் மலிந்ததாயுமுள்ள கவிதையைப் படைப்பதில் பாரதிக்கு நிகர் பாரதியே என்றுதான் சொல்ல வேண்டும்

''சுவைபுதிது, பொருள்புதிது, வளம்புதிது,
சொற்புதிது சோதி மிக்க
நவகவிதை எந்நாளும் அழியாத
மாகவிதை''[3]

என்று தானே கூறும் புதிய கவிதைப் பாணியை அமைத்து வெற்றி கண்டவர் பாரதி. இதே கவிதையில்,

புவியனைத்தும் போற்றிடவான் புகழ்படைத்துத்
தமிழ்மொழியைப் புகழி லேற்றும்
கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லை யெனும்
வசையென்னாற் கழிந்த தன்றே.

என்று பெருமிதத்துடன் கூறிக் கொள்ளுவது முக்காலும் உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை. 'தன்னைப் புகழ்தலும் தரும் புலவோர்க்கே'[4] என்ற பவணந்தியாரும் இதற்கு விதி வகுத்துத் தந்துள்ளா ரன்றோ? தக்க சந்தர்ப்பத்தில் புலவர்கள் தம் திறமையை - இருப்பதை - இல்லாததை அல்ல -எடுத்துக் கூறுவதில் என்ன தவறு? 'எல்லாம் அரசியல், எதிலும் அரசியல்' 'சாதியும் கட்சியும்தான் எதற்கும் அளவு கோல்' என்றிருக்கும் இக்காலத்தில் அறிஞர்கள் இவ்வாறு சொல்லி மகிழ்வதில் ஒருவித தற்காப்பு எந்திரத் தன்மை (Defence mechanism) வெளிப்பட்டு அவர்தம் மனம் நிலை குலையாமல் இருப்பதற்குத் துணை புரிகின்றது.

---

3. தனிப் பாடல்கள் - வேங்கடேச ரெட்டப்ப பூபதி (2)-3.
4. நன் - நூற்பா - 59

# காவியத்தில் உருக்காட்சிகள்

இயற்கையையும் வாழ்க்கையின் உண்மைகளையும் கூர்ந்து நோக்கும் கவிஞன் ஓர் இலக்கியத்தைப் படைக்கும் போது அவற்றை அவ்விலக்கியங்களில் அமைக்கின்றான்; அவை கலைகளாகின்றன. இவ்விலக்கியத்தை படிக்கும் நாம் அவற்றில் ஆழங்கால் பட்டு நம்மையும் மறக்கின்றோம் இதுவே முருகியல் நிலை. இதுவே உலகத்திற்கு மூலமாய் நிற்கும் இன்பப் பெருக்கில் ஒன்று பட்டு வாழ்வதாகும். இதுவே நம்மை உயர்த்தும், நம்மையும் அறியாமல் நமது உள்ளம் தேடித் திரியும் நிலையும் இதுவே யாகும். பாரதி யாரின் பாஞ்சாலி சபதத்தைப் படிப்போர் இத்தகைய ஓர் அநுபவ நிலையை உணரலாம். இயற்கையையும் பிற வற்றையும் அவர் அநுபவித்ததைப்போலவே அவர்தம் காவியத்தைப் படிக்கும் நாமும் நம்புலன்களின் துணை கொண்டு அவற்றை அநுபவித்து மகிழலாம்.

எந்தக் கவிஞனும் தன் அநுபவத்தைத் தேர்ந்தெடுத்த சொற்களால் உணர்வூட்டி நமக்குத் தருகின்றான். உருக் காட்சிகள் (Images), சிந்தனை இவற்றின் குறியீடுகளாகச் (Symbols) சொற்கள் பணிபுரிகின்றன என்பதை நாம் அறி வோம். பர்ட்டன் என்ற திறனாய்வாளரின் கருத்துப்படி கவிதையின் உருக்காட்சி சொற்களின்மூலம் நம்புலன்

களைத் தொடுகின்றது. புலன்களின்மூலம் படிப்போரின் உணர்ச்சிகளும் அறிவும் விரைவாகத் தூண்டப் பெறுகின்றன. இதன் காரணமாகக் கவிதையின் உருக் காட்சி அதிகமாகப் பயன் படுகின்றது.[1] அவ்வறிஞர் மேலும் கூறுவது: "செலுத்தப்பெறும் புலன்களுக் கேற்ப உருக் காட்சி வகைப் படுத்தப்பெறுகின்றது. ஆகவே, நாம் பெறுபவை: கட்புல உருக்காட்சிகள் (Visual images) - இவற்றில் வண்ண உருக் காட்சிகளும் வடிவ உருக்காட்சிகளும் அடங்கும்), செவிப்புல உருக்காட்சிகள் (Auditory images), சுவைப்புல உருக் காட்சிகள் (Gustatory images), நாற்றப்புல உருக்காட்சிகள் (Olfactory images;, ஊறு அல்லது தொடுபல (நொப்புல) உருக்காட்சிகள் (Tactual images) என்பவை யாகும். இவற் றைத் தவிர, இயக்கநிலை உருக்காட்சிகள் (Kinaesthetic images) மரபுநிலை உருக்காட்சிகள் (Conventional images) என்பவையும் உள்ளன"[2] இவை தனியாகவும் ஒன்று இரண்டு பலவுமாக இணைந்து கலவை உருக்காட்சிகளாகவும் (Cluster images) கவிதையில் அமைகின்றன. மேலும் குறியீடுகளாக அமையும் சொற்கள் 'கட்டுண்ட' உருக்காட்சி களையும் (Tied images), விடுதலை உருக்காட்சிகளையும் (Free images) உண்டாக்கிப் படிப்போரிடையே ஒத்துணர்வுத் துலங்களையும் (Sympthetic response.), ஒட்ட உணரும், துலங்களையும் (Empathetic response) எழுப்புகின்றன. இவற்றால் படிப்போரின் கவிதையநுபவம்—முருகுணர்ச்சி— கொடுமுடியை எட்டுகின்றது. இந்தக் கருத்துகளைஅடிப்படை யாகக் கொண்டு 'பாஞ்சாலி சபதத்தை' ஆராய்வோம். அப்பெருமகனாரின் நோக்கு அவர்தம் காவியத்தில் எவ்வாறு அமைந்துள்ளது என்பதையும் காண்போம்.

---

1. Burton, N: *The Criticismof Poetry* (Longmans and Green Company Ltd London)-p. 97

2. மேலது, பக். 99

**கட்புல உருக்காட்சிகள் :** பாண்டவர்கள் அத்தினபுரத்திற்கு மேற்கொண்ட பயணத்தின் நடுவில் மாலைக்காலம் வருகின்றது. மன்னனின் சேனை வழியிடையில் ஒரு பூம்பொழிலில் தங்கியிருந்தபொழுது பார்த்தன் பாஞ்சாலிக்குப் பரிதியின் எழிலை விளக்குகின்றான். 'செழுஞ் சோதி வனப்பையெல்லாம் சேரக் காண்பாய்' என்று கூறி,

கணந்தோறும் வியப்புகள் புதிய தோன்றும்:
கணந்தோறும் வெவ்வேறு கனவு தோன்றும்;
கணந்தோறும் நவநவமாம் களிப்புத் தோன்றும்;
கருதிடவும் சொல்லிடவும் எளிதோஆங்கே
கணந்தோறும் ஒருபுதிய வண்ணம் காட்டிக்
காளிபரா சக்திஅவள் களிக்கும் கோலம்
கணந்தோறும் அவள் பிறப்பால் என்று மேலோர்
கருதுவதன் விளக்கத்தை இங்குக் காண்பாய்.

என்ற பாடலில் கட்புல உருக்காட்சிகளில் வண்ண உருக்காட்சிகள் பல இணைந்து ஓர் அற்புதக் கலவைக் காட்சியினை நம்மனத்தகத்தில் தோற்றுவித்து நம்மைப் பூரிப்படையச் செய்கின்றன. இன்னும் இதே பகுதியில் பரிதியை, 'பரிதிக் கோளம்', 'மின்செய்த வட்டு', 'பச்சை நிறவட்டம்', என்றும்,

'இடிவானத் தொளிமின்னல் பத்துக் கோடி
எடுத்தவற்றை ஒன்றுபட உருக்கி வார்த்து
முடிவான வட்டத்தை'
... — ... ...
இமைகுவிய மின்வட்டின் வயிரக் கால்கள்
எண்ணில்லா திடையிடையே எழுதல்'

என்றும் வரும் பாடற் பகுதிகளில் பரிதியை விளக்கும் வடிவ உருக் காட்சிகளைக் கண்டு மகிழலாம். மேலும்,

3. பா.ச. 1. 27:409

'எத்தனை வடிவம்' 'நீலப் பொய்கைகள்!' 'நீலவன்ன மொன்றில் எத்தனை வகையடி!' 'எத்தனை செம்மை!' 'பசுமையும் கருமையும் எத்தனை!' 'கரிய பெரும் பூதம்!' 'நீலப் பொய்கையின் மிதந்திடும் தங்கத் தோணிகள்', 'சுடரொளிப் பொற்கரையிட்ட கருஞ்சிகரங்கள்!' 'தங்கத் திமிங் கலம் தாம்பல மிதக்கும் இருட்கடல்!' என்று படுஞாயிற்றின் மேகச் சூழலை அற்புதமாகக் காட்டுவதைக் கண்டு களிக்க லாம், இவற்றில் வண்ண, வடிவக் கட்புல உருக்காட்சிகள் கவிதையைப் பொலிவுறச் செய்வதைக் காண்க.

காவியத்தின் தொடக்கத்தில் வரும் 'சரசுவதி வணக்கத் தில்' கலைமகளை வருணிக்கும் கவிதைப் பகுதியில் வரும் வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள்',

'வேதத் திருவிழியாள்,—அதில்
மிக்கபல் லுரையெனும் கருமையிட்டாள்,
சீதக் கதிர்மதியே—நுதல்
சிந்தனை யேகுழல் ஒன்றுடையாள்[4]

இவற்றில் வண்ண, வடிவக் கட்புல உருக்காட்சிகட்ளைக் கண்டு மகிழ்க அத்தினபுரத்தை வருணிக்கும் கவிதைப் பகுதி யில்' வெள்ளைப் பனிவரைபோற் பலமாளிகை', 'முத்தொளிர் மாடங்கள்' 'நத்தியல் வாவிகள்' என்பனவும் வண்ண வடிவ உருக் காட்சிகளாகும். இராசசூயப் பெருவேள்வி நடை பெற்றபொழுது பாண்டவர்கட்கு வந்து குவிந்த காணிக்கைப் பொருள்களை அரவக் கொடியோன் பட்டியலிட்டுக் காட்டும் பகுதியில் வரும்,

ஆணிப்பொற் கலசங்களும்—ரவி
யன்னநல் வயிரத்தின் மகுடங்களும்
மாணிக்கக் குவியல்களும்—பச்சை
மரகதத் திரளும்நன் முத்துக்களும்

4. ஷை. ஷை 1, 2; 3

பூணிட்ட திருமணி தாம்—பல
புதுப்புது வகைகளிற் பொலிவனவும்[5]

என்ற கவிதைப்பகுதியிலும் இத்தகைய உருக்காட்சிகள் திகழ்வதைப் பார்க்கலாம். இன்னும் பல இடங்களில் இவை பொலிவுறுவதையும் கண்டு மகிழலாம்.

**செவிப்புல உருக்காட்சிகள்;** பாரதியாரின் முருகியல் நோக்கு செவிப்புல உருக்காட்சிகளைப் படைப்பதிலும் செல்லுகின்றது.

மந்திர கீதங்களாம்:—தர்க்க
வாதங்களாம்.

இவை அத்தினபுர வருணனையைக் கூறும் இ'-த்தில் வருபவை. இவற்றைப் படிக்கும்போது நம் மனக் காது 'மந்திர கீதங்களைக்' கேட்கின்றது; பட்டிமன்றம் போன்ற அமைப்பில் நடைபெறும் 'தர்க்க வாதங்களையும்' கேட்கின்றது. விதுரனின் தூதுச் செய்தியால் சூதுபற்றிய சதியை அறிந்ததும் வீமன் திகைத்து நிற்கின்றான். தருமபுத்திரன் ஆணைப்படி படை முதலியவற்றை ஆயத்தம் செய்யப் புகுந்தவனின் சினத்தைக் காட்டும் கவிஞர்,

'தாமதம் செய்வோமோ?—செலத்
தகுந்தகும் எனஇடி யுறநகைத் தான்

என உரைப்பதில் வீமனின் 'இடிக்குரல்' நம் மனக்காதில் விழுகின்றது தருமன் கவறாடலை மறுக்கும்போது சகுனியின் ஏச்சினைக் காட்ட வந்த கவிஞர்,

கலகல வெனச்சிரித் தான்—பழிக்
கவற்றையோர் சாத்திர மெனப்பயின் றோன்

என்று கூறுவதில் சகுனியின் சிரிப்பொலியைக் கேட்கின்றோம். விதுரனை வீட்டை விட்டு வெளியேறுமாறு துரியோதனன்

5, டிெ. 1.5:23

கூறியதைக் கேட்டதும், அவன் மீண்டும் நீதியுரைத்து 'வாய் மூடித் தலை குனிந்து இருக்கை கொண்டதும்',

பதிவுறுவோம் புவியிலெனக் கலிம கிழ்ந்தான்
பாரதப்போர் வருமென்று தேவ ரார்த்தார்

என்ற நிலைமையைக் கவிஞர் விளக்குவதில் தேவர்களின் ஆர்ப்பொலிகள் நம் காதில் விழுகின்றனவன்றோ? பஞ்சாலி தன் சபதத்தை உரைத்து முடித்ததும்,

ஓமென்று உரைத்தனர் தேவர்—ஓம்
ஓமென்று சொல்லி உறுமிற்று வானம்.
பூமி அதிர்ச்சி உண்டாச்சு—விண்ணைப்
பூழிப் படுத்திய தாஞ்சுழற் காற்று[6]

என்று கவிஞர் கூறிச் சதையை முடிக்கின்றார். இதில் தேவர்களின் 'ஓம் ஒலியும்', வானத்தின் 'ஓம் ஓம்' என்ற ஒலியும், பூமியின் நடுக்கமும், சுழற்காற்றின் திருவிளையாடலும் நம் காதில் விழுவதை உணர்கின்றோம்.

**சுவைப்புல உருக்காட்சிகள்** : இவ்வகை உருக்காட்சிகள் இக்காவியத்தில் அதிகமாகக் காணப் பெறவில்லை. இவற்றையும் தேடிக் காண்போம். கலைமகளைக் 'கற்பனைத் தேனிதழாள்' என்று கவிஞர் உரைக்கும்போது நம் மனம் தேனின் சுவையை உணர்கின்றது. திருதராட்டிரனின் நல்லுரைகளைக் கேட்ட துரியோதன் கடுஞ்சினமுற்றுப் பேசுவான்.

—கெட்ட
வேம்பு நிகரிவ னுக்குநான்;—சுவை
மிக்க சருக்கரை பாண்டவர்

---

6. ஷை 5.73:308

என்றும் பேசும்போது வேம்பின் கசப்புச் சுவையும் சருக்கரை யின் தீஞ்சுவையும் நம்மனத்தில் தட்டுப்படுகின்றனவல்லவா? துரியோதனன் தன்னை இகழ்ந்து உரைக்கும்போது விதுரன் கூறும் நீதிமொழி:

> ''பால்போலும் தேன்போலும் இனிய சொல்லோர்
> இடும்பைக்கு வழிசொல்வார்; நன்மை காண்பார்
> இளகுமொழி கூறார்''

இக்கூற்றில் பாலின் சுவையும் தேனின் சுவையும் நம் மனத் திற்குத் தட்டுப்படுகின்றன.

**நாற்றப்புல உருக்காட்சிகள்:** இந்த வகை உருக் காட்சிகளும் காவியத்தில் அமைந்து முருகுணர்ச்சியை நல்கு வதாயினும், இவை இக்காவியத்தில் அரிதாகவே காணப் பெறுகின்றன. இராச சூயப் பெரு வேள்வியினைத் தருமன் நடத்தியபொழுது பல நாட்டு மன்னர்களும் மக்களும் காணிக்கைப்பொருள்களைக் கொண்டு வந்து குவித்ததை துரியோதனன் எண்ணி நைகின்றதாகக் காட்டப்பெறும் கவிதைப் பகுதி இது:

> பொன்னிறப் பாஞ்சாலி—மகிழ்
> பூத்திடும் சந்தனம் அகில் வகைகள்
> ஏலம் கருப்பூ ரம்—நறும்
> இலவங்கம் பாக்குநற் சாதிவகை
> கோலம் பெறக்கொணர்ந்தே—அவர்
> கொட்டி நின்றார்கரம் கட்டிநின்றார்

இப்பகுதியினை நாம் படித்துச் சுவைக்கும்போது மணப் பொருள்களின் மணம் நம் மனத்தைத் துளைப்பதை உணர் கின்றோம்.

> நாடுறு தயிலவகை—நறு
> நானத்தின் பொருள்பலர் கொணர்ந்து தந்தார்

என்ற அடிகளைப் படிக்கும்போது தயில வகைகளின் வாசனையும் கஸ்தூரியின் நறுமணமும் நம்மூக்கைத் துளைப்பதாக உணர்கின்றோம்.

தொடுபுல (நோய்புல) உருக்காட்சிகள்: இந்த நுண்ணிய உருக்காட்சிகள் காவியத்தில் அமைந்து காவியத்திற்குப் பொலிவூட்டுகின்றன. துரியோதனனின் பொறாமைத் தீயை வருணிக்கும் கவிஞர்,

குன்ற மொன்று குழைவுற் றிளகிக்
குழம்பு பட்டழி வெய்திடும் வண்ணம்
கன்று பூதலத் துள்ளுறை வெம்மை
காய்ந்தெழுந்து வெளிப்படல் போல

என்று கூறும்போது 'வெப்ப உணர்ச்சி' தட்டுப்படுகின்றது. பொறாமையைத் தீ என்று உருவகித்ததைப் போலவே சினத்தையும் தீ என்று உருவகிப்பார் பாரதியார். இன்ப நிகழ்ச்சிகளில் பொழுது போக்குமாறு தந்தை கூறுவதைச் செவிமடுத்த சுயோதனன்சினங்கொள்ளுகின்றான். 'கோமகன் வெந்தழல்போலச் சினங் கொண்டே—தன்னை மீறிப் பல சொல் விளம்பினான்' என்று இதனைக் கவிஞர் கூறும் போதும், 'நெஞ்சைத், தின்னும் கொடுந்தழல் கொண்டவர்—சொல்லுஞ், செய்தி தெளிய உரைப்பரோ?" என்ற சகுனியின் பேச்சிலும் இந்த வெப்பத்தை நம் மனம் உணர்கின்றது. சகுனி தருமனிடம் அவனுடைய சகோதரர்களைப் பணயப் பொருளாக வைக்குமாறு கூறியதைக் கேட்டு,

கங்கை மைந்த னங்கே—நெஞ்சம்
கனலுறத் துடித்தான்;
பொங்கு வெஞ்சினத்தால்— அரசர்
புகையுயிர்த் திருந்தார்[7]

---

7. ஷை 3.44:228.

என்று பிதாமகன் நிலையையும் அவையிலிருந்த அரசர்கள் அடைந்த நிலையையும் கவிஞர் காட்டுவதில் இந்த வெப்ப உணர்ச்சியை உணர்கின்றோம். 'வீமனைப் பணயம் கூறுக' என்று சகுனி தருமனைக் கேட்கும்போது அவன்,

> தக்கது செய்தல் மறந்தனன்—உளஞ்
> சார்ந்திடு வெஞ்சின வெள்ளத்தில்—எங்கும்
> அக்கரை இக்கரை காண்கிலன்.

என்று கூறுவதில் 'சின வெள்ளத்தின்' வெப்பத்தை உணர முடிகின்றது. 'மின்செய் கதிர் விழியால் வெந்நோக்கு நோக்கினாள்', 'எரிதழல் கொண்டு வா', 'சினமான தீ அறிவைப் புகைத்தலாலே' 'எவ்வாறு புகைந்தாலும் புகைந்து போவீர்' 'காமனைக் கண்ணழலாலே - சுட்டுக், காலனை வென்றவன்' என்ற சந்தர்ப்பங்களுக்கேற்ற சொற்றொடர்களில் நொப்புல உருக்காட்சிகள் தென்படுகின்றன.

**இயக்கநிலை உருக்காட்சிகள்:** இந்த வகை உருக்காட்சிகளும் காவியத்திற்குப் புதுமெருகூட்டுகின்றன. அத்தின்புர வீரர்களைக் காட்டும்,

> மாலைகள் புரண்டசை யும்— பெரு
> வரையெனத் திரண்டவன் தோளுடை யார்

என்ற அடிகளில் 'புரண்டசையும்' என்பதில் இயக்க நிலையை உணர்கின்றோம். சகுனியின் சூழ்ச்சித் திறத்தை மெச்சிய துரியோதனினன் மகிழ்ச்சியை,

> பொங்கும் உவகையின் மார்புறக்—கட்டிப்
> பூரித்து விம்மித் தழுவினான்.

என்று கவிஞர் காட்டும்போது பொங்கும், பூரித்து, விம்மி, தழுவினான் என்ற சொற்களில் இயக்க நிலைகள் தட்டுப்படுகின்றதன்றோ?

'நீரமுதம் எனப்பாய்ந்து நிரம்பும் நாடு'

'கைப்பிடி கொண்டு சுழற்றுவோன்—தன்
கணக்கிற் சுழன்றிடும் சக்கரம்.'

'கிரி வகுத்த ஓடையிலே மிதந்து செல்லும்,

'அடிவானத் தேஅங்கு பரிதிக் கோளம்
அளப்பரிய விரைவினொடு சுழலக் காண்பாய்'

'வடிவான தொன்றாகத் தகடி ரண்டு
வட்டமுறச் சுழலுவதை வளைந்து காண்பாய்'

'இடையின்றி அணுக்களெலாம் சுழலுமென
இயல்நூலார் இசைத்தல் கேட்டோம்;
இடையின்றிக் கதிர்களெலாம் சுழலுமென
வானூலார் இயம்பு கின்றார்'

இவண் காட்டியுள்ள அடிகளிலெல்லாம் இயக்கநிலை உருக்காட்சிகள் தென்படுவவைக் காணலாம்,

கலவை நிலை உருக்காட்சிகள்: சில பாடல்களில் ஒன்றுக்கு மேற்பட்ட பல்வேறு வகை உருக்காட்சிகள் அமைந்து கவிதைக்குப் பொலிவூட்டி முருகுணர்ச்சியை மிகுவிக்கின்றன.

அன்னங்கள் பொற்கமலத் தடத்தின் ஊர
அளிமுரலக் கிளிமழலை அரற்றக் கேட்போர்
கன்னங்கள் அமுதூற குயில்கள் பாடும்
காவினத்து நறுமலரின் கமழைத் தென்றல்
பொன்னங்க மணிமடவார் மாட மீது
புலவிசெயும் போழ்தினிலே போந்து வீச
வன்னங்கொள் வரைத்தோளார் மகிழ மாதர்
மையல்விழி தோற்றுவிக்கும் வண்மை நாடு[8]

8. ஷை 1.17:11 7

என்ற பாடலில் அன்னங்கள் தடத்தின் ஊரல், தென்றல் வீசுதல் இவை இயக்கநிலை உருக்காட்சிகள்; அளிமுரலுதல், கிளி மிழற்றுதல், குயில்கள் பாடுதல் இவை செவிப்புல உருக் காட்சிகள்; அன்னங்கள் பொற்கமலத்திருத்தல், அளி, கிளி, குயில்கள், காவினத்து நறு மலர்கள், பொன்னங்க மணி மடவார், வன்னங் கொள் வரைத்தோளார் இவை கட்புல உருக்காட்சிகள். இவை யாவும் கலந்து அமைந்து கவிதைக்குப் பொலிவூட்டுவதைப் பாடலைப் பன்முறைப் படித்து உருக் காட்சிகளை மனத்திற்குக் கொணர்ந்து அநுபவிக்கும்போது தெளிவாக அறியலாம்.

மந்திர கீதம் முழக்கினர் பார்ப்பனர்;
வன்தடந் தோள்கொட்டி ஆர்த்தனர் மன்னவர்
வெந்திறல் யானையும் தேரும் குதிரையும்
வீதிகள் தோறும் ஒளிமிகச் செய்தன;
வந்தியர் பாடினர்; வேசையர் ஆடினர்;
வாத்தியம் கோடி வகையின் ஒலித்தன;[9]

பாண்டவர்கட்கு அத்தினபுரத்தில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியினை வருணிக்கும் சொல்லோவியம் இது. இங்கு மந்திரகீத முழக்கம், தோள் கொட்டி ஆர்த்தல், வந்தியர் பாடுதல், வாத்தியம் ஒலித்தல் இவை செவிப்புல உருக் காட்சிகள்; யானை, தேர், குதிரை வீதிகள்தோறும் ஒளி செய்தல்-இது கட்புலஉருக்காட்சி; வேசையர் ஆடுதல் என்பது இயக்கப்புல உருக் காட்சி. இவை யாவும் கலந்த கலவை நிலை உருக்காட்சியாக நிகழ்ச்சியை மனத்தில் பதிக்கின்றன.

ஆவியில் இனியவளை—உயிர்த்
தணிசுமந் துலவிடு செய்யமுதை,
ஓவியம் நிகர்த்தவளை—அரு
ளொளியினைக் கற்பனைக் குயிரதனைத்

9. ஷெ.1.29:156

தேவியை நிலத்திருவை - எங்குந்
　　தேடினும் கிடைப்படுந் திரவியத்தை

படிமிசை இசையுறவே—நடை
　　பயின்றிடுந் தெய்விக மலர்க் கொடியைக்
கடிகழ் மின்னுருவை,—ஒரு
　　கமனியக் கனவினை காதலினை
வடிவுறு பேரழகை......[10]

இப்படிப் போகின்றது திரெளபதி பற்றிய சொல்லோவியம். இதில் கட்புல, செவிப்புல, இயக்கப்புல உருக்காட்சிகள் அமைந்து திரெளபதியை நம் மனம் காணச் செய்கின்றன. இங்ஙனம் பல கலவை நிலை உருக் காட்சிகளைக் காவியத்தில் கண்டு மகிழலாம்.

**மின்வெட்டுப் போன்ற மணிமொழி உருக்காட்சிகள்:** இவண் காட்டிய பல்வேறு வகை உருக்காட்சிகளைத் தவிர பல்வேறு இடங்களில் கவிஞரின் சொற்களிலும் சொற்றொடர்களிலும் மின்வெட்டுகள் போன்ற பல்வேறு உருக் காட்சிகள் பாங்குற அமைத்திருப்பதையும் கண்டு மகிழலாம். அவற்றுள் சிலவற்றை ஈண்டு எடுத்துக்காட்டுவோம். ஆமெனும் பொருளனைத்தாய் (பிரும்மம்), போதமெனும் நாசியினாள், சீரியல் மதி முகத்தார், கண்ணைப் பறிக்கும் அழகுடையார், வெள்ளத்தைப் புல்லொன் றெதிர்க்குமோ, சீதக்குவளை விழியினாள், கஞ்ச மலரிற் கடவுள் வியப்ப, மதுர மொழியில் குசலங்கள் பேசி, மகன் புலைமயும் தந்தையின் புலைமைகளும் யாரிடம் அவிழ்க்கின்றார், குன்றினிலே ஏற்றி வைத்த விளக்கைப் போல, திருவுளத்தின் ஆக்கினை, சேலைப் போல் விழியாள், மின் வட்டின் வயிரக் கால்கள்,

10. ஷெ.4:52:243-244

என்னும் விழற்கிடமின்றி, மதியினும் விதி பெரிது, அம்பி னொத்த விழியாள், ஈயத்தைப் பொன்னென்று காட்டுவார், புள்ளிச் சிறுமான் புலியைப்போய்ப் பாய்வது போல், பேய் கண்ட பிள்ளையென, ஆடி விலைப்பட்டதாதி, நெட்டை மரங்களென நின்றுபுலம்பினார், மின்செய் கதிர்விழி, பேயரசு செய்தால் பிணந் தின்னும் சாத்திரங்கள், அம்புபட்ட மான் போல், வம்பு மலர்க் கூந்தல், சினமான தீ அறிவைப் புகைத் தலாலே,—இச்சொற்றொடர்களில் பொதிந்துள்ள பல்வேறு வகை உருக்காட்சிகள் படிப்போர் மனத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன.

இங்ஙனம் கவிதைகளில் வரும் உருக்காட்சிகளைப் புலன் கள் மீண்டும் மனத்தில் தோன்றச் செய்கின்றன. மனம் அக் காட்சிகளைக் கண்டு அநுபவிக்கின்றது இத்தகைய முரு குணர்ச்சியைத் தம் முருகியல் நோக்கால் தம்முடைய கவி தைகளில் ஏற்றி வைக்கின்றனர் கவிஞர்கள். உலக இயல் பிற்குப் படம் போலிருக்கும் அவர்தம் கவிதைகளை நாம் பயிலுங்கால் அதே நோக்கை நாம் பயிற்சியால் ஓரளவு பெற்று விடுகின்றோம். கவிஞர்கள் உலகப் பொருள்களையும் உலகில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் அநுபவித்த உணர்ச்சி சுவை வடிவமாக அவர்தம் கவிதைகளில் தேக்கி வைக்கப் பெற்றுள்ளது அக்கவிதைகளை நாம் பயிலுங்கால் அவற்றி லுள்ள சுவைகளில் நாம் தோய்ந்து வருகின்றோம். பாரதியாரின் ‘பாஞ்சாலி சபதத்தைப்’ பயிலுங்கால் அருடைய முருகியல் அநுபவத்தை மானசீகமாகக் கண்டு மகிழலாம். நம்மிடமும் அந்நோக்கு எழுவதையும் உணர லாம். பாடல்கள் ‘மம்மர் அறுக்கும் மருந்தாக’ நம்மைக் களிப்பூட்டுவதையும் காணலாம்.

# காவியம் உணர்த்தும் உண்மை

வாழ்க்கையிலும் மனிதப் பண்பிலும் உள்ள பொதுத் தன்மையை எடுத்துக் கூறுவதே கவிதையின் நோக்கமாகும். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற உயர்ந்த குறிக்கோள் கவிதைத்துறையில் எளிதாக நிறைவேறி விடுகின்றது. கவிஞனின் மனத்தில் தோன்றிய அநுபவமே கவிதையாக முடிகின்றது; வடிவம் கொள்ளுகின்றது. கவிதையைப் படிக்கும் நாமும் அக்கவிஞன் பெற்ற அநுபவத்தையே பெற்று விட்டால், கவிதையும் உணர்த்த வேண்டியவற்றை உணர்த்தி விடும் நிலையை அடைந்து விடுகின்றது. திருவாசகத் தேனை மாந்திய அறிஞர்களில் பலர் தம் அநுபவத்தை வெளியிட்டுள்ளனர். வேற்றுச் சமயத்தைச் சார்ந்த வேற்று நாட்டினராகிய ஜி.யு. போப் இதன் பக்திச் சுவையில் ஈடுபட்டு இதனை யொத்த பக்தி நூல் யாண்டும் இல்லையென்று கூறினார். சிவப்பிரகாச அடிகள்,

> திருவா சகம்இங் கொருகால் ஓதின்
> கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
> தொடுமணற் கேணியின் சுரந்துநீர் பாய
> அன்பர் ஆகுநர் அன்றி
> மன்பதை உலகில் மற்றையர் இவரே.[1]

1. நால்வர் நான்மணி மாலை—4

என்று அவ்வநுபவத்தை எடுத்தோதுகின்றார். சமயத் துறையில் எங்கும் சமரசத்தைப் பரப்பிய வடலூராரும் திருவாசகத்தில் ஈடுபட்டுப் படித்ததால்,

நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து
செழுங்கனிதீஞ் சுவைகலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து
உவட்டாமல் இனிப்பதுவே.[2]

என்று பாடுகின்றார். உயர் கவிதைகள் யாவும் அவற்றில் ஈடுபட்டுப் படிப்போரிடம் கவிஞர்களின் அநுபவத்தையே பெற வைத்து விடுகின்றன. தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தமட்டிலும் தமிழ்க் கவிஞர்கள் வாழ்க்கையைச் செம்மைப் படுத்துவதே இலக்கியத்தின் நோக்கம் என்ற கொள்கையினை உடையவர்களாக இருந்தனர் என்று கருதலாம்.

உரத்தின் வளம்பெருக்கி யுள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா மரத்தின்
கனக்கூட்டம் தீர்க்குநூ லஃதேபோல் மாந்தர்
மனக்கோட்டந் தீர்க்குநூல் மாண்பு.[3]

என்ற பவணந்தியாரின் கூற்றினால் இதனை அறியலாம். இதனால் மக்களினத்தின் அறியாமையைப் போக்கி அறிவு கொளுத்துதல் கவிதையின் முதன்மையான வேலையா யிருத்தல் வேண்டும் என்பது பெறப்படுகின்றது.

**கவிதையின் தலைமைப் பண்பு :** கவிதையின் தலைமைப் பண்பு - அஃது உணர்த்தும் உண்மையில்தான் உள்ளது. மனித அநுபவத்திலும் இயற்கையிலும் நாம்

2. திருவருட்பா: ஆளுடைய அடிகள் அருள்மாலை—7
3. நன்னூல்—25

சாதாரணமாகக் காணாத புலனுணர் ஆற்றலுடைய அழகு களையும் ஆழ்ந்த உண்மைகளையும் அது காட்டுகின்றது, நம்மில் ஒரு சிலருக்குக் கவிதையுணர்வும் உட்காட்சியும் (Insight) ஓரளவு அமைந்துள்ளன. ஆனால், இவர்களுள் பெரும்பாலோரிடம் இத்தகைய கவிதைத் திறன் சாதாரண வாழ்க்கையின் இருப்பு நிலைகளால் நெருக்குண்டு, அன்றாட வாழ்க்கையின் கூறுகளாகவுள்ள உலோகாயதக் கவர்ச்சி களால் குன்றச் செய்யப்பெற்று, சில சமயம் நனவு நிலை யிலும், அல்லது நனவிலி நிலையிலும் நசுக்கப் பெறுகின்றது. ஆனால், உண்மைக் கவிஞனிடம் உலகப் பொருள்களில் அழகினையும், ஆழ்ந்த உண்மைகளையும் காணுந்திறன் ஈடு எடுப்பற்ற அளவிலுள்ளது; அன்றியும், தாம் காண்பவற்றை யும் கேட்பவற்றையும் தெளிவாக வெளியிட்டுக் கூறுந் திறனும் அமைந்து கிடக்கின்றது. இவ்விளக்கத்தைப் படிக்கும் நம்முடைய கற்பனையும் ஒத்துணர்ச்சியும் துடிப்புப் பெற்று அவற்றை அக்கவிஞனுடன் சேர்ந்து காணவும் உணரவும் செய்துவிடுகின்றது. எனவே, கவிதை நமக்குக் கவிஞனின் உள் நோக்குடன் நாமாகவே வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கிப் பொருளுணரவும் கற்பிக்கின்றது என்றும், நம்முடைய பார்வையையும் ஒத்துணர்ச்சியையும் உரம் பெறச் செய் கின்றது என்றும் தெளிகின்றோம்.

**காவியப் பண்பு:** தலைவன் ஏவலாளர்க்குக் கூறுதல் போன்றவை அறநூல்கள் என்றும், நண்பர் ஒருவர்க்கொருவ கூறும் முறையில் அமைந்தவை புராணங்கள் என்றும், கணவனுக்கு மனைவி உரைப்பது போன்றவை காவியங்கள் என்றும் ஒருவகைப் பாகுபாடு செய்து உரைப்பர் வடமொழி வாணர்கள். இல்வாழ்க்கையில் சொற்களைவிட உள்ளத்து உணர்ச்சிகளே ஆற்றல் மிக்கவை என்பதும், சொற்களால் உணர்த்துவதைவிடக் குறிப்பால் உணர்த்துவதே மிகுதி என் பதும் நாம் அறிந்தவை. இக்காரணத்தால்தான் ஒரு சில

வரிகளாளான அகத்துறைச் சங்கப் பாடல்கள் உணர்ச்சியைக் கொட்டி நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன. இத்தகைய உணர்ச்சிதான் காவியங்களிலும் அமைந்து கிடக்கின்றது. ஒழுக்கம், அறம் முதலியவற்றை அதிகமாக நேரே கூறி வற்புறுத்தாமல் கற்பனையநுபவத்தின் வாயிலாகவும், கதை மாந்தர்களின் கூற்று வாயிலாகவும் அப்பாடல்கள் உள்ளத்தில் தாமே சென்று பதியும் முறையில் அமைந்து விடுகின்றன.

இக்கருத்துகளின் அடிப்படையில் 'பாஞ்சாலி சபதம்' உணர்த்தும் உண்மைகளைக் காண்போம்.

**பொறாமையின் கேடு:** துரியோதனனை நடுவாகவைத்து இந்த உண்மை விளக்கப்பெறுகின்றது. இராச சூயப் பெரு வேள்வியினால் பாண்டவர்கட்கு வந்த ஏற்றத்தைக் கண்டு துரியோதனன் மனம் புழுங்கி நைகின்றதைக் கவிஞர் பல பாடல்களில் (1.5:19-37) எடுத்துக்காட்டுகின்றார். 'எண்ணிலாத பொருட்குவையும், யாங்கணும் செலும் சக்கரமாண்பும் வார்கடல் பெருஞ்சேனையும் கொண்டு, இந்திர போகங் களைத் துய்க்கும் வாய்ப்பிருந்தும்,

பாண்டவர் முடியுயர்த்தே—இந்தப்
பார்மிசை யுலவிடு நாள்வரை, நான்
ஆண்டதோர் அரசாமோ? —எனது
ஆண்மையும் புகழுமோர் பொருளாமோ?[4]

என்று எண்ணுகின்றான். வேள்வியினால் பாண்டவர்கட்குக் கிடைத்த பொருள்களையும், பெருமைகளையும், சிறப்புகளையும் எண்ணி எண்ணி ஏங்குகின்றான். நெஞ்சிற் கருதியவற்றையெல்லாம் சகுனியிடம் (1.6:42-51) சொல்லுகின்றான். ஏந்திழையாள் (திரௌபதி) தன்னை நோக்கிச் சிரித்ததையும் கோடிட்டுக் காட்டி,

4. பா. ச. 1.5:20

பேச்சை வளர்த்துப் பயனொன்று
    மில்லை,என் மாமனே! —அவர்
பேற்றை அழிக்க உபாயஞ் சொல்லுவாய்
    என்றன் மாமனே!
தீச்செயல் நற்செயல் ஏதெனினும்
    ஒன்றுசெய்து, நாம்—அவர்

செல்வங் கவர்ந்தவரை விட
    வேண்டும் தெருவிலே.[5]

என்று தன் மனக்கருத்தை வெளியிடுகின்றான்.

பாண்டவர் வேள்வியிற் சமைத்தது போன்று, அளவற்ற பொருட் செலவில் வையக மீதில் இணையற்றதாக மண்டபம் சமைக்கச் செய்ததும், அதனைப் பார்த்து மகிழப் பாண்டவர்களை 'மறுவிருந்தாட' விதுரனைப் போக்கியதும், விருந்திற்குப் பின்னர் சகுனியைத் தருமனுடன் கவறாடச் செய்ததும், அதில் பாண்டவர்கள் அனைத்தையும் இழந்து அடிமைகளானதும், துரியோதனன் தம்பி துச்சாதனனைக் கொண்டு பாஞ்சாலியை மன்றுக்கு இழுத்து வந்து உலகம் கேட்டிராத முறையில் அவமானம் அடையச் செய்ததுமான செயல்கள் தொடர் சங்கிலிபோல் நிகழ்வதைக் காட்டிப் பாரதப் போரை நினைக்கவும் அதில் துரியோதனன் தன் தம்பியருடன் மாண்டு போவதையும் நினைக்கச் செய்கின்றார். இவை 'அழுக்காறுஉடையார்க்கு அதுவே சாலும்'[6] என்றும்,

அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்[7]

---

5. பா. ச. 1. 6:52
6. குறள்—165
7. ஷை - 168

என்றும், பொது மறையில் காணப்பெறும், வள்ளுவரின் வாய்மொழிகளையும் நாம் சிந்திக்கின்றோம்.

**கவறாடலின் கொடுமை:** கவிஞர் தருமனைக் கொண்டு இதனைப் பேசச் செய்கின்றார். ஆயினும், அவனே சூதாட்டத்தில் இறங்கி பலியாவதையும் காட்டுகின்றார். 'அறத் தோன்றலையே' கவறாடலுக்குத் திருப்புவதில் சகுனியைச் சிறந்த சமர்த்தனாக்குகின்றார். "மன்னர் சூதாட வல்லுக் கழைத்தபோது மறுப்பதில்லை. வாட்போரிலும் சாத்திரப் போரிலும் வல்லவன் வெல்வான்; வன்மை இல்லாதவன் தோற்றிடுவான். இது சதியன்று. நல்லவன், அல்லாதான் என்ற மரபு இங்கு இல்லை. வல்லமர் செய்ய மன்னர் அவை முன் நின்னை அழைத்துவிட்டேன். வருவ துண்டேல் சொல்லுக; துணிவின்றேல் அதனையும் கூறுக" என்கின்றான் சகுனி. சிலம்பில் 'விதி' வெல்வதைக் காண்பதைப்போல் இங்கும் 'விதி' வெல்வதைக் காண்கின்றோம். தருமன் சூதிற்கு இணங்குகின்றான்.

மெய்ய றிந்தவர் தம்மு ளுயர்ந்தோன்
விதியினாலத் தருமனும் வீழ்ந்தான்[8]

என்கின்றார். மேலும் அவர்,

மதியி னும்விதி தான்பெரி தன்றோ?
வைய மீதுள வாகு மவற்றுள்
விதியி னும்பெரி தோர்பொரு ளுண்டோ?
மேலை நாம்செய்யுங் கர்மமல் லாதே,
நதியி லுள்ள சிறுகுழி தன்னில்
நான்கு திக்கி லிருந்தும் பல்மாசு
பதியு மாறு, பிறர்செய்யுங் கர்மப்
பயனும் நம்மை அடைவதுண்டன்றோ?[9]

---

8. பா. ச. 2. 36:181
9. ஷை 2. 36: I82

என்று வினைப் பயனையும் விதியின் செயலையும் வலியுறுத்து கின்றார். இப்பகுதியில் கவிஞரும் விதியின் வலிமையைத் தற் கூற்றாக வலியுறுத்துவதைக் காண்கின்றோம்.

செல்வத்தை யெல்லாம் இழந்து நிற்கும் தருமனை நோக்கி,

நாடிழக்க வில்லை—தருமா!
நாட்டை வைத்திடு

என்று சகுனி சொல்லும்போது வெகுண்டெழுந்த விதுரன் பேச்சிலும் சூதின் கொடுமையைக் காட்டுகின்றார் கவிஞர். திருதராட்டிரனை நோக்கிப் பேசுகின்றான்:

சூதிற் பிள்ளை கெலித்திடல் கொண்டு
சொர்க்க போகம் பெறுபவன் போலப்
பேதை நீயு முகமலர் வெய்திப்
பெட்பு மிக்குற வீற்றிருக் கின்றாய்;
மீது சென்று மலையிடைத் தேனில்
மிக்க மோகத்தி னாலொரு வேடன்
பாத மாங்கு நழுவிட மாயும்
படும லையுச்சரி வுள்ளது காணான்.

மற்றுநீ ருமிச் சூதெனும் கள்ளால்
மதிம யங்கி வருஞ்செயல் காணீர்!
முற்றுஞ் சாதி சுயோதன னாமோர்
மூடற் காக முழுகிட லாமோ?
பற்று மிக்கஇப் பாண்டவர் தம்மைப்
பாத கத்தி லழித்திடு கின்றாய்;
கற்ற கல்வியும் கேள்வியும் அண்ணே
கடலிற் காயங் கரைத்ததொப் பாமே!

தம்பி மக்கள் பொருள் வெஃகு வாயோ
சாதற் காண வயதினில் அண்ணே!
நம்பி நின்னை அடைந்தவ ரன்றோ?
நாத னென்றுனைக் கொண்டவ ரன்றோ?
எம்பி ரானுளங் கொள்ளுதி யாயின்
யாவுந் தான மெனக்கொடுப் பாரே;
கும்பி மாநர கத்தினி லாழ்த்துங்
கொடிய செய்கை தொடர்வது என்னே?

நெறிஇ ழந்தபின் வாழ்வதி லின்பம்
நேரு மென்று நினைத்திடல் வேண்டா
பொறிஇ ழந்த சகுனியின் சூதால்
புண்ணி யர்தமை மாற்றல ராக்கிச்
சிறியர் பாதகர் என்றுல கெல்லாம்
'சீ' என் றேச உகந்தர சாளும்
வறிய வாழ்வை விரும்பிட லாமோ?
வாழி சூதை நிறுத்துதி'[10]

என்கின்றான். குத்திக் காட்டுவது போல், முத்தாய்ப்பாக, "கேட்கும் காதும் இழந்து விட்டாயோ?' என்று கேட்கின் றான்:

நாட்டைப் பணயமாக வைத்து இழந்ததும் கவிஞரின் சினம் கொடுமுடியை எட்டி விடுகின்றது. கதை கூறும் கவிஞர் தம்மை மறந்து கதை மாந்தருள் ஒருவராகி விடுகின் றார்; அவரது உணர்ச்சி கட்டறுத்துக் கொண்டுசெல்கின்றது. பேசுகின்றார்:

---

10. ஷை. 2. 38: 199, 200, 202, 204
11. ஷை. 2. 38: 201

கோயிற் பூசை செய்வோர்-சிலையைக்
கொண்டு விற்றல் போலும்
வாயில் காத்து நிற்போன்-வீட்டை
வைத்தி ழத்தல் போலும்
ஆயி ரங்க ளான-நீதி
அவைஉ ணர்ந்த தருமன்
தேயம் வைத்திழந்தான்-சீச்சீ
சிறியர் செய்கை செய்தான்[12]

அரசு நடத்துவோர்மீது சீறி விழுகின்றார் கவிஞர். "தென் புலம் காவல் என்முதல் பிழைத்தது"[13] என்ற பாண்டியனது தமிழ் மரபு கொண்டவர் பாரதியார். பாண்டி நாட்டைச் சேர்ந்தவரல்லவா? 'காவல்' என்று கருதும் தமிழ்மரபு தருமற்கு இல்லாமல் 'நாடு தன் சொத்து' எனக் கருதியதால் சினம் மூழ்கின்றது கவிஞர்க்கு. இன்று பாரதி இருந்திருப்பின் சில அரசியல் வாதிகள் நாட்டைக் குத்தகைக் கெடுத்த மாதிரி செயற்படுவதைக் கண்டு என்ன செய்திருப்பாரோ? இதுபற்றி ஒருதனிக் காவியமே பாடியிருப்பார்.

அப்போதே கவிஞர் சிந்திக்கின்றார். உலக அரசியலைக் கூர்ந்து நீள் நோக்கில் காண்கின்றார்; பேசுகின்றார்;

நாட்டு மாந்த ரெல்லாம்-நம்போல்
நரர்க ளென்று கருதார்
ஆட்டு மந்தையாமென்-றுலகை
அரச ரெண்ணி விட்டார்
நாட்டு ராஜ நீதி-மனிதர்
நன்கு செய்ய வில்லை

12. பாஞ். 3. 43: 219
13. சிலப். 2. 20: 76-77

ஓரஞ் செய்தி டாமே-தருமத்
துறுதி கொன்றி டாமே
சோரஞ் செய்திடாமே-பிறரைத்
துயரில் வீழ்த்தி டாமே
ஊரை யாளு முறைமை-உலகில்
ஓர்பு றத்து மில்லை[14]

என்று கூறும் போதே கவிஞரின் சினம் தணிந்து விடுகின்றது தாம் கதை கூறுபவர் என்ற நினைவும் வந்துவிடுகின்றது.

சார மற்றவார்த்தை-மேலே
சரிதை சொல்லு கின்றோம்[15]

என்று கதையைத் தொடர்கின்றார்.

கவறாடலின்கொடுமையைத்தருமன் எங்ஙனம் அநுபவித் தான்? அனைத்தையும் இழந்த பிறகு தம்பியரையும் தன் மனைவியையும் இழந்து உலகப் பழிக்கு ஆளாகின்றான்.

சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன் றில்[16].

என்ற வள்ளுவத்திற்குச் சரியான இலக்கியமாகின்றான். இதனால் அரசவையில் பெருத்த அவமானம், பன்னிரண் டாண்டுகள் காடுறை வாழ்க்கை, ஓராண்டு கரந்துறை வாழ்க்கை இவனுக்குக் கிடைத்த பரிசுகள்!

**ஊழின் பெருவலி:** 'பால்வரைத் தெய்வம்' எனக் கூறும் ஊழின் பங்கு காவியம் முழுவதுமே ஊடுருவி நிற்ப தைக் காண்கின்றோம். இடத்திற்கேற்றவாறும் சந்தர்ப் பத்திற்கேற்றவாறும் கதை மாந்தர்களின் வாயிலாக ஊழின் வலி எடுத்தோதப் படுகின்றது

14. ஷை. 3. 43: 221
15. ஷை 3. 43: 211
16. குறள்-934

(I) பாண்டவர்களைச் சூதிற்கழைக்குமாறு தந்தையை வற்புறுத்துகின்றான் துரியோதனன். அப்படிச் செய்யாவிடில் தன் தலையைக் கொய்து உயிர் விடுவதாக அச்சுறுத்து கின்றான். திருதராட்டிரனின் மனம் தளர்வுறுகின்றது. விதியை நினைக்கின்றான்.

விதி! விதி! விதி! மகனே! - இனி
வேறெது சொல்லுவன் அடமகனே!
கதியுறு காலனன்றோ - இந்தக்
கயமக னெனநினைச் சார்ந்துவிட்டான்?
கொதியுறு முளம் வேண்டா; - நின்றன்
கொள்கையின் படிஅவர் தமைஅழைப்பேன் [17]

என்று பாண்டவர்க்கு அழைப்பு விடுக்க ஒருப்படுகின்றான்.

திருதராட்டிரன் இந்திரப் பிரஸ்தம் செல்ல விதுரனுக்கு விடை கொடுக்கும்போது பாண்டவர்க்கு அழைப்பு தரும் பேச்சினிடையில் சகுனியின் சொற்கேட்டுத் துரியோதனன் செய்யப் போகும் சதியினையும் குறிப்பிடுமாறு பணிக் கின்றான். இதனைக் கேட்ட விதுரன் பெருந்துயர் கொண்டு,

'போச்சுது! போச்சுது பாரத நாடு!
போச்சுது நல்லறம்! போச்சுது வேதம்!
ஆச்சரி யக்கொடுங் கோலங்கள் காண்போம்!
ஐய இதனைத் தடுத்தல் அரிதோ?[18]

என்று ஏங்கிக் கூறும் போது,

'சென்று வருகுதி, தம்பி, இனிமேல்
சிந்தனை ஏதும் இதிற்செய மாட்டேன்!
வென்று படுத்தனன் வெவ்விதி என்னை!
மேலை விளைவுகள் நீஅறி யாயோ?

17. பா. ச. 1. 14: 108

அன்று விதித்ததை இன்று தடுத்தல்
யார்க்கெளி' தென்று[19]

விதியின்மீது பாரம் போட்டு மெய்சோர்ந்து விழுகின்றான்.

(2) தருமன் அத்தினபுரம் செல்ல ஒருப்படுகின்றான். ஆயின், காமனும் சாமனும் ஒத்த வீமனும் வில்விசயனும் தமையன் பேச்சைத் தட்டிப் பணிவொடு பேசுகின்றனர்; அவர்கள் அழைப்பை ஏற்க ஒருப்படவில்லை. அப்போது பல நியாயங்களை எடுத்துரைக்கும் தருமன் 'எல்லாம் விதியின்படி நடக்கும்' என்றும், கடமையை ஆற்றுவது தம் கடன் என்றும் கூறுகின்றான்.

இங்கிவை யாவும் தவறிலா - விதி
ஏற்று நடக்குஞ் செயல்களாம்;—முடி
வெங்கணு மின்றி எவற்றினும் - என்றும்
ஏறி இடையின்றிச் செல்வதாம் - ஒரு
சங்கிலி யொக்கும் விதிகண்டீர் - வெறுஞ்
சாத்திர மன்றிது சத்தியம்[20]

என்ற தருமன் வாக்கில் விதியின் செயல் விளக்கப் பெறுவதைக் காணலாம்.

(3) பாண்டவர் அத்தினபுரத்திற்குப் பயணப்படுகின்றனர். இப்போது கவிப்பரிவு (Poetic sympathy) செயற்படுகின்றது. இது கவிஞரின் தற் கூற்றாக, விதியைப் பற்றிய விளக்கமாக, வெளிப்படுகின்றது. இந்தப் பயணத்தை நெடுங்கரத்து விதி காட்டும் நெறி' என்றே குறிப்பிடுகின்றார் கவிஞர். மேலும், விதியின் திருவிளையாடல்களை,

---

18. ஷை. 1. 15: 113
19. ஷை. 1. 15: 114
20. ஷை. 1. 24: 139

நரிவகுத்த வலையினிலே தெரிந்து சிங்கம்
நழுவி விழும்; சிற்றெறும்பால் யானை சாகும்;
வரிவகுத்த உடற்புலியைப் புழுவும் கொல்லும்;
வருங்கால முணர்வோரும் மயங்கி நிற்பார்;
கிரிவகுத்த ஓடையிலே மிதந்து செல்லும்;
கீழ்மேலாம், மேல்கீழாம்; கிழக்கு மேற்காம்;
புரிவகுத்த முந்நூலார் புலையர் தம்மைப்
போற்றிடுவார், விதிவகுத்த போல்தினன்றே.[21]

என்று தமக்கே உரியமுறையில் மிகுந்த அழகாகக் காட்டுவர். 'கவறாடலின் கொடுமை'யை விளக்கும்போது விதியின் வலி கவிக் கூற்றாக வருவதை எடுத்துக் காட்டியுள்ளோம்,

(4) நாட்டினைப் பணயம் வைக்குமாறு தருமனிடம் சகுனி சொல்லும்போது, விதுரன் வெகுண்டெழுந்து அறவுரை கூறுவதைக் கவறாடலின் கொடுமையை விளக்கும் போது குறிப்பிட்டோம். இதனைக் கேட்ட சுயோதனன் விதுரனைப் பலவாறு ஏசுகின்றான். அதற்கு மறுமாற்றம் உரைக்கும்போது தான் 'விதிவழியை' நன்குணர்ந்ததாகக் குறிப்பிடுகின்றான்.

'விதிவழிநன் குணர்ந்திடினும், பேதையேனயான்
வெள்ளைமன முடைமையினால் மகனேநின்றன்
சதிவழியைத் தடுத்துரைகள் சொல்லப் போந்தேன்.
சரி,சரி,இங் கேதுரைத்துப் பயனொன் றில்லை,
மதிவழியே செல்லுக'[22]

என்று வாய்மூடி மௌனியாகும்போது இதனை அறிகின்றோம்.

---

21. ஷை. 1. 26: 146
22. ஷை. 3. 42: 217

(5) தலைவிரிகோலமாக அவைக்கு இழுத்து வரப் பெற்ற திரௌபதியின் அவல நிலையைக் கண்ட வீமனின் வெஞ்சினம் கரை புரண்டோடுகின்றது 'கதிரைவைத் திழந்தான் கையை எரித்திட' 'எரிதழல் கொண்டு வா' என்று சகாதேவனைப் பணிக்கும்போது பார்த்தன் குறுக் கிட்டுப் பேசும் பேச்சில் 'விதியின் வலி' சுட்டப் பெறுகின்றது.

'தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்;
தருமம் மறுபடி வெல்லும் எனுமியற்கை
மருமத்தை நம்மாலே உலகம் கற்கும்
வழிதேடி விதிஇந்தச் செய்கை செய்தான்;
கருமத்தை மேன்மேலும் காண்போம்; இன்று
கட்டுண்டோம, பொறுத்திருப்போம்; காலம் மாறும்.
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்,
தனுஉண்டு காண்டிவம் அதன்பேர்'[23]

என்பதில் 'விதியின் சதி'யைக் காட்டுகின்றார் கவிஞர்.

**பெண்பாவம் பொல்லாதது:** காவியத்தின் பெருவிசை இது. இந்தத் 'தெய்விக மலர்க் கொடி'யை அரசவையில் அவ மானம் செய்ததை யார்தான் பொறுக்க முடியும்? இவள் பொருட்டுதானே கண்ணன் பாண்டவர்கள் ஐவரையும் கண் இமைபோல் நின்று காத்தான்? அரசவையில் இவர் நீதி கேட்டழுத குரல் கல் நெஞ்சத்தையும் உருக்கும் தன்மையது;

......விதியோ கணவரே!
அம்மி மிதித்தே அருந்ததியைக் காட்டியெனை
வேதச் சுடர்த்தீமுன் வேண்டி மணஞ்செய்து
பாதகர்முன் இந்நாள் பரிசழிதல் காண்பீரோ?

பேயரசு செய்தால், பிணந்தின்னும் சாத்திரங்கள்!

---

23. ஷை. 5. 67: 283

பெண்டிர் தமையுடையீர் பெண்க ளுடன்பிறந்தீர்!
பெண்பாவ மன்றோ பெரியவசை கொள்ளீரோ?
கண்பார்க்க வேண்டும்.

என்றெல்லாம் ஓலமிட்டு 'வம்புமலர்க் கூந்தல் மண்மேல் புரண்டுவிழ, அம்பு பட்டமான்போல் அழுது துடிதுடிக் கின்றாள்.' தீயவர் அவையில் ஒருவரும் அவளுக்குத் துணை செய்தாரிலர்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கு மஞ்சாத நெறிகளும்
நிமிர்ந்த ஞானச் செருக்கு மிருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்[24]

இங்ஙனம் பெண்ணினத்திற்கு வேண்டிய ஆண்மைக் கூறு களையெல்லாம் கொண்டவளாதலால், திரௌபதி நிலைமை களைச் சமாளித்துக் கொள்ளுகின்றாள். கண்ணனின் துணை இவளுக்கிருந்ததால் இவளால் தப்பித்துக் கொள்ள முடி கின்றது. இந்தப் பெண் பாவம்தான் பாரதப் போருக்கு வித்திட்டது; கௌரவர்களும் பூண்டோடு அழிந்துபட்டனர். இங்ஙனம் காவியம் உணர்த்தும் உண்மைகள் பல வாகும்.

தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரை கவிதையின் சிறப்புக்கு ஓசை, சொல்லடுக்கு முதலியவை இன்றியமை யாதவையாக இருப்பினும் கவிதையின் பொருளமைப்பே முக்கியமாகக் கொள்ளப்பெறுகின்றது. தமிழர்கள் இன்பம் என்ற சொல்லுக்குக் கண்ட பொருள் சற்று ஆழமுடையது. நிலைபேறுடைய இன்பத்தைத் தருவது எதுவாயினும் அஃது உண்மையும் ஆழமும் உடையதாயிருத்தல் வேண்டும் என்பது அவர்கள் கொள்கை. மேனாட்டுத் திறனாய்வாளர்களிலும்

24: புதுமைப் பெண் - 7.

சிலர் இக் கொள்கையை யுடையவர்கள். ''கவிதையை ஆராயுங்கால், நம்முடைய முதற் கவனம் கவிஞன்பால் செல்ல வேண்டும்; அவனுடைய ஆளுமையிலும் அவன்; உலகைப் பற்றிக் கொண்டுள்ள மனப்பான்மையிலும் செல்ல வேண்டும்; வாழ்க்கையை எவ்வாறு நோக்கி விளக்கந் தருகின்றான் என்பதைக் கவனித்தல் வேண்டும். இது வெளிப்படையாககவும் இருக்கலாம்; குறிப்பாகவும் இத னைப் பெறவைக்கலாம். கலை, வடிவம், வரலாறு போன்ற செய்திகளில் நாம் எவ்வளவு ஆழ்ந்திருந்த போதிலும், மேற் கூறிய கவிதையின் முதனிலைக் கூறுகள் எவ்விதத்திலும் நம் பார்வையினின்று நழுவாமல் காக்க வேண்டும்''[25] என்று ஆட்சன் கூறுவதை ஈண்டுச் சிந்திக்க வேண்டும். இது கருதியே கவிதையைப் பற்றிக் கூறவந்த தொல்காப்பியரும்,

'இழுமென் மொழியால் விழுமியது நுவலல்'[26]

என்று கூறிப் போனார். தமிழ்க் கவிதைகள் பெரும்பாலும் அறங் கூறும் இயல்பும் கவிதை இயல்பும் கொண்டே திகழ் கின்றன.

---

25. Hud son, W.H. An *Introdnction to the Study of Literature* - பக்.95.
26. செய்யுளி. நூற் - 230 (இளம்)

பின்னிணைப்பு-1

# பயன்பட்ட நூல்கள்

## (அ). தமிழ் நூல்கள்


1. சுப்பிரமணிய பாரதியார்: பாரதியார் கவிதைகள் (எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை, 6, பிலிப்ஸ் தெரு, சென்னை-600 001)-(1962)

2. சுப்பிரமணிய பாரதியார்: பாரதியார் கவிதைகள் (வானவில் பிரசுரம், 16, இரண்டாவது குறுக்குத் தெரு, மேற்கு சி ஐ.டி. நகர் சென்னை-600 086)-(1980)

3. சுப்பிரமணிய அய்யர், ஏ.வி: தற்காலத் தமிழ் இலக்கியம் (விவரம் இல்லை)-1942)

4. சுப்பு ரெட்டியார், ந. காலமும் கவிஞர்களும் (பாரதியின் பாஞ்சாலி சபதம் என்ற கட்டுரை); (எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை, 6 , பிலிப்ஸ் தெரு, சென்னை 600 001)

5. தண்டியார்: தண்டியலங்காரம் உரை: (சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், பிரகாசம் சாலை, சென்னை-600 001)

6. திருவள்ளுவர்: திருக்குறள்-பரிமேலழகர் உரை (சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-600-001)

7. தேசிக விநாயகம் பிள்ளை, சி: மலரும் மாலையும் (புதுமைப் பதிப்பகம், காரைக்குடி-1) மூன்றாம் பதிப்பு-(1944)

8. பாரதியார் பல்கலைக் கழகம்: பாரதியாரின் புலமை ஒளி (கட்டுரைத் தொகுப்பு) 15, கட்டுரைகள், (பதிவாளர், பாரதியார் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்-641 041)-(1982)

9. புருடோத்தம நாயுடு, பு.ரா: ஸ்ரீ வசன பூஷணம் மணவாள மாமுனிகள் வியாக்கியானத் தமிழாக்கம் (தி.கி நாராயணசாமி நாயுடு, 2, சீதாராம நகர், கடலூர்-1)

10. வில்லி புத்தூராழ்வார்: வில்லி பாரதம் (மர்ரே ராஜம் பதிப்பு)

(ஆ) ஆங்கில நூல்கள்

11. Hudson, W,H: *An Introduction to the study of Literature*

12. Lascelles Abercrombia: *The Epic*

13. Meenakshiaundaram, K: *A Study of the Poetical Works of Subramania Bharathi* (M/S. Paari Nilayam, Prakasam Saalai, Madras-600 001) -(1965)

பின்னிணைப்பு—2

## பொருட் குறிப்பு அகராதி

[எண்: பக்க எண்]


**அ**

அகில நோக்கு 104
அதர்மக்குழப்பம் 103
அபர்குரோம்பி4
அரிஸ்டாட்டில் 33
அருச்சுனன் 82
அல்லி அரசாணி மாலை 7

**ஆ**

ஆதிப் பரம்பொருள் 65, 902
ஆந்திரப் பல்கலைக்கழகம் 41
'ஆமைவேகம்' 37
ஆளுடைய அடிகள் அருள் மாலை 132
ஆனந்த வர்த்தனர் 4

**இ**

இதிகாசக் காப்பியம் 3
இந்திரப் பிரத்தம் 18
இந்திரவிழா 100
இயக்கநிலை உருக்காட்சிகள் 126
இரட்சண்ய யாத்திரிகம் 8
இரண்டாம் ரிச்சர்டு 11
இராக்கொட்டு வேகம் 55
இராமலிங்க அடிகள் 7
இராமாயணம் 33
இருசுடர் தோற்றம் 17
இலியத் 9
இளங்கோவடிகள் 40, 43, 100
இஷ்டதெய்வம் 2

**உ**

உச்சிநிலை 38
உருக்காட்சிகள் 108
இயக்கநிலை 126
கட்புல 120
கலவைநிலை 127
சுவைப்புல 123
செவிப்புல 122
தொடுபுல 125
நாற்றப்புல 121
நொப்புல 125

**ஊ**

ஊழின் பெருவலி 140

**ஏ**

ஏணி ஏற்றம் 7

**ஐ**

ஐந்தாம் ஹென்றி 11
'ஐவர் பூவை' 41

**க**

கட்புல உருக்காட்சிகள் 108
கடைக்குட்டி 98
கண்ணகி 40
கம்பராமாயணம் 8,9,10
கருணம் 19
கர்ணன் 92
கலவை நிலை உருக்காட்சிகள் 127
கலிங்கத்துப்பரணி 8
கவறாடலின் கொடுமை 136
கவிஞனின் உரிமம் 132
கவுந்தியடிகள் 44

**கா**

காப்பியங்களில் யாப்பு 12
காப்பிய நடை 105
'காவடிச் சிந்து' 61
காவியப் பண்பு 133

கு

குந்திதேவி 45
குறள் 54, 68, 71

ச

சகாதேவன் 98
'சம்பு' 13
சகுனி 85

சா

சாத்தானின் வீழ்ச்சி 11
சாத்தான் 13
சாலினி 43

சி

சிந்தாமணி 8
சி. ஆர். ரெட்டி 41

சீ

சீதை 42
சீறாப்புராணம் 8

சு

சுப்பிரமணிய சாஸ்திரியார் வி. எச் 4
சுயம்புவான இலக்கியச்சுவை 109
சுயோதனன் 61

செ

செவிப்புல உருக்காட்சிகள் 122

த

தண்டியலங்காரம் 11
தண்டியார் 13, 18, 19
தருமன் 66
த்வன்யாலோகம் 3

து

துச்சாதனன் 90

தெ

தெய்விகக் கூறுகள் 100

தே

தேசிக விநாயகம்பிள்ளை சி 29
தேசியக் காப்பியங்கள் 9
தேம்பாவணி 8
தேர்ப்பாகன் 47
தேவந்தி 100

தொ

தொடுபுல உருக்காட்சிகள் 125
தொல்காப்பியம் 8, 108
'தொன்னம்' 13

ந

நல்ல தங்காள் கதை 7
நம்மாழ்வார் 2
நன்னூலார் 4, 132

நா

நாரதர் 34
நாலாம் ஹென்றி 11
நால்வர் நான்மணிமாலை 129
நாள் அங்காடி பூதம் 100
நாற்றப்புல உருக்காட்சிகள் 124

நி

நிகழ்ச்சிகளின் புணர்ப்பு 29
நிபுலன் ஜெனலத் 10

நொ

நொண்டிச் சிந்து 6
நொப்புல உருக் காட்சிகள் 125

ப

பஞ்சமி 42
பட்டினத்தார் பாடல்கள் 7
பத்தினித் தெய்வம் 40
பவளக்கொடி மாலை 7

பா

பாக்கள் 105
பாரதப்போர் 22
பாவினங்கள் 100

பி

'பிசுநாறி' 116

**பு**

'புதுமைப் பெண்' 49

**பெ**

பெண் பாவம் 144
பெரிய புராணம் 8, 9

**பே**

பேராசிரியர் 108

**பொ**

பொறாமையின்கேடு 134

**ம**

மஞ்சன் 22
மணிமேகலை 39

**மா**

மாதரி 44

**மி**

மில்ட்டன் 11, 13

**மு**

முன்னிலைப் புறமொழி 55
முஸ்ஸோலினி 59

**மெ**

மெக்கியவல்லி 59

**ரெ**

ரெட்டி, சி. ஆர். 43

**ரௌ**

ரௌத்திரம் 19

**வ**

'வணங்காமுடி' 51
வத்திவைப்பு 22
வள்ளுவர் 54

**வி**

'விருந்து' 108
வில்லி 31
வில்லி பாரதம் 6, 23, 31, 63
விவிலியம் 31

**வீ**

வீடுமன் 96
வீமன் 77
வீரம் 19

**வடமொழி**

ஜூலியஸ் சீஸர் 11
ஷேக்ஸ்பியர் 11
ஹிட்லர் 59
ஹோமர் 13
ஸ்ரீராமாயணம் 39
ஸ்ரீவசன பூஷணம் 39



65 அகவை நிரம்பிய இந் நூலாசிரியர் பி.எஸ்சி.எல்.டி., வித்துவான், பி. ஏ., எம். ஏ., பிஎச்.டி. பட்டங்கள் பெற்றவர். ஒன்பதாண்டுகள் துறையூர் உயர் நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகவும் (1941—50), பத்து ஆண்டுகள் காரைக்குடி அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் (1950—60) பதினேழு ஆண்டுகள் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவராகவும், பேராசிரியராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர். 1978இல் சென்னையில் குடியேறி பதினைந்து மாதங்கள் (1978 — பிப்ரவரி — 1979 ஜூன்) கலைக் களஞ்சியத் தலைமைப் பதிப்பாசிரியராகப் பணியாற்றியவர். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வார் தத்துவத்தை ஆய்ந்து டாக்டர் பட்டம் பெற்றவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டவர். தவிர ஆசிரியம் (5) இலக்கியம் (16), சமயம் (8), திறனாய்வு (9), அறிவியல் (13), ஆராய்ச்சி (4)—என்று 55 நூல்களின் ஆசிரியர். இவர்தம் அறிவியல் நூல்களில் இரண்டு தமிழக அரசுப் பரிசுகளும் ஒன்று சென்னைப் பல்கலைக் கழகப் பரிசும் பெற்றன. இனிமை, எளிமை, தெளிவு இவை இவர்தம் நூல்களின் தனிச் சிறப்பியல்புகளாகும்.